

# முஸ்லிம் உலகிற்கு 30 நாட்கள் ஜெபம்

## ஜூலை 9 -ஆகஸ்ட் 7, 2013

{முஸ்லிம் உலகிற்கு எப்படியாக ஜெபிக்க வேண்டும் என்பதற்கு வேண்டிய தகவல்கள் தரவுகள் இன்னமும் அறிந்திட இத்தினக் கையேட்டை பாவிக்க}

**விசேட பதிப்பு**



# 1993–2013

## வரையான இவ் விசேட தொகுப்புக்கு வரவேற்கிறோம்.

## இப்பதிப்பில்


20 வருட முன்னேற்றம் 2
எமது நோக்கம் 4
30 நாள் ஆரம்பம் 5
பிரபல்யமான வாக்கியங்கள் 9
மற்றவர்கள் என்ன கூறுகிறார்கள் 14
உதாரண வாக்கியங்கள் 20
சாட்சி: மாகாண தூதுவர் 33


**20 வருடங்களுக்கு** முன்பு 1.1 பில்லியன் இஸ்லாமியர் உலகத்திலே காணப்பட்டனர். அனேக மேற்கத்திய நாடுகளில் இஸ்லாம் ஒரு வெளிநாட்டு மதமாக சற்று அறியப்பட்டது கிறிஸ்துவுக்குள்ளான தங்களது விசுவாசத்தை இஸ்லாமியருடன் பகிர்ந்துகொள்ள சபை எடுத்த முயற்சிகள் மிகவும் கடினமானதாக காணப்பட்டது.

இப்பிரதி 1993ல் வெளியிடப்பட்ட முதல் வெளியீட்டில் உலக முஸ்லிம்கள் மத்தியில் பணிபுரிவதற்கான கிறிஸ்தவர்களின் ஆர்வத்தினால் குறித்த செய்திகள் முக்கிய இடத்தை வகித்தன. 20 வருடங்களாக தொடரும் இவ்வெளியீட்டில் நாம் குறை நிறைவுகளை சீர்செய்துள்ளோம். இதன் மூலமாய் எமது ஜெபத்தில் ஏற்பட்ட அற்புதங்களை விவரித்துள்ளோம். உதாரணமாய் கூறினால் அநேக முஸ்லிம்கள் கிறிஸ்துவிடம் வந்துள்ளதை நாம் அறிகின்றோம். நாடுகள் சுவிசேஷத்திற்காக திறக்கப்பட்டுள்ளன, சபைகள் நிறுவப்பட்டுள்ளன. தேவ வசனமானது முஸ்லிம்கள் மத்தியில் தூவப்பட்டு விதைகளாக விதைக்கப் பட்டுள்ளன. மிகப்பெரும் சவால்கள் இதினிமித்தம் எமக்கேற்பட்டது. ஏனெனில் நாம் கிறிஸ்துவின் சரீரமாய் இருப்பதினாலேயே இச்சவால்கள் எமக்கு ஏற்படுகின்றன. ஆனாலும் இக்காரியத்தில் இயேசு எங்கள் முன்னின்று மறைந்துவிட மாட்டார். ஆகவே நாம் எமது ஜெபங்களிலும், மன்றாட்டுக்களிலும், கொடுத்தலின் மூலமாகவும் பரலோகத்திலிருந்து வரப்போகும் மிகப்பெரிய பரிசை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இதுவே உலகிலுள்ள தேசங்களுக்கு நம்பிக்கை தருவதாகும்.

இப்பதிப்பிலுள்ள நிகழ்வுகளை வாசித்து முஸ்லிம்கள் மத்தியில் தேவனுடைய சாட்சிகளாய் விளங்குவீர்கள். சாட்சிகளை காண்பீர்கள். இத்தோடு வருகின்ற ஜெப விண்ணப்பங்களானது எமது ஊழியர்களால் தொகுக்கப்பட்ட போதும் அவை நிகழ்கால யாதார்த்தத்தை வெளிப்படுத்துகின்றனவாக அமைந்துள்ளன. சிறந்த அறிக்கைகள் உங்களது சிறப்பான ஜெபங்களால் அத்திவாரமாய்க் கொண்டு அமைந்துள்ளது. உங்களது ஒத்துழைப்புகளுக்கு நன்றி கூறுகிறோம். அதை நீங்கள் இப்பிரதியை பயன்படுத்துகையில் கண்டுகொள்வீர்கள்.

எல்லா மகிமையும் தேவனுக்கே !
**பதிப்பாளர்கள்**




2012-103 30 Days Booklet.indd 1 5/3/13 15:32:48

# 30 நாட்கள் ஜெபம் - 20 வருட முன்னேற்றம்

20 வருடங்களுக்கு முன்பு 1.1 பில்லியன் இஸ்லாமியர் உலகத்திலே காணப்பட்டனர். அநேக மேற்கத்திய நாடுகளில் இஸ்லாம் ஒரு வெளிநாட்டு மதமாக சற்று அறியப்பட்டது கிறிஸ்துவுக்குள்ளான தங்களது விசுவாசத்தை இஸ்லாமியருடன் பகிர்ந்துகொள்ள சபை எடுத்த முயற்சிகள் மிகவும் கடினமானதாக காணப்பட்டது.



20 வருடங்களுக்கு முன்பாக ஒரு சில ஊழிய தலைவர்கள் எகிப்திலே ஒன்று கூடி இஸ்லாமிய உலகத்திற்காக ஜெபிக்க ஆரம்பித்தனர். அவர்கள் ஜெபிக்கும்போது அவர்கள் தங்களது அவதானத்தை ஆண்டவருடைய இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களோடு இஸ்லாமிய உலகத்தை நோக்கி பார்க்கும்படியாக சவாலிடப்பட்டனர். அதுவே இஸ்லாமிய உலகினருக்காக 30 நாட்கள் ஜெபம் என்பது உருவாக்கப்பட்டது.

தற்போது இருபது வருடங்களுக்கு முன்பாக வேலை செய்ததை காட்டிலும் 10 மடங்கு அதிகமான குழுக்கள் இஸ்லாமிய உலகிலே வேலைசெய்வதோடு, இயேசு கிறிஸ்துவை குறித்து சொல்வதற்கு முன்பு வெட்கப்பட்டவர்கள் தற்போது இஸ்லாமியரிடையே நன்கு அறியப் பட்டுள்ளனர். அனைவருக்கும் தங்களது விசுவாசத்தின்படியாக தெரிவுசெய்யும் சந்தர்ப்பம் உள்ளது என நம்புவதோடு, உலகமெங்கும் உள்ள இஸ்லாமிய சமூகங்களிலே இயேசு கிறிஸ்துவின் அன்பை அர்த்தப்படுத்த புதிய காரியங்களை கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள அங்கத்தவர்கள் ஆராய்கிறார்கள்.

இஸ்லாமிய உலகிற்கான முப்பது நாள் ஜெப நிகழ்வானது விசுவாசிகளை கனத்துடனும் அன்புடனும் தங்களது விசுவாசத்தை பகிர்ந்து கொள்வதற்கு போதித்தல் ஊக்கப்படுத்தல் மற்றும் தைரியப்படுத்தல் போன்ற பெரிய பங்கை வகிக்கிறது. வழிகாட்டியானது 38 மொழிகளுக்கும் அதிகமாக விநியோகம் செய்யப்படுவதோடு, ஒவ்வொரு வருடமும் மில்லியன் கணக்கானோர் பங்குபற்றுகின்றனர். 20 வருடங்களுக்கும் மேலாக இப்பனிப்பொழிவு ஜெபம் அடைந்தது என்ன?

கடந்த வருட "ஊழிய எல்லைகள்"இன் ஊழிய அறிக்கையின்படியாக 1997 ஆம் ஆண்டிலே இஸ்லாமிய ஜனக்கூட்டத்தார் மத்தியிலே இரண்டு சபை ஸ்தாபிக்கும் இயக்கங்களை மாத்திரமே காணக்கூடியதாக உள்ளது என்கின்றனர். கடந்த சகாப்தத்தில் அவர்களாலே 25% இஸ்லாமிய ஜனத்தொகையிலே 1000 ஞானஸ்நானம் பெற்றோர் மற்றும் 100 சபைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அவற்றுட் சில பின்வருவனவற்றிலே உள்ளடக்கப்பட்டுள்ளன.

- தென்னாசியாவிலே நடைபெற்ற பெரிய தாக்கம் என்னவென்றால் பெங்காளியர் மத்தியிலே குறைந்தது அரை மில்லியன் இஸ்லாமியர் விசுவாசத்திற்குள் வந்தனர் என்பதாகும்.
- ஈரானிலே, செய்மதி ஒளிபரப்பானது பரந்த அளவிலே பார்ப்பதோடு இரகசிய சபைக்கு ஆயிரக்கணக்கான வீட்டுக்கூட்ட ஐக்கியங்கள் வளரவும் பெலப்படவும் உதவி செய்கிறது.
- வட ஆபிரிக்காவிலே போய் சேராத பழங்குடி மக்கள் மத்தியிலே ஒரு சில இயக்கங்கள் ஸ்தாபிக்கப்பட்ட பின்பு அவர்கள் விசுவாசத்திற்குள் வந்தனர் (4).

சுவிசேஷம் முன்பு போய் சேராத இஸ்லாமிய குழுக்களிடையே போய் சேருவதற்கு தொழில்நுட்ப வளர்ச்சியானது அர்த்தமுள்ளதாயுள்ளது.



2012-103 30 Days Booklet.indd 2 5/3/13 15:32:49

இஸ்லாமிய உலகத்தினுள் செய்மதி ஒளிபரப்பு மற்றும் வானொலி ஊடான ஒலிபரப்புகளின் விளைவாக மில்லியன் அளவிலான இஸ்லா-மியர்கள் கிறிஸ்துவின் செய்திக்கு செவி கொடுத்து அதற்கு பிரதி கிரியை செய்து வருகின்றனர். அரேபிய உலகத்தில் மாத்திரம் SAT7 என்னும் ஒரு ஊழியத்தில் தொடர்ந்து 8.5 மில்லியன் கேட்போர் இருந்து வருகின்றனர்.

இது வார்த்தையை உள்நாட்டிலே காணப் படுகிற அநேக மொழிபெயர்ப்புகளில் விநியோகம் செய்தல் மாற்றீடாக வேத வாக்கியங்களை ஒலி மற்றும் ஒளி நாடாக்கள் விநியோகிக்க கூடிய விதத்தில் இலத்திரனியல் செய்திகள் ஊடாகள் எல்லா இஸ்லாமிய கேட்போருக்கும் பெறக்கூடிய மற்றும் புரியக்கூடிய விதத்திலே செய்திகளை அனுப்பியுள்ளார்கள்.

**அடுத்த 20 ஆண்டுகளுக்கு என்ன?** 2011 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பாடத்திட்டத்தின் அமைவாக, இப்போது முதல் வருகிற 20 ஆண்டுகளில் இஸ்லாமிய சனத்தொகையானது கடந்த 20 ஆண்டுகள் காணப்பட்டதை காட்டிலும் இருமடங்காக காணப்படும் என்றும் உலக சனத்தொகையிலே இஸ்லாமியர் கால் பகுதியினராக காணப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது. கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாக நாம் இந்த வளர்ச்சியை விசுவாசம் மற்றும் அன்பின் இருமடங்காக சந்திப்பது அவசியமாகும். நாம் அதனை செய்வோமா?

30 நாட்கள் ஜெபம் என்னும் அமைப்பை ஆரம்பித்த தலைவர் அதற்கு ஆம் என்று பதிலளித்தார். “இருபது வருடங்களுக்கு முன்பாக நாம் இப்படியான ஒரு வளர்ச்சியை எதிர்பார்க்கவில்லை, ஆனாலும் கடந்த இரண்டு சகாப்தங்களாக இஸ்லாமியர் மத்தியிலே சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட காரணியானது ஜெபத்தினாலே வலிமையாக்கப்பட்டது. இதற்கு குறையாது அடுத்த 20 ஆண்டுகளில் நாம் வளர்ச்சியை எதிர்பார்க்கலாம்”.

**கடந்த இரு தசாப்தங்களாக தொழில்நுட்ப முன்னேற்றங்களால் நற்செய்தியை அறியப்படாத முஸ்லிம்கள் மத்தியில் கொண்டுசெல்வதற்கு தொடர்பு சாதனங்கள் உதவின.**





2012-103 30 Days Booklet.indd 3 5/3/13 15:32:50

# எமது நோக்கம்

**1993 இலிருந்து**
**தைரியப்படுத்துகிறோம்**
**கற்பிக்கிறோம்**
**செயற்படுத்துகிறோம்**



இவ் ஜெப வழிகாட்டியின் நோக்கமானது சர்வ வல்லமையுள்ளவரின் சிங்காசனத்திற்கு முன்பாக இஸ்லாமியருக்காக வேண்டிக்கொள்ள அவன் அல்லது அவளை ஊக்கப்படுத்துவதாகும். இஸ்லாமியர் மத்தியில் ஆண்டவரின் செயன்முறைகள் மற்றும் இஸ்லாமிய உலகத்தை குறித்து சிறந்த தகவல்களை தேடி பெற்றுக்கொள்ளும்படியாக நாம் உங்களை தைரியப்படுத்துவதோடு, உங்களது பகுதியிலுள்ள இஸ்லாமியருடன் நட்புறவை வளர்த்து அதனை மெருகூட்டும்படியாக தைரியப்படுத்துகிறோம்.

வருகிற வாரங்களிலே ஜெபம் செய்யும்போது கூடுமான வரையிலே ஜெபத்திலே வேத வசனங்களை பிரயோகியுங்கள். நீங்கள் தனிமையாகவோ அல்லது குழுவாகவோ ஜெபம் செய்தாலும் இது சத்தியமானதாகும். கையேட்டிலே நாம் வித்தியாசமான வேத ஆதாரங்களை சேர்த்துள்ளோம். இந்த வசனங்களை நீங்கள் தியானித்து ஜெபம் செய்யும் போது ஆண்டவரிடம் உங்களுக்கு உதவி செய்யும்படியாக கேட்கவும். இது ஆண்டவருக்குள்ளாக உங்களது விசுவாசத்தை வளர்ப்பதோடு அவரது வார்த்தையை அடிப்படையாக வைத்து ஜெபம் செய்வதற்கு அறிவுறுத்தல்களை தர முடியும்.

## ரமதான் 1434

நீங்கள் அறிந்த பிரகாரமாக, வருகிற 30 நாட்கள் அவர்களின் மாதமான ரமதான் மாதத்திலே உபவாச காலம் என்று அறிவோம். இக்காலத்திலே ஜெபம் செய்வது விசேஷமாக அனேக கிறிஸ்தவர்களுக்கு இஸ்லாமியரை குறித்து அறிந்துகொள்ள உதவும். ரமதான் மாதத்திலே இஸ்லாமியர் அதிகளவு மதசார்பானவர்களாக அநேகர் கடவுளிடமிருந்து அதிகளவு பதில்களை எதிர்பார்க்கும் காலம் இது என்பதையும் நாம் அறிவோம். கிறிஸ்தவர்களுக்கு இஸ்லாமயருடைய வாழ்வில் ஆண்டவர் பேசி அவர்களோடு செயற்பட வேண்டும் என்று விசேஷமாக ஜெபம் செய்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது, ஆண்டவர் அதனை சரியாக செய்துள்ளார் என அறிந்துகொள்வதற்கு ஒவ்வொரு வருடமும் அநேக சாட்சிகளுக்கு நாம் செவி கொடுக்கிறோம்.

இஸ்லாமிய நாளேட்டின் படியாக இந்த ஆண்டு 1434 ஆம் ஆண்டாகும். 1993 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்படும் இக்கையேட்டில் இது 22வது கையேடாகும். அன்று முதல் 22 தடவைகள் 354 அரை நாட்கள் கொண்ட வருடங்கள் காணப்பட்டுள்ளன. சராசரியாக, ரமதான் ஒவ்வொரு வருடமும் 11 நாட்களுக்கு முன்பாக வருகிறது.

இஸ்லாமிற்கு எதிராக “சர்வதேச 30 நாட்கள்” இஸ்லாமிய ஜனத்தாருக்கு ஆண்டவரின் அன்பை வலியுறுத்துகிறது. ஜெப இயக்கமானது எப்போதும் தாழ்மை, அன்பு, கனம், மற்றும் ஊழியம் தொடர்பான ஆவியை உருவாக்குவதை அடிப்படையாக கொண்டுள்ளது. இஸ்லாமியரை குறித்த விரோத கருத்தை நாம் தக்க வைத்துள்ளோம். அவர்களை மறுக்கவோ அல்லது விமர்சிக்கவோ கூடும். இஸ்லாமிய அவதானத்தை உடைய ஜனங்களை குறித்து நாம் புரிந்துகொண்டுள்ளோம். அதன் முடிவிலே இயேசு கிறிஸ்து “உன்னைப்போல் உன் பிறனையும் நேசிப்பாயாக” என்றார்.

எம்மை குறித்தும், எமது இலக்குகள், எவ்வாறு தாக்கமுள்ள விதத்திலே ஜெபம் செய்வது போன்ற கருத்துகளை பெற்றுக்கொள்வதற்கு www.30-days.net என்னும் இணையதளத்தை சந்தியுங்கள்.



2012-103 30 Days Booklet.indd 4 5/3/13 15:32:51

# நாள் 1

அரேபிய உலகம்

ஜுலை 9
செவ்வாய்கிழமை

1993

1993: "வாட்டர் வார்ஸ் - மத்திய கிழக்கில் வரப்போகும் பிரச்சினைகள்" என்னும் புத்தகத்தை எகிப்திலே பிறந்த அடெல் டார்விஷ் என்பவர் இணை ஆசிரியராக எழுதியுள்ளார்.

## எம் வசந்தத்தை தடுப்பது யார்?



### ஜெப குறிப்புகள்

- சத்தியத்தை பகுத்தறிய அரேபிய உலகத்திலே உள்ள அரசியல் தலைவர்கள் மற்றும் குடிகளின் கண்கள் திறக்கப்பட வேண்டும் என்றும், தைரியமாக அதனை பின்பற்ற வேண்டும்.

- கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகள் குழப்பத்தின் நடுவிலே உள்ள மெய்யான சமாதான தீர்வுகளாக காணப்பட வேண்டும் என்று ஜெபம் செய்யவும் (46 வது சங்கீதம்.)

- தங்களுக்குள் உள்ள விசுவாசத்தை குறித்து புதிய மற்றும் பழைய விசுவாசிகள் தைரியமாக சாட்சி பகிரவும் அதற்கூடாக அநேகர் இயேசு கிறிஸ்துவினுள் காணப்படும் விசுவாசத்திற்குள் பிரவேசிக்க முடியும் என்பதற்காய் ஜெபம் செய்வோம். (1 பேதுரு 3:15)

- அரேபிய உலகத்திலே காணப்படும் விசுவாசிகளின் பாதுகாப்பு, தைரியப்பட மற்றும் மத சுதந்திரத்திற்கான அதிகாரத்திற்காக ஜெபம் செய்வோம்.

# அரேபிய வசந்த காலம் : 2 வருடமும் அதன் பின்பும்

அது மிகவும் மன எழுச்சியின் மத்தியில் ஆரம்பிக்கப்படுகிறது. அது டியூனிசியா தொடங்கி எகிப்து மற்றும் லிபியா வரையில் செல்கிறது. அது சீக்கிரமாக அரேபிய வசந்த காலமாக அறிந்துகொள்ளப்படுகிறது. "அரேபிய உலகம்" வரம்புக்கு மீறிய அரசாங்கங்களின் ஊழல்களாலே வரிக்கப்பட்டு கிழக்கு ஐரேப்பிய முறையான, "சுதந்திர உலக" முறையை குறித்து கனவு காணும் காலமாக காணப்படுமா? வீதிகளிலே ஓடுகிற தண்ணீரைப்போல எதிர்பார்ப்பு கடந்து செல்கிறது.

இரண்டு வருடங்களாக, அந்த எதிர்பார்ப்பின் நதியானது வற்றிப்போய், ஸ்தீரமின்மை மற்றும் பயம் போன்றவை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கு பதிலாக பழைய தலைமைத் துவமானது அதிகளவு அடக்கு முறையினாலே ஏற்படும் அழுத்தம் மற்றும் அதிகளவு பாதுகாப்பின்மை போன்ற விடயங்களை கட்டவிழ்த்துள்ளது. எகிப்திலே இளம் புரட்சியாளர்கள் "யார் எமது புரட்சியை நடத் தினார்கள்?" என்று கேட்டுள்ளனர். சிரியா உள்நாட்டு யுத்தம் என்னும் சக்திக்கு முகங்கொடுக்கிறது மற்றும் யெமன் நாட்டின் பொருளாதாரம் அழிவின் விளிம்பிலே காணப்படுகிறது. வெளியிலிருந்து வர்ணனையாளர்கள் "அரேபிய வசந்தம் வருவதற்கு பதிலாக அரேபிய மாரிகாலம் வந்து விட்டதா?" என்று கேட்கிறார்கள்.

அரேபிய வசந்தத்தின் யதார்த்தமானது, ஊழல் நிறை அரசாங்கத்தை தூக்கியெறிவதற்காக சமுதாயங்கள் யாவும் ஒன்று திரளுவதோடு, அவர்களின் ஜனங்கள் தங்களது எதிர்காலத்திற்காக வித்தியாசமான கனவுகளை சுமந்து செல்வதாகும். அதன் பதிலாக ஒரு குழுவினர் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் கண்டனர். ஆனாலும் இன்னுமொரு குழுவினர் ஷரியாவின் சட்டத்திற்கு அதிகளவு அர்ப்பணிப்பும் கடுமையான இஸ்லாமே தீர்வு என்ற பதிலையும் பெற்றனர். இந்த இரண்டு முறைகளும் அரேபிய உலகத்திலுள்ள வீடுகள் மற்றும் வீதிகளிலே முரண்பாடுகளை ஏற்படுத்துகிறது.

இந்த குழப்பத்தின் மத்தியிலே, இன்னுமொரு சோடி கதைகள் எழுதப்பட்டுள்ளன. ஆண்டவரின் ராஜ்யம் தங்களது தேசங்களுக்குள் வர வேண்டும் என ஒரு புதிய வாஞ்சை மற்றும் அர்ப்பணிப்பு அநேக சமூகத்தினுள் கண்டுபிடிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டு கெய்ரோ நகரத்திலே கிறிஸ்தவ பிரிவுகளிலிருந்து 70,000 கிறிஸ்தவர்கள் தங்களது நாட்டுக்காக ஜெபம் செய்யும்படி ஒன்று கூடினார்கள். இவர்கள் தங்களது அன்பான அயலகத்தாரான இஸ்லாமியருக்கு இந்த ஸ்தீரமற்ற காலத்திலே தங்களது அன்பு கரத்தை தைரியமாக நீட்டுவது அதிகரிப்பதை மற்றவர்கள் கண்டார்கள்.

எல்லைக்கோட்டிலே ஒரு அதிர்ச்சிகரமான செய்தி என்னவென்றால் இஸ்லாமியர் கிறிஸ்துவுக்குள் தங்களது விசுவாசத்திலே வந்துள்ளதோடு உதவி, தைரியப்படுத்தல், மற்றும் சீஷத்துவம் போன்றவற்றிற்காக சேர்ந்து சந்தித்துள்ளனர். எவ்வாறாயினும், தொடர்ந்து இந்த இயக்கங்கள் தங்களது குடும்பம் சமூகம் மற்றும் அரசாங்கங்களினாலே அச்சுறுத்தல்கள் மற்றும் உபத்திரவத்திற்கு அதிகளவு முகங்கொடுக்கின்றனர்.

நாள் 2 | ஜூலை 10 புதன்கிழமை | 1993

திறவுகோல்கள்

2வது உலகப்போரிலே மதங்களின் பாராளுமன்றம் சிக்காகோவிலே நடைபெற்றது.

**இன்று நீங்கள் மிகப்பெரிய குழுவினருடன் ஜெபிக்கின்றீர்கள்**

# இஸ்லாமிய உலகின் சவாலை மேற்கொள்ளல்

புது வருடத்திலே பெரிதாக ஒரு வாக்குறுதியை ஏற்படுத்தி அதனை நிறைவேற்ற முடியாதபடி தோற்றுபோன சந்தர்ப்பங்கள் உங்களுக்கு உள்ளதா? கவலையான 1800 வருடங்களில்: ஒரு வித்தியாசமான சத்தமானது கல்லூரி வளாகத்திலும் மாணவர் கருத்தரங்கிலும் கேட்கப்பட்டது: “இத்தலைமுறையினரின் உலகளாவிய சுவிசேஷ முறை!” 1900 ஆம் ஆண்டுகளிலும் அதற்கு ஒத்த ஒரு குரல் கேட்கப்பட்டது: “2000 ஆம் ஆண்டும் அதன் பின்பும் எல்லா ஜனத்தினரையும் கொண்ட சுவிசேஷம் ஒவ்வொரு நபருக்கும் சுவிசேஷம்” எனும் பிரதான கட்டளையானது இன்னமும் உந்துதல் வழங்கியும் 1900களிலோ 2000 களிலோ இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஆய்வாளர்களின் கணக்கெடுப்பின்படி 1900 களிலே ஏறத்தாழ 900 மில்லியன் பேர் கிறிஸ்துவை காணவில்லை என்றும், 2000 திலே கிறிஸ்தவம் அல்லது சுவிசேஷம் கேளாதவர்களின் எண்ணிக்கையானது இருமடங்காகி 1.8 பில்லியனாக உள்ளது. இன்று அது இரண்டு பில்லியனை தாண்டி இருக்கும். அதிலே பெரும்பாலானோர்கள் இஸ்லாமியராவர்.



பகைமை உணர்வுடைய சத்துருவின் எதிர்ச் சவாலை சமாளித்துக் கொண்டு உலகத்திற்கு நற்செய்தியை கொண்டு வருதல் என்பது அவனுக்கு அவசியமற்றதாகும். எவ்வாறு இந்த சவாலுக்கு நாம் யதார்த்தமாக முகங்கொடுப்பது?

வாக்குத்தத்தங்களை செய்வதற்கு உள்ள சவாலுக்காக நாம் ஜெபம் செய்யாது, அதனை தக்க வைத்துக்கொள்ள முகங்கொடுக்கும் சவாலுக்காக ஜெபம் செய்ய வேண்டும். அதற்காக ஒரு சில நடைமுறை காரியங்கள் காணப்படுகின்றன:

- ஒரு குழுவில் இருத்தல். எல்லைகள் (ஃப்றொன்டியர்) அதன் ஸ்தாபகரான கிரேக் லிவிங்ஸ்டன், ஒரு தடவை எனக்கு “நாம் போகிற குறிப்பிட்ட இடத்தை குறித்து குறைந்தளவு நாம் வேதனைப்பட வேண்டியதோடு அதிகளவு யாருடன் போகிறோம் என்று வேதனைப்பட வேண்டும்” என்றார். ஆபிரிக்க பழமொழி ஒன்று “நீங்கள் வேகமாக போக வேண்டுமானால் தனிமையாக போகவும். நீங்கள் நீண்ட தூரம் போக வேண்டுமானால் சேர்ந்து போகவும்”. என்று கூறியுள்ளது.
- விசுவாசத்தில் பின்தொடரல், எதிர்பார்ப்பும் அன்பும்: இஸ்லாமிய உலகிற்காக இன்று நீங்கள் ஒரு பெரிய குழுவாக ஜெபிக்கிறீர்கள். அர்த்தமுள்ள ஜெபமின்றி அந்த உலகத்தை அடைய முடியாது. ஆனாலும் ஜெபமானது விசுவாசம், எதிர்பார்ப்பு மற்றும் ஆண்டவராலே அன்பு செலுத்தப்பட்ட இஸ்லாமிய உலகத்து ஆண்கள் பெண்கள் மற்றும் பிள்ளைகளை குறித்து அன்புடன் காணப்பட வேண்டும். கிரேக் லிவிங்ஸ்டன் அவர்கள் தான் 5% இஸ்லாமிய உலகத்தினர் கிறிஸ்துவிடம் வர வேண்டும் என ஜெபிப்பதாக கூறினார். ஏன் 5% என்று கேட்டதற்கு? ஆண்டவர் தனக்கு 5% விசுவாசத்தை கொடுத்துள்ளார், ஆகவே அதிலே நான் ஜெபிப்பதோடு அது நடைபெறும் வரை கிரியை செய்வதாக கூறினார்.

பிரதான கட்டளையானது இன்னமும் உந்துதல் வழங்கியும் 1900களிலோ 2000களிலோ இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஆய்வாளர்களின் கணக்கெடுப்பின் படியாக 1900களிலே ஏறத்தாழ 900 மில்லியன் கிறிஸ்துவை காணவில்லை என்றும், 2000 களிலே கிறிஸ்தவம் அல்லது சுவிசேஷம் பெறாதவர்க-ளின் எண்ணிக்கையானது இருமடங்காகி 1.8 பில்லியனாக உள்ளது.

## ஜெப குறிப்புகள்

- இஸ்லாமிய உலகிலே வேலைசெய்கிற குழுக்கள் ஒருவரையொருவர் அன்பு செலுத்துகிறவர்களாக காணப்பட வேண்டும் என்று ஜெபம் செய்யுங்கள். ஏனென்றால், “அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்” (யோவான் 13:35) மற்றும் “பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்” (1 யோவான் 4:18).
- சவால்களை சந்திக்கத்தக்க தாழ்மை மற்றும் இசைவாக்கம் கிடைக்க ஆண்டவருடைய கிருபை கிடைக்கும்படி ஜெபம் செய்யுங்கள், அதுபோல ஆண்டவருடைய திட்டத்தை “கண்கள் காணவும் காதுகள் கேட்கவும்” வேண்டும் (1 கொரிந்தியர் 2:9-16)

**நாள் 3**

**தொழில்நுட்பம்**

ஜுலை 11
வியாழக்கிழமை

**1993** கிறிஸ் நாட்டின் பலவீனமான பொருளாதாரத்தினிமித்தம் ஏற்பட்ட கூக்குரலினாலே மறுபடி தேர்தல் நடைமுறைபடுத்தப்பட்டது.

**{ உலகில் 87 வீதத்தினர் கையடக்க செல்பேசி பாவிப்பதாக கூறுகின்றனர் }**

# அகதிகளின் பிரதான வீதி: ஐரோப்பாவில் அறுக்கப்படும் ஆவிக்குரிய அறுவடை!



ஐரோப்பாவிலே ஆவிக்குரிய அருவடை அறுக்கப் படுகிறது! பதினொரு மில்லியன் ஜனத்தொகையை கொண்ட கிறிஸ் நாட்டிலே ஒரு மில்லியனுக்கும் அதிகமான அகதிகள் சரணடைந்துள்ளனர். அதிலே அநேகமானோர் நமஸ்கரிக்க சுதந்திரமற்ற இஸ்லாமிய ஆதிக்கம் கொண்ட நாடுகளை சேர்ந்தவர்கள். தங்களது சொந்த நாட்டை விட்டு அச்சுறுத்தல் விடுக்கிற மற்றும் அழித்துப்போடுகிற இஸ்லாமிய மதத்தை குறித்து அதைரியப்பட்டு அநேகர் தங்களுடைய வாழ்க்கையை சுவிசேஷத்திற்காக திறந்துள்ளனர்.

வார்த்தையினாலும் கிரியையினாலும் இக்கைதிகளுக்கு உதவிகளை செய்யும்படியாய் விசுவாசிகளின் குழுவினர் 2012 ஆம் ஆண்டு ஜுலை மாதம் எதென்ஸ் நகரிற்கு பயணித்தனர். அவர்கள் அங்கே காணப்பட்ட உள்நாட்டு திருச்சபைகளுடன் சேர்ந்து உணவுகள், சுகாதார பொருட்கள் அத்துடன் கிறிஸ்தவ எழுத்தாக்கங்களும் வெவ்வேறு மொழிகளில் வேதாகமங்கள் மற்றும் அவர்களின் கையடக்க தொலைபேசிகளுக்கான சிப் வகைகளை விநியோகம் செய்தார்கள்.

இந்த சிப்பானது ஆறு மொழிகளிலே இயேசுவின் திரைப்படத்தையும், ஒரு ஒலி வேதாகமம், பாடல்கள் மற்றும் கலாச்சாரத்திற்கு ஏற்ற விதத்திலே இயேசுவை சந்தித்ததான ஜனங்களின் கதைகளை உள்ளடக்கியதாக காணப்பட்டது. அநேக அகதிகளிடம் கையடக்க தொலைபேசிகள் காணப்படுகின்றன. அதாவது அவர்களினாலே Head phones பயன்படுத்த முடியும். ஆதலால் அவர்களின் நாட்டவர்களை கண்டு வேதாகமத்தை வாசிப்பதை குறித்து வேதனைப்பட வேண்டிய அவசியமில்லை. மத்திய ஐரோப்பாவை நோக்கிய தங்களது பயணத்திலே கையடக்க தொலைபேசி களும் தொடர்ந்து கொண்டு செல்ல கூடியவையாகும்.

**மெய்யான இளைப்பாறுதலும் சமாதானமும்.**

அமீரின் பெற்றோர் ஈரான் நாட்டிற்கு போகும் போது அவன் குழந்தையாக காணப்பட்டான். அவன் சிறுவனான போது இணையதளத்திற்கு போய் ஆங்கிலத்தை கற்றுக்கொள்ளும் திறனை பெற்றிருந்தான். இந்த அறையிலே காணப்பட்ட கிறிஸ்தவர்கள் கடவுளைப்பற்றி இவனுடன் பகிர்ந்துகொண்டு அவனுக்காக ஜெபம் செய்தார்கள், அது அவனை ஆழமாக வழிநடத்தியது. தன்னுடைய மூத்த மகனின் பிறப்பு சான்றிதழின் படியாக ஒரு "அகதிகளின் குழந்தை" என்று அமிர் கண்ட பின்பு, அமிர் தன்னுடைய குடும்பத்துடன் சமாதானமாக சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு ஸ்தீரமான இடத்தை கண்டு பிடிக்க வேண்டும் என்று தீர்மானித்துகொண்டான். அவன் தன்னுடைய பயணத்திலே கிறிஸ்தவர்களை சந்தித்த ஸ்தானமான எதன்ஸ் நகரிலே காணப்பட்டான். அவன் அங்கே கிறிஸ்துவுக்குள் விசுவாசத்திலே வந்தான். அமிர் அந்த பயணத்திலே அகதிகளுக்கு சமாதானத்தையும் இளைப்பாறு தலையும் தந்த, இஸ்லாமிய அகதிகளிலே ஒருவராக காணப்பட்டார்

**ஜெப குறிப்புகள்**

☒ பிரதான வீதியிலே காணப்படும் ஆயிரங்கணக்கான அகதிகளுக்காக ஜெபம் செய்யுங்கள். அவர்கள் மெய்யான ஜீவனை கண்டுகொள்ள வேண்டும் என்று கதறுங்கள். (நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்.... யோவான் 14:6).

☒ கிறிஸ்தவர்கள் இந்த அகதிகளுக்கு அன்பு, கனம் மற்றும் உதவிகளை நல்க வேண்டும் என்று ஜெபியுங்கள் (மத்தேயு 25:35: "...... அந்நியனாயிருந்தேன்.....")

☒ இயேசுவை அறிந்துகொண்ட இஸ்லாமிய அகதிகள் அவர்களின் விசுவாசத்திலே சந்தோஷமாக வாழவும் மற்றும் அனேக இஸ்லாமியரை இயேசுவோடு கூட வாழ்வதற்கு அழைக்கும்படியாக ஜெபம் செய்வோம் (யோவான் 13:35 "......... என்னுடைய சீஷர்கள் என்று ....)".



# சங்கீதம் 72

தேவன் பேரிலுள்ள நம்பிக்கையால் நாம் நிலைத்திருக்கிறோம்!

17 அவருடைய நாமம் என்றென்றைக்கும் இருக்கும். சூரியனுள்ள மட்டும் அவருடைய
நாமம் சந்தான பரம்பரையாய் நிலைக்கும். மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள்,
எல்லா ஜாதிகளும் அவரைப் பாக்கியமுடையவர் என்று வாழ்த்துவார்கள்.

18 இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு
ஸ்தோத்திரமுண்டாவதாக. அவரே அதிசயங்களைச் செய்கிறவர்.

19 அவருடைய மகிமைபொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரம்
உண்டாவதாக. பூமிமுழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக.

ஆமென், ஆமென்!



2012-103 30 Days Booklet.indd 8 5/3/13 15:32:59

# பிரபல்ய ஜெப கோட்பாடுகள்:

நினைவிலே வைத்துக்கொள்ளத்தக்க நல்ல ஜெபம் என்னவென்றால் "ஆண்டவரே தேசங்களை ஆசீர்வதிக்க என்னை ஆசீர்வதியும், தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக என்னுடைய எல்லையை விரிவாக்குங்கள், உம்முடைய கரத்தை வையுங்கள், உம்முடைய வழிநடத்தும் ஆவியானவர் என் மீது காணப்பட்டு தீமையிலிருந்து விலக்குவீராக." நீங்கள் இந்த ஜெபத்தையும் அதற்கான ஆண்டவரின் பிரதிகிரியையும் 1 நாளாகமம் 4:9-10 இலே காணலாம்.

ஜெபத்திற்கு நாவை காட்டிலும் இருதயம் அதிகளவு அவசியமாகும்.

"பரலோகத்தின் வல்லமைக்கு கட்டளையிடக்கூடிய பூமியிலுள்ள ஒரு வல்லமையென்றால் அது ஜெபமாகும்" அன்ட்ரூ மரே

பேதுருவை சிறையிலே இருந்து வெளியே கர்த்தருடைய தூதன் அழைத்து வந்தான், ஆனாலும் கர்த்தருடைய தூதனை ஜெபம் கொண்டு வந்தது.

நீங்கள் ஜெபிக்கும்போது புத்தகத்தை திறவுங்கள். ஆண்டவருடைய வார்த்தை உங்களுடைய ஜெபங்களுக்கான ஜீவனும் வல்லமையுமாகும்.

தேசங்களை எமது பாதத்தின் கீழே கொண்டு வர, முதலாவது நாம் எமது முழங்காலை கீழே மடக்க வேண்டும் - பில்லி கிரஹாம்.

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். பிலிப்பியர் 4:6

எம்முடைய வாழ்க்கையிலே நாம் கொடுக்கக்கூடிய ஒரு சிறந்த பரிசுகளில் ஒன்றாக ஆண்டவருடன் நேரம் செலவிடுதலை கூற முடியும்.

ஜெபத்தினூடாக அழைப்பானது எந்த மனுஷனுக்கும் அல்லாது அது ஆண்டவருக்கு கொடுக்கப்படுகிறது.

ஆண்டவருக்கு செவிகொடுக்க நேரமுண்டு, ஜெபிப்பதற்கு உங்களுக்கு நேரமுண்டா?

கிருபாசனத்தண்டையிலே பிரவேசிப்பது கூடாத காரியம்... வெறுங்கையாக வருவதும் கடினமே ... எபிரேயர் 4:16

ஆண்டவர் செயற்பட முன் எமது பரிந்து மன்றாடலை எதிர்பார்க்கிறார்.

ஜெபத்திற்கான ஒரே எல்லையானது ஆண்டவருடைய வாக்குத்தத்தங்களும் அந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கான அவரது திறனாகும், "உன் வாயை விரிவாய்த்திற, நான் அதை நிரப்புவேன்". சங்கீதம் 81:10.

ஜெப கோட்பாடுகள் இன்னும் வேண்டுமா? எமக்கு எழுதுங்கள்
favquotes@30-days.net

எவ்வாறு ஒரு ஜெபம் அளவிடப்படுகிறது?

வீட்டிலே பின்பாக ஜெபத்தை வையுங்கள். பிள்ளைகள் அதனை தங்களுடைய பாடசாலைக்கு கொண்டு செல்வார்கள்.

நாள் 4

வட ஆபிரிக்கா

ஜூலை 12

வெள்ளிக்கிழமை

1993 இலே அல்ஜீரியா இஸ்லாமிய போராளிகளினாலே சேதப்படுத்தப்பட்டதோடு. பெரும்பாலும் எல்லா வெளிநாட்டவர்களும் உள்நாட்டு போரின் நிமித்தம் தங்கள் நாட்டிற்கு போய்விட்டனர்.

**அல்ஜீரிய பிள்ளைகளில் பாடசாலைக்கு தகுதியானவர்கள் பாதியளவிலானோரே**

# சத்தியத்திற்கான பசி - அல்ஜீரிய குழந்தைகளை சந்தித்தல்

அல்ஜீரியாவின் வடபகுதியில் கபிலி என்னும் இடத்திலுள்ள பின்தங்கிய கிராமத்தில் ஒரு பெரிய மலையின் அடிவாரத்திலே ஜோசப் என்னும் சிறு பையன் வளர்க்கப்பட்டான். தினந்தோறும் அவன் பாடசாலையிலே இஸ்லாத்தை கற்று அரேபிய மொழியிலே குரானை கற்றான். அவனது தகப்பன் இயேசுவை விசுவாசிக்க ஆரம்பித்த பின்பும், அவன் ஆண்டவரை குறித்து அதிகளவு செவிகொடுக்க வில்லை. அவனது தகப்பன் அதிகளவு கடினப்பட்டு வேலை செய்ய வேண்டியதாக காணப்பட்டபடியாலே அவராலே ஜோசப்பிற்கு வேதாகம கதைகளை கூற ஒரு நேரம் கிடைக்கவில்லை.

ஜோசேப்பின் எண்ணங்கள் எல்லாம் குழம்பிபோய் விட்டது: பாடசாலையிலே இஸ்லாமை கற்றுக் கொண்டான், ஆனாலும் வீட்டில் அவனது தகப்பன வேதாகமத்திலுள்ள ஆண்டவரை குறித்து கற்றுக் கொடுத்தார். இந்த இரண்டு வழிகளிலும் எது சரியானது மற்றும் யார் ஜீவனுள்ள ஆண்டவரிடம் யார் தன்னை வழிநடத்துவார்கள் என்று ஏங்கினான்.

**சந்தர்ப்பம் தட்டியது**

கோடை காலத்திலே சபைக்கு அருகாமையிலே 50 கிலோமீட்டர் தொலைவிலே ஒரு சிறுவர் பாசறை ஒன்று ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. ஜோசப் இங்கு செல்வதற்கு விரும்பினான். ஆனாலும் இப்பாசறை சபையை சேர்ந்த பிள்ளைகளுக்கு மாத்திரமே அனுமதிக் கப்பட்டது இவன் எந்தவொரு சபைக்கும் சொந்தமான வனாக காணப்படாதபடியால் போக முடியவில்லை. அவராலே அதற்கு பங்குபற்ற முடியாது என்று கூறிவிட்டார்கள். ஆனாலும் பாசறை ஆரம்பிப்பதற்கு ஒரு நாளுக்கு முன்பு, அந்த பாசறையிலே வேலை செய்யும் ஒருவர் இறுதியாக ஜோசப்பிற்கு ஒரு ஸ்தானத்தை பெற்றுகொடுத்தார். ஜோசப் மிகவும் தைரியப்பட்டான்!!

ஜோசப் முழுமையாக சந்தோஷப்பட்டதோடு அதன் மத்தியிலும் தன்னுடைய இருதய ஆழத்திலே இந்த இரண்டு வழிகளிலே எது சரியானது என்ற கேள்வி காணப்பட்டது. பாசறையின் கடைசி நாளிலே ஜோசேப்பை சேர்க்க வேண்டும் என்று எண்ணிய தலைவன் அவனோடு பேச ஆரம்பித்தார். இறுதியாக, ஜோசேப்பு தன்னுடைய கேள்விகளை கேட்க ஒரு சந்தர்ப்பத்தை பெற்றதோடு தன்னுடைய வாஞ்சையை பகிர்ந்துகொள்ள ஆரம்பித்தான்.

அப்பேச்சினூடாக, யோசேப்பு ஆண்டவருடைய அன்பை குறித்தும் எம்முடைய பாவங்களைவிட்டு மனந்திரும்பி அவரை பின்பற்றும்படியான இயேசு கிறிஸ்துவின் செய்தியை குறித்தும் கற்றுகொண்டான். இயேசுவை உங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா என்று கேட்டபோது ஜோசப் “ஆம்” என்று பதிலளித்ததோடு அவன் அந்த ஊழியனோடு சேர்ந்து ஜெபம் செய்தான், இறுதியாக தன்னுடைய கேள்விக்கு ஒரு சமாதானம் அவனுக்கு ஏற்பட்டது.



**ஜெப குறிப்புகள்**

- இயேசு கிறிஸ்துவை குறித்து அறிந்துகொள்ளத்தக்க சந்தர்ப்பத்தை கபிலி மற்றும் அல்ஜீரியா முழுவதுமாய் காணப்படும் பிள்ளைகள் பெறவேண்டும் என்று ஜெபம் செய்யுங்கள். (லூக்கா 18:16).
- இயேசுவை விசுவாசிக்கிற பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள். அவர்கள் விசுவாசம் வளர்வதோடு மற்றவர்களுக்கு ஆண்டவரை பற்றி கூறத்தக்க தைரியத்தை அவர்கள் பெற வேண்டும் என்று ஜெபியுங்கள் (மாற்கு 9:36-37).
- அல்ஜீரியாவிலே உபத்திரவப்படுகிற கிறிஸ்தவர்களை ஆண்டவர் பாதுகாக்க வேண்டும் என்று ஜெபம் செய்வோம். (மத் 5:10)

# நாள் 5

**தென்மத்திய ஆசியா**

ஜுலை 13
சனிக்கிழமை

1993 வட வங்காளதேசத்தில் ஏற்பட்ட பாரிய வெள்ளப்பெருக்கால் ஏறத்தாழ 3 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டனர்.



**ஒரு வீட்டில் ஒன்றாக வாழும் 3 தலைமுறை**

# மாய சில்கெடி: முன்னிருந்த இன்றுள்ள வங்காளதேச மாயங்கள்

சிலித்தாரின் விசுவாசத்திலே இரு வல்லமையான கடந்த காலம் மற்றும் நிகழ்கால தாக்கங்கள் காணப்படுகின்றன.

### கடந்த காலம் (முன்)

800 ஆண்டுகளுக்கு முன்பாக, ஒரு இஸ்லாமிய புனிதரும் அவரை பின்பற்றுகிற 360 பேர் தற்போது இந்தியாவின் அண்மித்த எல்லையை நோக்கி விரிவாக்கியுள்ள மற்றும் வங்காள தேசத்தின் வட பகுதி எல்லையை நோக்கி சென்றுள்ள சில்கட் என்னும் இடத்திற்கு வந்தனர். அப்போது ஆளுகையிலே காணப்பட்ட இந்து மன்னனை இஸ்லாமியர் மாயமான வல்லமைகளி னாலே தோற்கடித்தனர். அதன் பின்பு வந்த நூற்றாண்டுகளிலே இஸ்லாம் சில்கட்டிலிருந்து வங்காளத்தின் ஏனைய பகுதிகளுக்கு பரவி சென்றது. இஸ்லாமின் மீதும் அதனை பின்பற்றுகிறவர்களை குறித்தும் ஒரு உறுதியான விடயம் பரவி செல்கிறது சில்கெடி இஸ்லாமியர் தங்களது நிவிர்த்திக்காக வியாழக்கிழமை மாலையிலே தங்களுடைய மரணத்தை எதிர்பார்ப்பது வழக்கமாகும்.

### நிகழ்கால (இன்று)

அண்மைக் காலமாக, பாரம்பரிய இஸ்லாமியத்தின் தாக்கமானது அதிகரித்துள்ளது. தினந்தோறும் பள்ளிவாசலானது ஜெபிக்கிற ஆண்களினாலே நிரம்பி வழிகிறது. இந்த எல்லா எல்லைகளிலும் சில்கெய்த் இஸ்லாமியர் குறைந்தளவானவர்களாக உள்ளனர்.

### பாரிய அவசியம்:

11 மில்லியன் சில்ஹெய்த்தர் இஸ்லாமியர் உலகம் முழுவதும் காணப்படுகின்றனர் அதிலே 7 மில்லியன் பங்காளதேசத்திலும் 2 மில்லியன் இந்தியாவிலும் ஏனைய இரண்டு மில்லியன் ஜனத்தொகையினர் உலகம் முழுவதும் சிதறி வாழ்கின்றனர். அனேக சில்ஹெத்தியரின் குடும்ப அங்கத்தவர்கள் வெளிநாடுகளிலே சிதறி வாழ்கின்றார்கள். இதற்காக அவர்கள் கஷ்டப்பட்டு தங்களது பிள்ளைகளை மேற்கத்திய உலகத்திற்கு விசேடமாக பிரித்தானியா போன்ற நாடுகளுக்கு அனுப்புகிறார்கள். ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவர்கள் தங்களது பிள்ளைகளை அரேபிய நாடுகளுக்கு அனுப்பிவிடுகிறார்கள். இவற்றை துறந்தும் இன்னும் அனேக சில்ஹெய்த்தர்கள் வறுமையிலே வாழ்கிறார்கள்.

### ஜெப குறிப்புகள்

- சில்கெய்த்தர்களுக்கென சீக்கிரத்தில் ஒரு சொந்த வேதாகமம் அதனை வாசிக்கக் கூடிய திறன் கிடைக்கும்படியாக ஜெபம் செய்வோம்.
- சில்கெய்த்தர்கள் புதை குழியிலிருந்து தங்களது விடுதலையின் பெலத்தை பெறாது மரணத்தை ஜெயங்கொண்ட இயேசுவிடமிருந்து பெற வேண்டும் என்று ஜெபம் செய்வோம்.
- வெளிநாடுகளிலே வாழ்கிற சில்கெய்டியினருக்காக ஜெபம் செய்வோம், அவர்கள் அந்நாட்டிலே இயேசு கிறிஸ்துவை குறித்து சொல்லக்கூடிய கிறிஸ்தவர்களை சந்தித்து அவர்களினூடாக இச்செய்தியை தங்களுடைய குடும்பங்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும் என்று ஜெபம் செய்வோம்.

**நாள் 6** | ஜூலை 14 ஞாயிறு | 1993

**சந்திக்கவில்லை**

மலே அதிகாரிகள் வேதாகம வெளியீட்டாளர்களை “அல் கிடாப்” உட்பட 16 வார்த்தைகளை பயன்படுத்த தடைசெய்துள்ளனர்.



# நவீனமயமாகிவரும் மலேசிய மேற்கு கரையான பாஜவ்

மலேசியாவின் வடபகுதியிலே போர்னியோ தீவின் மேற்கு கரையிலே பாஜவ் ஜனத்தினர் சபா என்னும் இடத்திலே வாழ்கிறார்கள். அவர்கள் மத்தியிலே உள்ள ஏறத்தாழ 65,000 வெளிநாட்டவர்கள் “பாஜவ்” என்றும் தங்களுக்குள்ளே அவர்கள் “சாமா” என்றும் அழைக்கப்படுகிறார்கள். அவர்க-ளின் மொழியானது சாபாவின் கிழக்கு கரையிலே மற்றும் சுலாவெசி (இந்துநேசியா) பிலிப்பின்ஸ் நாட்டிலே பேசப்படுகிற சாமா-பாஜவ் மொழியுடன் தொடர்பு பட்டுள்ளது.

### ஜனங்களும் அவர்களின் அடையாளமும்

மேற்கு கரையிரான பாஜவ் வாசிகள் ஆரம்பத்தில் கடலின் நடுவே வாழ்ந்த படகு வாசிகளாவார்கள். தற்போது இவர்கள் பெரும்பாலும் ஈரமான அரிசி வகைகள் மற்றும் மற்றைய தானிய வகைகளை வளர்க்கும் அல்ஜீரிய நாட்டு வாழ்க்கை முறையை கொண்டுள்ளார்கள். மேலும் குதிரைகள் மற்றும் மிருக வளர்ப்பு என்பன சொற்ப அளவிலே நடைபெ-றுகிறது. சிலவேளை அவர்கள் “கிழக்கின் மிருக வளர்ப்பாளர்கள்” என்று அழைக்கப்படுவார்கள். குதிரையின் கர்ப்பத்தை குறித்து அவர்களுக்கு பாரம்பரிய சம்பிரதாயம் ஒன்று காணப்படுகிறது, அதாவது குதிரையோட்டிகளும் குதிரைகளும் வர்ணமயமான அணிகளங்களினாலே அலங்கரித்துக் கொள்வார்கள்.

அவர்கள் தங்களது கலாச்சாரத்தினதும் மொழியி-னதும் பெருமிதத்தை எப்போதும் பெற்றுகொள்வார் -கள். எவ்வாறாயினும் அயல் குழுவினருடனான திருமணங்கள், வேலைவாய்ப்பு தேடும் வாலிபர் அயல் நகரங்களுக்கு போய் குடியமர்தல் என்பன அவர்களின் உரிமையை திருப்திபடுத்த முடியாதுள்ளது. அதுபோல இங்கே வாழும் அநேகர் நவீனத்தை தரித்து கொள்கிறார்கள்.

### சமயமும் சமுதாயமும்

மேற்கு கரையிலே உள்ள பாஜவினர் முன்கூட்டியே இஸ்லாமியராவார்கள். அவர்களின் அடையாளம் மற்றும் சமூக வாழ்க்கையிலே மதம் ஒரு பிரதான இடத்தை வகிக்கிறது. அநேக கிராம நிகழ்ச்சிகள் இஸ்லாமிய பழக்கத்தின்படியும் இஸ்லாமிய நாளேட்டின் படியும் ஒழுங்கமைப்பு செய்யப்பட் -டுள்ளது. குடும்பங்களுக்கு “ஜெபத்தை வாசித்தல்” எனும் மொசோடொவ் அது சமூகத்திற்கான உணவாக காணப்படுகிறது. அதுபோல பங்குபற் றுகிறவர்களுக்கு ஆவிக்குரிய வரப்பிரசாதங்களை யும் இலாபங்களையும் பெற்று தரக்கூடிய செதெக்கா “கொடுத்தல்” என்னும் நிகழ்வு பிரதான இடத்தை வகிக்கிறது. பரிசுத்த உபவாச மாதமான ரமதானை வலியுறுத்துகிற வருடத்தின் கொண்டாட்டத்தின் பண்டிகையாக அழைக்கப்படுகிற அய்டில்.'.பிட்ரி என்றழைக் -கப்படுகிற அனேகராலே ஹரி ரயா புவாசா, அல்லது ஹரி ரயா என்றழைக்கப்படுகிற மலேசியாவின் கொண்டாட்டத்தின் நாள் அனுசரிக்கப்படுகிறது.

இஸ்லாமியரின் தாக்கத்தை ஒரு புறமாக வைத்துவிட்டு, இந்த பாஜவ் கூட்டத்தினரில் அநேகர் தங்களது நம்பிக்கையிலும் பயிற்சியிலும் இறுக்கமாக உள்ளனர். அவர்கள் தங்களை வியாதிக்கோ அல்லது ஏனைய துர் அதிஷ்டங்களுக்கோ ஆளாக்கிவிடும் என்று பயந்து உலகத்திலுள்ள ஆவிகளுக்கு மிகவும் மென்மையாக காணப்படுவார்கள். குரானிலுள்ள வார்த்தைகள் எல்லா பயங்கரமான தீய சக்திகளுக்கும் விரோதமானது என்று நம்புகிறார்கள். சிலர் தங்களையும் மற்றவர்களையும் சுகப்படுத்தும்படியாக ஆவிக்குரிய சக்திகளுக்கு விரோதமாக யுத்தம்செய்ய சேணம்பூட்டி காணப்படுகிறார்கள்.

> **{ மலேசியாவில் சுட்டிக் காட்டுவது பெருவிரலால் ஆட்காட்டி விரலாலல்ல }**

**ஜெப குறிப்புகள்**

- இன்னும் சுவிசேஷம் போய் சேராத இக்கூட்டத்தினர் மத்தியிலே தம்முடைய குமாரனை ஆண்டவர் சொப்பனங்கள் மற்றும் தரிசனங்களினூடாக வெளிப்படுத்த வேண்டும் என்று ஜெபம் செய்வோம்.
- மேற்கு கரையிலே உள்ள பாஜவ் கூட்டத்தினரை போய் சேர அயல் குழுவினர் வம்சத்தினர் உள்ள விசுவாசிகள் மொழி மற்றும் கலாச்சார தடைகளை தகர்த்து சென்றடைய வேண்டும் என்று ஜெபம் செய்வோம்.

# நாள் 7

தென் ஆபிரிக்கா

ஜுலை 15
திங்கட்கிழமை

1993 வாக்காளர்கள் சுதந்திர தேர்தலில் மலாவி காங்கிரஸ் கட்சியை நிராகரித்தார்கள்.

**ஆபிரிக்காவில் சராசரி வயது 19 ஆனால் மலாவியில் 17.3**

# மலாவியின் லிவிங்ஸ்டன் / மடோனாக்கள்?

அதன் தலையெழுத்தை டாக். லிவிங்ஸ்டன் மாற்றினார். இன்றைய கிறிஸ்தவர்கள் மறுபடி இதனை நிகழ்த்துவார்களா?

தென் ஆபிரிக்க நாடுகளில் சம்பியாவின் கிழக்கு பகுதியிலே, உலகத்திலே முடிவற்ற ரீதியில் பசியாலும் நோயினாலும் அல்லல் படுகிற ஏழ்மையான நாடுகள் காணப்படுகின்றன. மலாவி என்னும் நாடானது பொப் இசை பாடகியான மடோனாவினாலே "எழுப்பப்படுகிற மலாவி" என்னும் திக்கற்றோருக்காக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சியின் போது உலகத்தாருடைய அவதானத்தை ஈர்த்துக்கொண்டது.

மலாவி மெய்யாகவே ஒரு அழகான நாடாகும் சுற்றுலாபயணிகள் அந்நாட்டு மக்களின் நட்புறவை கண்டு மிகவும் சந்தோஷப்படுவார்கள். இயற்கையை நேசிப்பவர்கள் பூங்காக்களை கனப்படுத்துவதோடு மலையேறுதல் மற்றும் பீடபூமியிலே தங்கியிருத்தல் போன்ற காரியங்களிலே சந்தோஷப்படுவார்கள். மற்றவர்கள் வித்தியாசமான ஜனக்கூட்டத்தினர் மற்றும் அவர்களின் சுவாரஸ்ய மான வரலாற்றை குறித்து மிகவும் மகிழ் வதோடு, தங்களது சொந்த நாடான மொசாம்பிக் நகரிலிருந்து மலாவிக்கு இடமாற்றம் செய்த ஜாம்பவான்களான உள்நாட்டு ஆளுனர்களான சுல்தான் சன்சிபார் மற்றும் மிகவும் பிரபல்யமான யாவோ போன்றோரின் சரித்திரம் மிகவும் வியக்க வைத்தது.



### பாரிய கொடூரம்

இன்னும், மலாவியிலே வாழ்க்கை முறையானது மிகவும் கடினமானது. சராசரி வாழ்நாள் காலமானது 52 வருடங்களாகும். வளமான எதிர்காலம் உள்ளது என்ற ஒரு சிறிய எதிர்பார்ப்பு மலாவியர்கள் மத்தியிலே இன்னும் காணப் படுகிறது. ஜனங்கள் குடும்பத்தை மையமாக வைத்துள்ளார்கள். எவ்வாறு குடும்ப அங்கத்தவர்களை வித்தியாசமான முறையிலே உபசரிப்பது என்று நன்கு அறிந்தவர்கள். அநேகர் உணவு பயிர்களை வளர்க்க அல்லது புகையிலை தேயிலை அல்லது சீனி போன்றவற்றை வளர்க்க போராடுகிற விவசாயிகள் ஆவார்கள். இந்த கடினமான வேலையிலே பிள்ளைகளும் பங்குபற்றுகிறார்கள்.

### டாக்டர் லிவிங்ஸ்டனின் / கூற்றுப்படி

ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பாக மலாவியிலே முதலாவது இஸ்லாமியர் தங்களது காலடியை பதித்தனர். கிறிஸ்தவ மிஷனரிகள் அங்கு வந்து இறங்கிய போது டாக்டர் டேவிட் லிவிங்ஸ்டன் அங்கு வந்த போது இஸ்லாமியர் தலைமைத்துவத்திலே ஏற்கனவே காணப்பட்டனர். கிறிஸ்தவத்தின் தாக்கத்தை துறந்து ஆவி, மூதாதையர் வழிபாடு, கண்கட்டி வித்தையில் நம்பிக்கை, இரகசிய சமுதாயம் என்பன மலாவியின் தினந்தோறும் வாழ்க்கையிலே பிரதான இடத்தை வகிக்க ஆரம்பித்தது.

எண்ணையினாலே கிடைக்கும் பணத்தை செலவு செய்யக்கூடிய இஸ்லாமிய அமைப்புகள் மலாவியை மாற்றுவதற்காக நிலங்களை வாங்கி நாடு முழுவதும் பள்ளிவாசல்களை இஸ்லாமிய ஸ்தாபனங்களை ஸ்தாபித்தார்கள். தென் ஆபிரிக்க நாடுகள் அனைத்துக்கும் இஸ்லாத்தை கொண்டு செல்லக்கூடிய இலக்கு ஸ்தானமாக மலாவி இஸ்லாமிய மிஷனரிகளின் இலக்காக காணப்பட்டது.

### ஜெப குறிப்புகள்

- அனேக மலாவியர்களுக்கு தகவல்களை கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் பிரதான ஊடகம் வானொலியாக காணப்படுகிறது. மலாவி வானொலி கூட்டுத்தாபனம் அவர்களின் பிரதான ஊடகமாக காணப்படுகிறது. தொலைகாட்சி 1999 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது கிறிஸ்தவ நிகழ்ச்சிகளுக்காக ஜெபம் செய்வோம்.
- சுத்தத்தை கொண்டு வர மருத்துவ ஊழியங்கள், ஜனங்கள் சாதாரணமாக கடினப்படாதபடி நீர் பெற்றுகொள்ள நீர் வசதிகள் மற்றும் இத்திட்டங்கள் ஆண்டவரை பற்றி பேச வேண்டும் என்றும் நடைமுறை திட்டங்களுக்கு வாசல்கள் திறக்கப்பட வேண்டும் என்றும் ஜெபம் செய்வோம்.
- முற்போக்குடைய இஸ்லாமிய கூட்டத்தினருக்காக ஜெபம் செய்வோம். யாவே விசுவாச சபைகள் மற்றும் அன்பான வாசல்கள் திறக்கப்படும்படியாக ஜெபம் செய்வோம்.



# மற்றவர்கள் கூறுவது என்ன?

## சிறு சாட்சிகள்

“மத்திய கிழக்கில் சுவிசேஷம் அறிவிக்கப்படாத ஒவ்வொரு நபருடைய கரத்திலும் வார்த்தையின் ஒரு பகுதியை வைப்பது என்பது மிகவும் கடினமான ஒரு விடயமாகும். இஸ்லாமிய நாடுகளில் அநேகருக்கு வேதாகமம் என்பது புதியதும் புத்துணர்வானதொன்றாகும். ஒரு கிறிஸ்தவ பிண்ணனியோ உலக நோக்கோ காணப்படவில்லை ஆனாலும் செய்தியை அவர்கள் கேட்டதும் அதற்கு தங்களை மாற்றிக்கொள்ளும் விதமானது ஆச்சரியமாக உள்ளது. இவ் விடயமானது பின்தங்கிய இடங்களிலே உள்ள ஏழைகளுக்குள் மிகவும் யதார்த்தமானதாக உள்ளதோடு அனேக திரவிய சம்பன்னங்கள் நிறைந்த பெரிய நகரங்களிலே அது சற்று குறைவாக உள்ளது. சத்தியத்தை ஜனங்கள் கேட்டவுடன் அதனை முழு மனதோடு கட்டியணைத்துக் கொள்ளவும் முழு இருதயத்தோடு ஆண்டவருக்காக வாழவும் தங்களை ஆயத்தம் செய்துகொண்டார்கள். அதனாலேயே புதிய கிறிஸ்தவர்களாகிய நாம் வேதாகமத்தை பெற்றுகொள்ள வாஞ்சிக்கிறோம்...”

“கடந்த வருடங்களை காட்டிலும் இங்கே இந்த மத்திய கிழக்கு நாட்டிலே நாம் அநேகர் கிறிஸ்துவுக்குள் வருகிறதை காண்கிறோம், இவற்றுள் அநேகர் எம்முடைய தலையீடின்றி தானாக இரட்சிக்கப்பட்டுள் -ளார்கள். ஆண்டவர் மத்திய கிழக்கு உலகத்திலே செய்கிற காரியத்தை குறித்து நாம் மிகவும் பிரமிப்புடன் காணப்படுவதோடு அது அதிகளவு ஜெபத்தினாலேயே நடைபெற கூடியதாக உள்ளது, அது எமக்கு பதிலாக ஆண்டவரின் செயற்பாடாகும்.

“என்னுடைய நண்பன் ஒருவர் யோவான் சுவிசேஷத்தை கொடுத்ததோடு, நான் வாசித்த முதலாவது அதிகாரம் மேசியா தேவ ஆட்டுக்குட்டியானவர் என்று வலியுறுத்தப் பட்டு காணப்பட்டது. உடனே இஸ்லாமியத்தை குறித்து காணப்பட்ட ஆத்தும இரகசியம் மூடப்பட்டது. பலியான தேவனுடைய ஆட்டுக் குட்டியானவர் என்பதை குறித்து காண்பிப்ப -தற்காக மில்லியன் கணக்கிலான் மிருகங்கள் பலிசெலுத்தப் பட்டதை நான் அறிந்திருக்கிறேன்.

“என்னுடைய இஸ்லாமிய நண்பன் அண்மையிலே புதிய ஏற்பாட்டை உடனடியாக வாசித்ததோடு உடனே இயேசு கிறிஸ்துவின் வம்சாவளியை குறித்து வாசிக்க ஆர்வம் கொண்டான். நான் அர்த்தப்படுத்திய பகுதியிலே முதலாம் அதிகா -ரத்தின் முதல் 17 வசனங்களும் பெரும்பாலும் மேற்கத்திய உலகின் தாற்பரியங்களை தவிர்த்து -ள்ளது. ஒரு இஸ்லாமியனுக்கு இந்த வசனங்கள் மிகவும் பிரதானமானவை அவர்கள் இந்த குடும்பத்தையும் சரித்திரத்தையும் மத்தேயுவை ஒரு பிரதானியாக காண்பிக்கும்போது அவரது நம்பகத்தன்மை ஆம் என்றுள்ளது - அது மிகவும் உற்சாகமுள்ளது! அவனுக்கு தாவீதின் மற்றும் ஆபிரகாமின் குமாரனாகிய இந்த இயேசு கிறிஸ்து யார் என்று முதலாவது அறிந்துகொள்ள வேண்டிய -தாக காணப்பட்டது. இன்று அவர் “மூடப்பட்ட” இஸ்லாமிய நாடுகளுக்குள் ஊழியத்தை நடாத்த ஒரு பிரதான பங்களிப்பை வழங்கி வருகிறார்.

“நான் விடுதலையாகிவிட்டேன், கிறிஸ்தவத்திற்கும் இஸ்லாமியத்திற்கும் இடையே எவ்வித உடன்பாடும் இல்லை என்பதை நான் கண்டுகொண்டேன். ஆரம்பத்திலே குர் ஆன் மற்றும் ஹதீஸ் இடையே அதிகளவு விதிமுறைகளை பின்பற்ற வேண்டி இருந்தது, ஆனாலும் தற்போது ஆண்டவ ரோடு நெருங்கிய உறவை வைத்துள்ளேன். அது மிகவும் வித்தியாசமானது”.

நாள் 8 | ஜுலை 16 செவ்வாய்

தொழில்நுட்பம்

1993 அப்பள் நியூட்டனாலே அறிமுகம் செய்யப்பட்டது முதல் தொழிநுட்பமான கையடக்க கணணி மற்றும் பல பொருட்கள் வெளிவர வழியமைத்தது.



52 வீத நேயர்கள் வானொலியில் செய்தி கேட்கின்றனர்

# கிறிஸ்தவ வானொலி ஊழியம்

## இஸ்லாமிய உலகில் பயன்படுவதேன் ?

இலத்திரனியல் ஒலிபரப்புகள் கணணி மூலமாக அலைவரிசை ஒலி அலை தொழிநுட்ப சாதனங்கள் என்று வளர்ந்துள்ள இந்த காலத்திலும் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு பெரும் பங்களிப்பாக வானொலி ஏன் காணப்படுகிறது? அது சரளமாக தனித்துவ மாக தாக்கத்துடன் செய்தியை கொடுக்க வல்ல துடன், செலவின்றி புவியியல் அமைவு, கல்வி நிலை, பொருளாதார நிலையை துறந்து அதிகளவு சதவீதத்துடன் கொண்டு செல்ல வல்லது.

உதாரணமாக, மத்திய ஆசியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் தங்களது விசுவாசத்திலே மிகவும் கட்டுப்பட்டவர்களாயுள்ளார்கள். சில இடங்களிலே வெளிநாட்டு மிஷனரிகள் வெளித்தள்ளப்பட்டனர். உள்நாட்டு திருச்சபையானது வானொலியின் தாக்கத்தினாலே தொடர்ந்து முன்னேறி சென்றது. வட ஆபிரிக்காவிலே, வானொலிப்பெட்டிகள் நாடு முழுவதுமாக காணப்படுகிறது. இது நகர்புறங்க ளிலும் பின்தங்கிய கிராமங்களிலே உள்ள மக்களுக்கு தங்களது மொழியிலே செய்திகளை கேட்பதற்கு உதவி செய்துள்ளது.

எழுதப்பட்ட வாக்கியங்களுடன் சேர்க்கும்போது வானொலியானது சவால்களுக்கு முகங்கொடுக்கி -றது. உதாரணமாக, துர்க்மெனிஸ்தானிலே முதியோர் தலைமுறையினர் சிரிலிக் அரிச்சுவடியை பயன்படுத்துகின்றனர் ஆனாலும் இளம் சந்ததியி னர் லத்தின் அரிச்சுவடியை பயன்படுத்துகின்றனர். வெளிநாடுகளிலே உள்ள துர்க்மெனியர்கள் அரபிக், ஃபார்சி போன்ற மொழிகளை வாசிப்பர். வானொலி ஒலிபரப்புகள் தங்களது மொழியிலே நிகழ்ச்சிகளை கேட்கத்தக்க வசதிகளை ஏற்படுத்தி கொடுத்துள்ளன.

ஆபிரிக்காவிலிருந்து ஆசியாவை நோக்கும்போது இஸ்லாமிய உலகமானது முழுமையாக கலாச்சார திருப்பத்தை கொண்டுள்ளது, மொரேக்கியர்களின் வாழ்க்கை முறையானது இந்தோனேசியர்கள் அல்லது சிரியரின் வாழ்க்கை முறையை காட்டிலும் வித்தியாச மாயுள்ளது. ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கும் போது வானொலி ஊழியங்களானது கலாச்சார வேறுபாடுகள் மற்றும் மாற்றங்கள் போன்றவற்றை பெற்றுகொள்ளும். மலைப் பிரதேசம் அல்லது பாலை வனப்பகுதியிலே ஏற்படக் கூடிய மின்தடைகள் நிமித்தம் சூரிய சக்தியில் இயங்கும் வானொலிகள் வேதாகம காரியங்களை ஒலிபரப்பு செய்வதிலே மிக முக்கிய இடம் வகிக்கின்றன. ஆதிகாலத்திலே மிஷனரிகள் அச்சிடப்பட்ட வேதாகம உடமையை கொண்டுசெல்ல கடினமாக காணப்பட்ட எல்லைகளை கடந்து வானொலி அலைகள் செல்லக்கூடியன. கிறிஸ்துவுக்காக இஸ்லாமிய உலகை போய் அடையும் பணியிலே இவ்வாறாக வானொலிகள் பாரிய பங்களிப்பை அளிக் கின்றன. மற்றைய அணுகு முறைகளை காட் டிலும் வானொலியானது மிகவும் இலகுவான-தாக உள்ளது.

### ஜெப குறிப்புகள்

- அவசியத்துடன் காணப்படும் ஜனங்களை வானொலி நிகழ்ச்சிகள் போய் சந்திக்க வேண்டும் என்று ஜெபம் செய்யுங்கள்.
- உள்நாட்டு வானொலி தயாரிப்பாளருக்காக ஜெபம் செய்வோம். அவர்கள் தைரியப்பட வேண்டும் என்பதோடு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதாக.
- சத்தியத்தை தேடுகிறவர்கள் கிறிஸ்துவை அறிந்துகொள்வதோடு அவருள் வளரும் படியாக ஜெபம் செய்வோம்.

# நாள் 9

**கனடா நோக்கு**

ஜூலை 17
புதன்கிழமை

**1993**

90 ஆண்டுகளுக்கு மேல் வியாபாரம் செய்யும் வுட்வார்ட்ஸ் சில்லறை வியாபார நிலையம் ஹாஸ்டிங் மற்றும் அப்பொட்டிலே உள்ள வியாபார நிலையங்களை வங்கிக்கடன் காரணமாக மூடியது

**{ வான்கூவரில் 35 வீதமானோர் வெளிநாட்டினர் }**

# தொழிற்சார் நகர் வன்கூவரிலுள்ள இஸ்லாமியர் - வளரும் காலம்

வான்குவரின் அழகான கரையோர நகரமான பிரிடிஷ் கொலம்பியா என்பது மிகப்பெரிய கடற்துறைமுகமும் கனடாவின் மூன்றாவது பெரிய நகரமுமாகும். அதன் வட பகுதி மலைகளிலே உச்சியிலே உணவு விடுதிகள் உள்ளதோடு 2010 குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை நடாத்தும் தகுதியை பெற்ற ஸ்தானமா-கவும் உள்ளது. வன்குவர் நகரமானது கனடாவின் அதிகளவு இனமக்கள் மற்றும் மொழியை பேசுவோர் வாழும் ஸ்தானமாகும். இங்கே வாழ்பவர்களிலே 40% (2006 ன்படி)ஆங்கிலம் அவர்களின் முதல் மொழியல்ல. 1931 ஆம் ஆண்டு இஸ்லாமியரின் குடி புகல் வான்குவரில் காணக்கூடியதாக இருந்தது. 1970களில் ஆபிரிக்காவிலிருந்து இஸ்லாமிய பெரிய குழுக்கள் வந்து இறங்கினார்கள். 1980 களிலே வான்குவர் நகரிலே வெள்ளிக் கிழமை தொழுகைக் காக ஒரு இடம் மாத்திரமே காணப்பட்டது. இன்று, பதினைந் திற்கும் அதிகமான தொழுகை ஸ்தலங்கள் காணப்படுகின்றன.



கனடாவின் 2001 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பின்படியாக வன்குவர் நகரத்தின் மொத்த சனத்தொகை 1.99 மில்லியனாக காணப்பட அதில் இஸ்லாமியர் 52,600 பேர் அளவிலே காணப்பட்டார்கள் இதனிடையே 2006 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பின்படியாக பொதுவாக 2.1 மில்லியன் சனத்தொகை காணப்பட அதிலே ஏறத்தாழ 90,000 பேர் அளவிலே சனத்தொகையினர் காணப்படுகிறார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. (2006 ஆம் ஆண்டு கணக்கெடுப் பானது ஒரு தேச அளவீடாக எடுக்கப்படவில்லை). இந்த வேகமான இஸ்லாமிய சனத்தொகை அதிகரிப்பிற்காக காரணமாக குடிப்புகுதலின் எண்ணிக்கை அதிகரிப்பு, அகதிகள் மீள குடியேற்றம் செய்யப்பட்டுள்ளமை மற்றும் அதிகளவு பிறப்பு வீதம் என்பனவற்றை குறிப்பிட முடியும்.

இன்று கனடாவிலே பிறந்த இஸ்லாமியர் ஈரான், பாகிஸ்தான், இந்தியா, கிழக்கு ஆபிரிக்கா, ஈராக்கு, எகிப்து, மத்திய ஆசியா, பிஜி, ஆப்கானிஸ்தான், பொஸ்னியா, கொவொவோ, சர்பியா, இலங்கை, அமேரிக்கா, இந்தோனேசியா, பிரித்தானியா இன்னும் பல நாடுகளிலே இருந்து வந்துள்ளவர்களுடன் கலந்துள்ளனர். பஞ்சாபியர்கள் மற்றும் ஈரானியர்கள் என்போர் இரண்டு பிரதான பெரிய குழுக்களாவார்கள். மேலும் சவுதி அரேபிய அரசாங்கத்தாலே 2007 ஆம் ஆண்டு முதல் கொடுக்கப்பட்டுள்ள ஒரு விசேட புலமைப்பரிசில் நிகழ்ச்சிக்காக ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் வான்குவர் நகரிற்கு வருகிறார்கள். ரமழான் காலத்திலே நூற்றுக் கணக்கானோர் வான்குவார் பள்ளிவாசலண்டையிலே இ∴ப்தார் (உபவாசத்தை நிறைவு செய்தபின்பு உண்ணும் மாலை உணவு), தாராவி (இரவிலே இஸ்லாமியரினாலே நடாத்தப்படும் மேலதிக ஒன்றுகூடல் தொழுகை நேரம்) மற்றும் ரமழானின் ஆவியின் பெலத்தை பெற்றுக்கொள்ளும்படியாக ஒன்று கூடுவார்கள். இந்த மாணவர்களில் பெரும்பாலானோர் இருபது வயதிலே காணப்படுவதோடு அநேகருக்கு தங்களது வீட்டை துறந்து ரமழான் கொண்டாடும் முதல் அனுபவமாக இது காணப்படும்.

வான்குவரிலே உள்ள பள்ளிவாசலுக்குள் நடப்பது என்பது ஐக்கிய நாட்டு மண்டபத்திற்குள் நடப்பதை போன்று காணப்படும். பல்வேறுபட்ட வித்தியாசமான நாடுகளிலிருந்து இஸ்லாமியர் சேர்ந்து ஆங்கிலத்தை தங்களது பொதுவான மொழியாக கொண்டு தொழுகை செய்வது அருமையானதொரு விடயமாகும்.

## ஜெப குறிப்புகள்

- குடிபுகுந்து அல்லது அகதிகளாக வான்குவர் நகரிற்குள் வருகிறவர்களுக்கு அன்பு, கரிசனை, மற்றும் உதவிகளை கிறிஸ்தவ சமூகத்தினர் செய்ய வேண்டும் என்று ஜெபம் செய்வோம்.

- இஸ்லாமியருடன் சேர்ந்து செயற்பட வேண்டும் என்ற தேவஞானம் மற்றும் வழி நடத்தலை கிறிஸ்தவ சமூகத்தினர் பெற வேண்டும் என்று ஜெபம் செய்வோம்.

- இளம் இஸ்லாமிய சந்ததியினர் ஆண்டவரை தேடும் நிலைக்குள் வர வேண்டும் என்று ஜெபம் செய்வோம்.

1993 ஐரோப்பிய பாராளுமன்றம் சிரியாவில் நடந்த மனித உரிமை மீறலால் பொருளாதார உதவிகளை தடை செய்தது.

*Stepping Stones to Eternity*
by Don McCurry

# தமஸ்கு சிரியா - இரத்த பூமி

அது 1974 ம் ஆண்டு நான் சுவிட்சர்லாந்திலிருந்தும் என்னுடைய மனைவி பாகிஸ்தானிலிருந்தும் வந்து பெய்ரூட்டில் சந்தித்தோம். நாம் வேதாகம உலகமான யோர்தான், லெபனான் மற்றும் சிரியா ஆகிய நாடுகளிலே சுற்றுப்பயணத்தை மேற்கொண்டோம். நாம் தமஸ்குவிலே இருக்கும் போது அந்த இரவு கனவு வந்தது. ஒவ்வொரு பூமியும் இரத்தத்தினாலே உறைந்து “எவ்வளவு காலம்?” என்று கதறுவதைப்போல கண்டேன்.

நான்கு வருடங்களுக்கு முன்பு நான் இதனை என்னுடைய சிரிய நாட்டு சகோதரனுடன் பகிர்ந்துகொண்டேன். அவன் இது கடந்த காலத்தை குறித்து சொல்லப்பட்டது என்றான். அப்படியாக உலகத்தின் ஆதிகால குடியேற்றம் நிறைந்த ஸ்தானமாக தமஸ்கு காணப்படுகிறது. இது அளவற்ற ரீதியிலே படையெடுப்புகள் மற்றும் தீய விடயங்களினூடாக நடாத்தப்பட்டது. இந்த கனவானது எதிர்காலத்தை குறித்து கூறுகிறது என்று நாம் ஒருபோதும் நினைக்கவில்லை. கணக்கெடுப்பின்படியாக 2012 ஆம் ஆண்டு இறுதியிலே ஏற்பட்ட போராட்டத்தில் ஏறத்தாழ 40,000 பேர் அளவிலே கொல்லப்பட்டார்கள். நேற்று, நாம் மறுபடி சந்தித்தோம். அவரது ஊழியப்பணியகம் இந்த இரத்தம் சிந்தும் நாட்டிற்காக ஜெபத்தை விஸ்தாரப்படுத்தும்படியாக அழைத்திருந்தது. அவர் என்னுடைய சொப்பனமானது ஏறத்தாழ 40 வருடங்கள் கழிந்துவிட்டது, அவர் மேலும் “சுதந்திர போராளிகள்” என்றழைக்கப்படும் வாஹாபிஸ், அல் கைதா போன்ற குழுவினராலே ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் இலக்கு வைக்கப்பட்டது மாத்திரமல்ல சிதறடிக்கப் பட்டார்கள் என்று கூறினார்.

இதனிடையே, அவரது தந்தை, தமஸ்குவின் கீழ்பகுதியிலே ஒரு மேய்ப்பனாக உள்ளார் அவர் தம்முடைய மந்தையை விட்டு விட்டு செல்வதை நிராகரித்துவிட்டார் ஆச்சரியமாக, ஆண்டவர் ஒரு புதிய காரியத்தை செய்கிறார். கிறிஸ்தவர்கள் அவர்களது சபையானது அதிசயமாக கிறிஸ்தவர்களினாலே நிறையப்பெறுவதை கண்டு அதிர்ச்சியுற்றனர். முக்காடுடன் கூடிய இஸ்லாமிய பெண்கள் தங்களது கணவன்மார் உட்பட பிள்ளைகளுடன் நூற்றுக்கணக்காக ஆண்டவரை நோக்கி பயணித்தார்கள். வஞ்சகப் புகழ்ச்சியான சிரியாவானது அயல் நாடான (லெபனானோடு) கிறிஸ்தவர்கள் உட்பட ஒன்றோடொன்று தொடர்புபட்டுள்ளது. அரசியல் படுகொலைகள் நடாத்தும் அவர்கள் என்ன விதைத்தார்களோ அதனை அறுக்க வேண்டும். மெய்யாகவே ஆண்டவர் தேசங்களை அசைக்கிறார்.

மத்திய கிழக்கிலே நடந்துகொண்டு செல்லும் இத்தொடர் போரிற்கு ஒரு முடிவு உள்ளதா? இயேசு கிறிஸ்து சமாதான பிரபு. அவரை ஜனங்கள் நிராகரிக்கும் அளவிற்கு அங்கே சமாதானம் இல்லை.

நிச்சயமாகவே, ஆண்டவர் மனிதனுடைய முடமாவதற்கு காரணரல்ல, ஆனாலும் தீமையினின்று எவ்வாறு நன்மையை கொண்டுவருவது என்பதை அவர் அறிவார். அதனை நாம் சிரியாவிலே இன்று காணக்கூடியதாக உள்ளது.

**ஜெப குறிப்புகள்**

- ஆளுநர்களிடமிருந்து மதச் சுதந்திரத்தினூடாக சமாதானம் வர வேண்டும் என்று ஜெபம் செய்யுங்கள்.
- சிரியாவிலே தங்குகிறோம் என்று முன் வந்த கிறிஸ்தவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஜெபம் செய்யுங்கள் அவர்களின் சாட்சியானது அவர்களை சூழ உள்ள அயலகத்தாருக்கு புதிய நோக்கை பெற்றுகொள்ள உதவி செய்ய வேண்டும் என்று ஜெபம் செய்வோம்.
- சிரியாவினுள் வேதனைப்படுகிற மற்றும் தற்போது அகதிகளாக உள்ளவர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து ஜெபிக்கிற மற்றும் உதவி செய்வோருக்காக ஜெபம் செய்வோம்

“...இவர்களில் ஒருவருக்கு நீங்கள் எதனையும் செய்வீர்களானால்...” (மத்தேயு 25:40)



# நாள் 11

**அறியப்படாத**

ஜுலை 18
வெள்ளிக்கிழமை

1993 மஹாராஷ்டா மாநில கிலாரியில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியால் 10,000 ற்கும் அதிகமானோர் மரித்தனர்

**{ மூன்றில் ஒரு ஷேக் இந்தியாவில் வசிக்கின்றார் }**

# ஷெய்க் இஸ்லாமியரின் கொன்கானி

உலகம் முழுவதுமாக 200 மில்லியனுக்கும் அதிகமான ஷெய்க் இஸ்லாமியர் வாழ்கின்றனர் அதிலே மூன்றில் இரண்டு பகுதியினர் இந்தியாவிலே வாழ்கின்றனர். ஏனையோரில் பெரும்பாலானோர் பாகிஸ்தான் வங்காளதேசத்தில் வாழ்கிறார்கள். மத்திய இந்தியாவின் பிரதேசத்திலே ஷெய்க் இஸ்லாமியர் சுன்னி இஸ்லாமியரின் பெரும்பகுதியை உள்ளடக்கியவர்களாக வாழ்கிறார்கள். இந்தியாவின் மாநிலமான கோவாவின் அங்கீகரிக்கப்பட்ட மொழியாகும், மேலும் ஆய்வினூடாக கொன்கானி மொழியை பேசும் ஷெய்க் இஸ்லாமியர் மேற்கு இந்தியாவில் மும்பாய் முதல் கோவா வரையிலான கரையோரப்பகுதியிலே வாழ்கிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் மொத்த சனத் தொகையானது ஏறத்தாழ 2 மில்லியனாகும்.

“ஷெய்க்” என்னும் பதமானது அராபிய வம்சத்திலே வந்தவர்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனாலும் தற்போது அது இரண்டு மூன்று தலைமுறையினருக்கு முன்பாக மத்திய மற்றும் தென் இந்தியாவிலிருந்து தாழ்வான இந்து பின்னணியிலிருந்து மனந்திரும்பிய மற்றும் வட இந்தியாவிலே சு.்.பி இஸ்லாமிய மிஷனரிகளின் வேலையினிமித்தம் மனந்திரும்பிய உயர் இந்து குலத்தோரை குறித்தும் குறிப்பிடப்படுகிறது.

சிலவேளை இந்திய ஷெய்க் சமூகத்தினர் அவர்களை சூழ உள்ள ஏனைய இஸ்லாமியரை காட்டிலும் வித்தியாசமானவர்களாக உள்ளதோடு, பெரும்பாலும் அவர்கள் தங்களுக்குள் சம்பந்தம் கலக்கிறார்கள். அது உப ஷெய்க் குழுக்களிடையே வித்தியாசமாக உள்ளது, ஆனாலும் ஒவ்வொரு எல்லையிலும் உள்ள மொழிவழக்கமானது அவர்களை வேறுபடுத்த உதவி செய்கிறது. மேலும் எல்லா ஷெய்க் மற்றும் சுன்னி இஸ்லா-மியரிடையே அவர்களின் பாரம்பரிய பழக்கவழக்-த்தினிடையே வித்தியாசமுள்ளது. மொத்தமாக, இந்தியாவிலுள்ள இஸ்லாமியர் ஆழமான தியானத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் என்பதற்கான ஆதாரங்களை உடையவர்களாக காணப் படுகிறார்கள். கனத்திற்குரிய இஸ்லாமிய புனிதர்கள் மிகவும் பொதுவாக காணப்படுவதோடு பயனற்ற விதத்திலே அவர்களின் சவச்சாலை அலங்கரிக்கப்பட்டு காணப்படுதல் இந்துக்களுக் கும் நமஸ்கரிக்க, பக்தி இசைகளை வாசித்தல் மற்றும் புனிதருக்கு பாடல் போன்றவற்றை மேற்கொள்ள வழியமைக்கிறது. தியானமானது ஒரு ஆழமான உணர்வாகும். ஒரு பரந்த நோக்கிற்காக எல்லா மதங்களின் மார்க்கமும் அல்லாவை நோக்கியே செல்கிறது என்று ச.்.பியின் போதனைகள் போதிக்கின்றன.

கொன்கானி மொழியிலே வேதாகமமோ அத்துடன் சம்பந்தப்பட்ட எழுத்தாக்கம் எதுவும் இல்லை, பாரம்பரிய கொன்கானி மொழியிலே வேதாகமம் காணப்படுகிறது. உருது மற்றும் ஹிந்தி மொழிகளில் பேசுகிறவர்களுக்கு வேதாகமம் மற்றும் இயேசுவின் திரைப்படங்கள் காண்பிக்கப் படுகின்றன.



## ஜெப குறிப்புகள்

- கொன்கானி பேசும் ஷெய்க் மக்களிடையே கிராமங்கள் தோறும் போய் இயேசு கிறிஸ்து -வை அறிக்கை செய்து மீன்பிடிக்கத்தக்கதாக ஆண்டவர் வேலையாட்களை ஆயத்தம் செய்யும் படிக்காய் ஜெபம் செய்வோம்.
- அண்மையிலே விசுவாசத்திலே இணைந்த விசுவாசிகளுக்காக ஜெபம் செய்வோம் அவர் -கள் கடினத்தை மறந்து இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள கிருபை மற்றும் அறிவிலே வளரவும் தைரியமாக தங்களது விசுவாசத்திலே வளரவும் வேண்டுமென்று ஜெபம் செய்வோம்.
- புதிய விசுவாசிகள் தங்களது சமூகமான கொன்கானி ஷெய்க் உள்ளே சீஷர்களை உருவாக்க தங்களை ஆயத்தப்படுத்த வேண்டும் என்று ஜெபம் செய்வோம்.
- தற்போது உள்ள பழைய விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் தங்களது புதிய சகோதர சகோதரிகளை அன்பினாலும் திறந்த கரத்தினாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஜெபம் செய்வோம்.

நாள் 12

சுருக்கம்

ஜுலை 20
சனிக்கிழமை

1993

திறந்த வாசல் வெளியீட்டாளர் முதல் தடவையாக உலக நோக்கு புத்தகத்தை வெளியிட்டார்கள்.

**வருடத்திற்கு 176,000 கிறிஸ்தவர்கள் உபத்திரவப் படுகின்றனர்.**

# தடைகளுக்கு எதிராக ஜெபம் செய்தல்



**பெரும்பாலும் இஸ்லாமியர் சுவிசேஷத்தை நிராகரிப்பதில்லை, மாறாக அவர்கள் அதற்கு செவிகொடுப்பதில்லை.**

நிக் ரிப்கின் எழுதிய ஆண்டவரின் பைத்தியம் என்னும் புத்தகத்திலே இஸ்லாமிய பின்னணியை கொண்ட ஒரு விசுவாசியான ப்ரமானா என்பவரை குறித்து ஒரு கதையை எழுதியுள்ளார். கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்பு ப்ரமானா தன்னுடைய வாழ்க்கை அழிவிலே காணப்பட்டதாக உணர்ந்தார். உள்ளூர் இமாம் ஒருவரின் ஆலோசனையின் பேரிலே அவர் தன்னுடைய பிரச்சினைகளுக்கான தீர்வாக மூன்று நாட்கள் உபவாசமிருந்து தியானத்திலே ஈடுபட்டார். மூன்றாவது நாளிலே ஒரு சத்தம் அவனுடன் பேசி “இயேசுவை கண்டடை, நற்செய்தியை கண்டடைவாய்” கட்டுப்பாடுள்ள இஸ்லாமிய நாட்டிலே ப்ரமானா ஒருபோதும் இயேசு கிறிஸ்துவை குறித்து கேள்விப் பட்டதில்லை. இந்த நேரத்திலே ப்ரமானா இயேசு என்பவர் ஒரு கனியோ அல்லது ஒரு கன்மலையோ ஒரு மரமோ என்று கூட அறிந்திருக்கவில்லை. அத்தொனியானது தொடர்ந்து எவ்வாறு இயேசுவை கண்டடைவது என்ற அறிவுறுத்தல்களை அவனுக்கு கொடுத்துக் கொண்டேயிருந்தது. ப்ரமானா உடனே எழுந்து, இரவு முழுதும் நகரம் முழுவதுமாக நடந்தான், அவன் அத்தொனியின் சத்தத்திற்கு செவி கொடுக்கவேயில்லை. ப்ரமானாவின் பயணம் இருபத்தினான்கு மில்லியன் ஜனத்தாரின் மத்தியிலே மூன்று விசுவாசிகளை மாத்திரம் வைத்திருந்த ஒரு வீட்டை நோக்கி வழிநடத்தியது. இந்த மனுஷன் இயேசு கிறிஸ்துவை குறித்து ப்ரமானாவுடன் பகிர்ந்துகொண்டதோடு அந்த நாளே அவன் இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறவனாக மாறினான்.

உபத்திரவத்துடன் பொறுமையுடன் காணப்படும் கிறிஸ்தவர்களை குறித்து கையாளும் உலக நோக்கு பட்டியலில் (World watch list) முதல் பத்து இடங்களிலே ஒன்பது இஸ்லாமிய நாடுகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. பல்வேறு நாடுகளிலே இயேசு கிறிஸ்துவை குறித்து பேசுவது மிகவும் கடினமான ஒரு காரியமாகும். இயேசு கிறிஸ்துவை அவரது நாமத்தினாலே அழைக்கிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று வேதாகமம் கூறுகிறது..... மற்றும் அவரை குறித்து கேள்விப்படாமல் எவ்வாறு அவர்கள் அவரை நம்புவார்கள்? (ரோமர் 10:13-14). அற்புதமாக பரிசுத்த ஆவியானவர் ப்ராமானாவை சந்தித்தது போல இஸ்லா-மியரை சந்தித்துக்கொண்டுள்ளார். ஆனாலும் இஸ்லாமியர் இயேசு கிறிஸ்துவை தம்முடைய வாழ்க்கைக்கு பிரயோகப்படுத்த இன்னும் சுதந்திரம் அவசியமாயுள்ளது, மற்றும் அது வேதாகமத்திற்கும் கிறிஸ்தவ சாட்சிக்கு மாதிரியாக வாழவும் வழியமைக்கிறது. சமுதாயத்தாலும் இஸ்லாமிய அரசாங்கத்தினாலும் போடப்படும் தடைகள் நீக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

## ஜெப குறிப்புகள்

☒ இயேசு கிறிஸ்துவை பற்றி அறிய முடியாதுள்ள வண்ணமாக உங்களாலே நினைத்து பார்க்க முடியகிறதா? நற்செய்தியை கேட்காத மில்லியன் அளவிலான இஸ்லாமியர் நித்தியத்திற்கு முகங் கொடுப்பதை உங்களாலே காணக்கூடியதாக உள்ளதா? நினைத்து உங்களது முகத்தை தாழ்த்தி இயேசு கிறிஸ்துவை குறித்து அறியத்தக்க வாசல்கள் கிடைக்க வேண்டும் என்று ஜெபம் செய்யவும்.

☒ இஸ்லாமிய நாடுகளிலே அடைக்கப்பட்ட வாசல்கள் திறக்கப்பட வேண்டும் என்று ஜெபம் செய்யவும். அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் சமுதாய அழுத்தங்கள் அழிக்கப்பட வேண்டும். வேதாகமம் கொண்டு செல்ல அனுமதி கிடைக்க வேண்டும் என்றும் அதினூடாக தங்களது மொழியிலே வேதாகமத்தை வாசிக்கத்தக்க திறனை அனேகர் பெற்றுகொள்வார்கள்.

☒ இஸ்லாமிய நாடுகளிலே உள்ள கிறிஸ்தவர்கள் தொடர்ந்து அந்த நாடுகளிலே வசிக்கத்தக்கதாக ஆண்டவர் பெலப்படுத்த வேண்டும் என்று ஜெபம் செய்யுங்கள். (மத்தேயு 5:3-16)

# இஸ்லாமியருடனான கலந்துரையாடல்



தேவன் தம்மை பின்பற்றுகிறவர்களை முஸ்லிம்களிடம் அனுப்ப தேவையின்றி. மாறாக எம்மை பயன்படுத்துகிறார்

மேற்கத்திய ஆபிரிக்காவை குறித்து அண்மைக் காலத்திலே மிகவும் அவதானமாக கற்றுகொண்ட விடயத்தில் கிறிஸ்தவர்கள் இஸ்லாமியருடன் நேரடியாக தொடர்பு கொண்டு பேசியதினூடாக அநேகர் கிறிஸ்துவிடம் வந்துள்ளார்கள் என்பது புலனாகிறது. இதோ அதன் பிரிவுகளுடன் கூடிய தொகுப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| கலந்துரையாடல் | 80% |
| இயற்கைக்கு அப்பாற்பட்ட | 60% |
| வேதாகமத்தை வாசித்தல் | 30% |
| குரானை வாசித்தல் | 20% |
| புத்தகங்கள் | 10% |
| கடிதப்போக்குவரத்து | 2% |
| ஒலி மற்றும் படங்கள் | 2% |

உதாரணமாக பின்வரும் கலந்துரையாடலானது கின்ஷாவா என்னும் இடத்திலுள்ள சந்தையிலே நடைபெற்றதொன்றாகும். இது திருத்தங்கள் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

கிறிஸ்தவன்: ஹலோ, என்னுடைய நண்பரே! இந்த பொவ்பொவ்வின் (மேற்கு ஆபிரிக்க ஆடை) விலை என்ன?
இஸ்லாம்: (மேற்கு ஆபிரிக்க மொழிப்பாணியில்) அது ஐம்பது கொங்கோலிஸ் பிராங்க்.
கிறிஸ்தவன்: அது விலை அதிகம்!! உங்களுடைய மேசையிலே உள்ள மற்றைய ஆடைகளை விட இதற்குள்ள வித்தியாசம் என்ன? இது நல்ல தரமான ஆடையா?
இஸ்லாமியன்: ஆம், இது தரமான பொவ்பொவ் மேற்கு ஆபிரிக்க தையலாளர்களாலே தயாரிக்கப் பட்டது.
கிறிஸ்தவன்: நீங்கள் மேற்கு ஆபிரிக்காவிலிருந்தா வருகிறீர்கள்?
இஸ்லாமியன்: ஆம்! நான் மலி என்னும் இடத்திலிருந்து வருகிறேன் மேலும் கின்ஷாவாவிலே இரண்டு வருடங்களாக வாழ்கிறேன்.
கிறிஸ்தவன்: ஆபிரிக்காவில் வாழும் கிறிஸ்தவ பிண்ணனியை உடையவனாக நான் உங்களிடம் ஒரு கேள்வியை கேட்கவா?
இஸ்லாமியன்: பிரச்சினையில்லை, நான் ஒரு இஸ்லாமியன் என்பதை நீங்கள் மறந்துவிடாதீர்கள்.
கிறிஸ்தவன்: ஆபிரிக்காவிலே எம்முடைய தலைமுறையிலே நடைபெறுகிற அதிகளவு வன்முறைகள், பயங்கரமான பிரச்சினைகள் உள்நாட்டு யுத்தங்கள் தாழ்வான துர் நடத்தைகள் மற்றும் எயிட்ஸ் போன்ற காரியங்களை குறித்து அவதானித்து வருகிறேன். உங்களுடைய கரத்தின் படியாக இதற்கு யார் பொறுப்பாளிகள்?
இஸ்லாமியன்: இது மிகவும் கடினமான கேள்வி ஆனாலும் ஆபிரிக்கர்களான நாம் தான் இதற்கு பொறுப்பாளிகள் என்று நினைக்கிறேன்.

கிறிஸ்தவன்: இவ்வாறு நடப்பதற்கு அல்லது இவ்வாறான பாவங்களுக்கு தங்களை அர்ப்பணிப்பதற்கு மனித வர்க்கத்தினை உந்தும் நடவடிக்கை என்ன?
இஸ்லாமியன்: (சற்று நேரம் அமைதியாக இருந்த பின்பு) அது சாத்தான்.
கிறிஸ்தவன்: உங்களது மதத்தின் ஏவுதலுக்கு கனப்படுத்தும் முகமாக, குர் அன் சாத்தானை மேற்கொண்டு பாவஞ்செய்தலை வெறுப்பதற்கு வலியுறுத்தி கூறுவது என்ன என்று நான் தெரிந்துகொள்ளலாமா?
இஸ்லாமியன்: ஹா என்னிடம் மெய்யாகவே அந்த கேள்விக்குரிய பதில் ஒன்றுமில்லை.
கிறிஸ்தவன்: நீங்கள் உங்களுடைய வாழ்க் கையிலே பரிசுத்தத்தை வலியுறுத்தி உங்களது வாழ்க்கையிலே சத்துருவின் கிரியையிலிருந்து மேற்கொள்ள முயற்சித்ததில்லையா?
இஸ்லாமியன்: ஆம் நான் செய்துள்ளேன்! ஆனாலும் அது மிகவும் பெரிய பிரச்சினையாக உள்ளது.
கிறிஸ்தவன்: நிங்கள் சொன்னது சரியானது, ஏனென்றால் வேதாகமம் மற்றும் குர் ஆன் ஆகிய இரண்டும் மனித வர்க்கம் பிசாசின் பிடியிலே இருக்கும்போது பாவமானது அது குடிபுகுந்துள்ளது என்று உறுதிபடுத்தியுள்ளது, எவ்வாறாயினும் இந்த பிரச்சினைக்கு ஒரு தீர்வு உள்ளது.
இஸ்லாமியன்: (அதிக எதிர்பார்ப்புடன்) அது என்ன?
கிறிஸ்தவன்: இதற்காக குர் ஆன் மற்றும் ஹதீஸிலே குறிப்பிடப்பட்டுள்ள தீர்வை நாம் ஆராய்ந்து கொண்டோம்.
இஸ்லாமியன்: உண்மையாகவா!!

கிறிஸ்தவன்: இஸ்லாத்தின் தீர்க்கதரிசியான முகம்மது அவர்கள் பூமியிலே தன்னுடைய பயணத்திலே பாவஞ்செய்யாது மரியாளிடம் பரிசுத்தமாக பிறந்த (சுரா 19:19) இயேசு கிறிஸ்துவை தவிர எல்லா மனித வர்க்கமும் (தன்னையும் உள்ளடக்கி) பிறப்பு முதல் பிசாசின் ஒரு பிடியுடன் (பாவம்) உள்ளனர். பாவமற்றவராக, இயேசு கிறிஸ்து பாவச்சுமையிலிருந்து மனித வர்க்கத்தை விடுதலையாக்கிய ஒரே தீர்க்கதரிசியாக (சூரா 39:7) காணப்பட்டார். வேதாகமத்திலும் இயேசு கிறிஸ்து பூமியிலே பிசாசுடைய எல்லா வேலைகளையும் அழிக்கும் படியாக வந்தார் என்றும் அவரிலே எவ்வித பாவமும் காணப்படவில்லை (1 யோவான் 3:5,8).
நண்பரே, நான் உங்களிடம் ஒரு கேள்வியை கேட்க விரும்புகிறேன். நீங்கள் மிகவும் சுமையை சுமந்துகொண்டு களைப்படைந்தவராக வரும்போது இரண்டு நபர்கள் உங்களிடம் வந்து, முதலாவது நபர் தன்னுடைய தோலிலே ஒன்றுமில்லாது விடுதலையுடன் காணப்பட இரண்டாவது நபர் தன்னுடைய சொந்த பாவச்சுமையை சுமந்துகொண்டு வந்தாள் யாரிடம் நீங்கள் உதவியை பெறும்படி போவீர்கள்? யார் உங்களது சுமையை இறக்கி வைக்க உதவி செய்வார்?
இஸ்லாமியன்: அந்த சுமையின்றி விடுதலையுடன் உள்ள முதலாவது நபரே......

கிறிஸ்தவன் நற்செய்தியை விளக்கப்படுத்திக்கொண்டு சென்றார் எம்முடைய மெய்யான கதையிலே காணப்பட்ட இஸ்லாமிய இயேசு கிறிஸ்துவை தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்படியாக சென்றான். ஆண்டவர் தம்மை பின்பற்றுகிறவர்களை இஸ்லாமியரிடம் போய் பேசுவதற்கு பயன்படுத்த மாட்டார் ஆனாலும் அவர் காணாமற்போன ஆனாலும் நற்செய்தியை அன்புடன்கூட பகிர்ந்தளிக்கக்கூடிய எம்மை பயன்படுத்துவார்.

நாள் 13 | ஜூலை 21 ஞாயிறு | 1993

சுருக்கம்

வாஷிங்டனில் பாலஸ்தீன வி.இ. தலைவர் யாசர் அர.ஃ.பாத்தும், இஸ்ராயேல் பிரதமர் யிட்ஷாக் ராபின் அவர்களும் சமாதான உடன்படிக்கையை கைச்சாத்திட்டதும் கைக்குழுக்கினர்.



# பெத்லகேமிற்கான ஜெபம்

இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் ஸ்தலமான பெத்லகேம் ஜீவனுள்ள விசுவாசத்திலே வெறுமையாக காணப்படக் கூடுமா?

சூழ்நிலை இதுவரை அவ்வாறாக இல்லை ஆனாலும் அது போகிற திசையானது அதற்கு ஒத்ததாக காணப்படுகிறது. காசா உட்பட பலஸ்தீனாவின் எல்லையிலுள்ள ஜனத்தொகையினர் மத்தியிலே உள்ள சனத்தொகை கணக்கெடுப்பின் படியாக கிறிஸ்தவர்களின் ஜனத்தொகையானது ஒரு சதவீதத்தை காட்டிலும் சற்று அதிகமாகும். அநேக பாலஸ்தீன கிறிஸ்தவர்கள் வெளிநாடுகளிலே வாழ்கிறார்கள். புனித பூமியிலே வாழ்கிறதான கிறிஸ்தவர்கள் அளவற்ற அழுத்தங்களுக்கு முகங்கொடுப்பதினாலே அவர்கள் குடியகழ்கிறார்கள்.

இவ் அழுத்தமானது வெவ்வேறான வழிகளிலே வருகிறது. ஒரு உள்நாட்டு கிறிஸ்தவ மேய்ப்பனுக்கு அரசியல் சூழ்நிலை வேறுவிதமாக காணப்படுகிறது. கிறிஸ்தவர்களாக நாம் சமாதானமாக நாட்டில் வாழவேண்டும் என்று விரும்புகிறோம் ஆனாலும் மத்திய கிழக்கிலே சமாதானத்திற்கான அடையாளத்தை கூட காணமுடியாதுள்ளது. அண்மையிலுள்ள அரபு நாடுகளிலே ஏற்படும் புரட்சிகளின் ஊற்றானது சமாதான எதிர்காலத்தை உருவாக்குவதாய் இல்லை. பொருளாதார ரீதியில், எமக்கு குறைந்தளவு எதிர்பார்ப்பே உள்ளது. 40 சதவீதமான பாலஸ்தீன கிறிஸ்தவர்கள் வேலைவாய்ப்பற்று காணப்படுகிறார்கள் அதற்கான காரணம் அவர்களுக்கு ஒரு சில தொழில்வாய்ப்பே காணப்படுகிறது. மற்றும் சமுதாயத்திலே சிறிதளவிலே குறிப்பிடத்தக்க விதத்திலே காணப்படுகிறார்கள். ஆவிக்குரிய ரீதியிலே, நாம் இயேசு கிறிஸ்துவை குறித்து அடையாளப்படுத்தாத இரண்டு பிரதான மதங்களினாலே சூழப்பட்டுள்ளோம். அவர்களின் கண்களுக்கு நாம் "நாஸ்தீகர்கள்" போல காணப்படுகிறோம் ஆதலால் இலக்கானது துஷ்பிரயோகமும் வேதனையுமாகும். அது போதாமற் போகுமானால், உள்நாட்டு சபைகளானது உலகளாவிய திருச்சபையினாலே கைவிடப்பட்ட உணர்வினால் அதைரியம் மற்றும் பெலவீனப்படுகிறது என்றார்.

ஆனாலும் ஒரு எதிர்பார்ப்பு இன்னும் காணப்படுகிறது. பாலஸ்தீன எல்லைக்குள் வித்தியாசமான சபைகள் மற்றும் சபை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பாரம்பரிய கிறிஸ்தவர்கள் மத்தியிலே உங்களாலே வெளியரங்கமாக வேலை செய்ய முடியும். இஸ்லாமியர் மத்தியிலே வேலை செய்வது மிகவும் சவாலானது. சபையானது ஞானமாக வேலை செய்ய வேண்டியது அவசியமாகும். சபைகளானது இயேசு கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசத்தினுள் வருகிறதற்கு உதவுகிறது. பெத்லகேமிலே ஒரு சுவிசேஷ சபையானது ஐந்து குடும்பங்களிலிருந்து 56 குடும்பங்களாக வளர்ச்சியடைந்தது. அவர்களின் மேய்ப்பன் "நாம் அதனை கண்டதோடு இங்கே ஜனங்களை ஆண்டவர் இரட்சிக்கிறார் என்று சாட்சி பகிர்வதோடு அற்புதங்கள் இன்றே நடைபெறும் என்று அறிக்கை செய்கிறோம்" என்றார்.

"உங்களது ஜெபங்களுக்காக நன்றி.
இன்னும் தனித்துவமான ஒரு அறுவடை இங்கே
கிடைக்கும்படியாக நாம் காத்திருக்கிறோம்,
அது அண்மையிலே உள்ளது என்று நாம் அநேகர்
உணர்கிறோம்"
(உள்நாட்டு 30 நாட்கள் உடன் வேலையாள்)

## ஜெப குறிப்புகள்

- பலஸ்தீன எல்லையிலே காணப்படும் கிறிஸ்தவர்கள் தங்களது சூழலுக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் காணப்படும்படி தைரியப்பட வேண்டும் என்று ஜெபம் செய்வோம்.
- இஸ்லாமிய பின்னணியில் இருந்து கிறிஸ்துவின் விசுவாசத்திற்குள் வருகிறவர்கள் மீது ஆண்டவரின் பாதுகாப்பிற்காக ஜெபம் செய்வோம்.
- கிறிஸ்துவின் சரீரத்திற்காக விசுவாசிகளை சீஷத்துவத்திற்குள் கொண்டு வர தேவையான ஞானத்தை போதகர் பெற்று கொள்ளும்படியாக ஜெபம் செய்வோம்.

**நாள் 14** ஜுலை 22 திங்கட்கிழமை

சுருக்கம்

1993 இந்தோனேசிய பணவீக்கம் 9.68% எட்டியது.

{நான்கு வித மாயம்: ஆசி, பாதுகாப்பு அழிப்பு, பிரிப்பு}

# அழுத்தத்தின் கீழ் - இஸ்லாமிற்கு பயந்தோர்



பிலால் பயத்துடன் எழுந்திருந்தான். இது தொடர்ந்து ஒரு சில வாரங்களாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆவிக்குரிய உலகிலே ஒரு போராட்டம் நடைபெறுவதை அவன் கண்டதோடு இது தன்னுடைய விதி என்று அவன் தன்னை ஆறுதல்படுத்திக்கொண்டான். அவனாலே தன்னுடைய வேலையிலே கவனம் செலுத்த முடியவில்லை தீவிரமான அவனது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடம் ஓடி போய்விட்டான். இதனை இனிமேலும் சுமக்க முடியாது, அவன் கனத்திற்குரிய மக்கா யாத்திரை சென்றுள்ள ஒரு எழுத்தாளரான ஒரு ஷெய்க்கிடம் போனான். பிழையான புரிந்துணர்வுகளை எல்லாம் விளக்கப்படுத்திய பின்பு, இந்த ஆவிக்குரிய தலைவர் பிலாலுடைய இடுப்பை சுற்றிலும் ஒரு வெள்ளை நிற நூலை கட்டும்படியாக கூறினார். மேலும் தலையணையுடன் இணைக்கும்படியாக ஒரு தாயத்தையும் கொடுத்தார்.

பாரம்பரிய இஸ்லாமுடன் கலந்ததாகவே இந்த பயத்துடன் கூடிய இஸ்லாம் காணப்படுகிறது. பெரும்பாலும் இஸ்லாமிய பயிற்சியானது இஸ்லாமிய பயந்த கூட்டத்தின் வடிவத்தை கொண்டுள்ளது. அவர்கள் எப்போதும் ஆவிகளினாலே சோதிக்கப்படுவதோடு அவர்கள் இந்த ஆவிகளை சாந்தப்படுத்துவதற்காக பல்வேறு வைபவங்களை நடாத்துவார்கள். இந்துநேசியாவிலே ஒரு வீட்டை கட்ட முன்பு ஒரு கோழியை பலிசெலுத்துவது பொதுவான ஒரு வைபவமாகும். கோழியின் தலை கிழக்கு பக்கமாக நோக்கும் விதத்திலே அரிசி மற்றும் வாசனைத்திரவியங்கள் சேர்த்து, பாதம் மற்றும் சிறகுகள் என்பன அத்திவார கற்களுடன் புதைக்கப்படும். கோழியின் இரத்தமானது ஒவ்வொரு கற்கள் மீதும் தெளிக்கப்பட்டு ஒவ்வொரு மூலைக்கல்லின் கீழும் ஒரு காசு வைக்கப்படும். இது நடைபெற்ற பின்பு வீடு கட்டப்படும்.

இன்னுமொரு பயந்த இஸ்லாமியர் வல்லமை உள்ள இடங்களுக்கு யாத்திரைகள் மேற்கொள்வார்கள். அந்த யாத்திரைகள் பெரும்பாலும் கல்லறையிலே குறிப்பிட்ட கடமைகளை மேற்கொண்டு, குர் ஆனின் ஒரு பகுதி மரித்தவரின் பெயருடன் உச்சரிக்கப்படும். அண்மையிலே உள்ள கட்டிடத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்து அச் சமாதியின் மீது ஊற்றப்படும். கல்லறை வாசலுக்கு அவர்கள் மலர்களை தூவுவார்கள். அந்த தண்ணீரும் மலரும் அப்புனிதரின் ஆசீர்வாதங்களை உறிஞ்சிக்கொள்வதோடு அதனை அவர்கள் தங்கள் வீட்டிற்கு கொண்டு செல்ல முடியும் என்று நம்புகிறார்கள். ஒரு நபர் சுகவீனமுற்றிருந்தால் அந்நபர் சுகமடையும்படியாக அத்தண்ணீரை குடிப்பார்கள். ஒரு நபரின் ஆத்துமாவை சுத்திகரித்து கொள்ளும்படியாக அவர்கள் குளிக்கும் தண்ணீரிலே அப்பூவினை தூவுவார்கள்.

பிலால் தான் முயற்சி செய்தும் இந்த இரா கனவு அவனை வேதனை செய்தது. உடனே அவன் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவ சபைக்கு கடந்து போனான். அவனது அனுபவத்திலிருந்து வெளியேற அவனுக்கு சற்று காலஞ் சென்றதோடு இன்று அவன் அந்த பயபக்தியுள்ள கூட்டத்தினருக்கு இறுதியாக தான் பெற்றதான் அந்த சுதந்திரத்தை பற்றி பேசுகிறான்.

## ஜெப குறிப்புகள்

- இஸ்லாமியர், அவர்கள் கட்டப்பட்டுள்ள இந்த அரண்களிலிருந்து விடுதலைபெற வேண்டுமென்று ஜெபம் செய்யவும். (மத்தேயு 8:16, 10:1, மாற்கு 5:2-13, அப்போஸ்தலர் 16:16-18)
- இந்த ஜனங்கள் மேசியாவிடம் வரும்போது, ஆவிக்குரிய உலகிலே அவர்களின் பங்களிப்பிலிருந்து தன்களது உடன்பாட்டை அவர்கள் விலக்கி தங்களது கடந்தகால வாழ்க்கையிலே இருந்து வெளியேற வேண்டும் என்று ஜெபம் செய்வோம்.
- அந்தகாரத்திலே வாழ்கிறவர்களுக்கு சாட்சி பகிர்கிற கிறிஸ்தவ ஊழியர்கள் “உலகத்திலுள்ள பிரகாசிக்கிற நட்சத்திரங்களாக” காணப்பட வேண்டும் என்று ஜெபம் செய்வோம் (பிலிப்பியர் 2:15).



2012-103 30 Days Booklet.indd 23 5/3/13 15:33:19

**1993** மே மாதம் 9 முதல் 18 வரையிலே முதலாவது கிழக்காசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஷங்காய் நகரில் நடைபெற்றது.

**{ இயேசுவை அறியாத 10 மில்லியன் ஹூய் இனத்தார் }**

# சீன அற்புதம்: இயேசு கிறிஸ்துவை தரிசனத்தில் கண்ட இஸ்லாமியர்

4 வருடங்களுக்கு முன்பு நான் ஹாலிட் என்பவை சந்தித்தேன். அவரை சந்தித்த நாள் முதல் அவரது ஜனத்தார் மத்தியிலே ஆண்டவர் வல்லமையாக அவரை பயன்படுத்த போகிறார் என்று அறிந்துகொண்டேன்.

ரமதான் காலத்திலே ஒரு நாள் இரவு ஹாலித் தம்முடைய கனவை எம்முடன்



பகிர்ந்துகொண்டான். அவன், "என்னுடைய கனவிலே ஒரு மனிதன் என்னிடமாக வந்து என் கரத்தை பிடித்தான், அவன் யார் என்று நான் அறிந்திருக்கவில்லை ஆனாலும் அவர் நல்லவர் என்று அறிந்திருந்தேன். அவர் என்னை மலைக்கு அழைத்துகொண்டு சென்றார், நான் களைப்படைந்து அவரது கரத்திலிருந்து என்னுடைய கரத்தை இழுத்துவிட்டேன். நான் ஓய்வு எடுக்கும் வரையில் அவர் எனக்காக காத்திருந்தார், பின்பு மறுபடி என்னுடைய கரத்தை பிடித்து மேலே நோக்கி நடந்தார். மேலே போய் நாம் எமது எல்லையை அடையும் வரையிலே நான் என்னுடைய கரத்தை அவரிடமிருந்து விலக்கிக் கொள்ள முயற்சித்தேன். ஆனாலும் அவர் அருமையாகவும் அப்போதும் உறுதியாக பிடித்துக் கொண்டார் அதனாலே அவரை விட்டு வெளியேற முடியவில்லை. அந்த நேரத்திலே நான் விழித்துக் கொண்டேன்" என்றான். ஹாலிட் தன்னுடைய நண்பன் ஒருவனிடம் (அவனும் ஒரு இஸ்லாமியன்) அதன் அர்த்தத்தை புரிந்துகொள்ள உதவி செய்வார் என்று இதனை பகிர்ந்துகொண்டான். அவன் "ஹாலித், உன்னுடைய கனவிலே வந்த அந்த மனிதன் இயேசு என்கிற மேசியா". என்றான். ஹாலித் நினைவுகூர்ந்து "இதனை நான் கேட்டவுடன், இது உண்மையானது என்று அறிந்திருந்ததோடு இயேசுவை பின்பற்ற வேண்டிய நேரம் என்று ஆண்டவர் என்னுடன் பேசினார். நான் அவரது கரத்தை தள்ளினாலும் கூட அவர் எப்போதும் எம்முடைய கரத்தை பிடிக்க காத்திருக்கிறார் என்று காண்பித்தார். இப்போது நான் அவரை தள்ளினாலும் கூட அவர் என்னுடைய அருகில் இருக்கிறார் மற்றும் அவர் எனக்கு எப்போதும் அவசியம் என்பதை நான் அறிந்து கொண்டேன். என்னாலே இந்த அன்பை புரிந்துகொள்ள முடியவில்லை ஆனாலும் எனக்கு அது அவசியம் மற்றும் அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது". ஹாலித் வேதாகமத்தை வாசித்ததோடு தன்னுடைய சமூகத்தினருடன் இந்நற்செய்தியை பகிர்ந்து கொண்டான்.

ஆண்டவர் ஆச்சரியமான காரியங்களை செய்தாலும்கூட சீனாவின் ஹாயி மக்களிடையே ஹாலித் தற்போது அனுபவிக்கும் காரியத்தை குறித்து அறியாத 10 மில்லியனை காட்டிலும் அதிகமானோர் காணப்படுகிறார்கள். அநேகர் ஆண்டவரை குறித்து அதிகளவு வாஞ்சை மற்றும் கீழ்படிய வேண்டும் என்ற ஆவல் காணப்பட்டாலும் பயத்தினாலே வாழ்கிறார்கள், அதனை எவ்வாறு செய்வது என்று அறியாதிருக்கிறார்கள்.

**ஜெப குறிப்புகள்**

- இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்திலே ஆண்டவர் ஹூய் மக்களுக்கு தன்னை வெளிப்படுத்த வேண்டும் என்று ஜெபம் செய்யுங்கள் (அப்போஸ்தவர் 2:17)
- ஹூயிலுள்ள சீன மக்களின் பயமானது அன்பினாலே நிரப்பப்பட வேண்டும் என்று ஜெபியுங்கள் (1 யோவான் 4:18).
- இயேசுவை குறித்து ஏற்கனவே அறிந்துள்ள ஹூய் மக்கள் தங்களது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் அதனை பகிர்ந்தளிக்கக்கூடிய ஞானத்தையும் தைரியத்தையும் கேட்டு ஜெபம் செய்யுங்கள் (எபேசியர் 6:18-20)

1993 ஜனாதிபதி FW de Klerk மற்றும் Nelson Mandela ஆகியோர் இணைந்து நோபல் பரிசினை பெற்றுகெண்டுள்ளனர்.

{ தென்னாபிரிக்காவில் 29 வீதமானோர் 15 வயதிற்கு குறைந்தோரே }

# ஆபிரிக்கா நோக்கி - தெற்கில் மீளச் சரிசெய்தல்

தற்போது தென்னாபிரிக்காவிலுள்ள இஸ்லாமியரின் சனத்தொகையானது 6 இலட்சம் முதல் 8 இலட்சம் இடையிலே காணப்படுகிறது., மொத்த சனத்தொகையிலே ஒரு சதவீதத்தை காட்டிலும் குறைவாக காணப்பட்டாலும், தேசத்திலே இஸ்லாமியரின் வளர்ச்சி மற்றும் தாக்கமானது சவால்களையும் சந்தர்ப்பத்தையும் பெற்று கொடுக்கிறது.

தென்னாபிரிக்காவிலே ஒரு குறிப்பிட்ட ஜனக்கூட்டத்தினர் மத்தியிலே இஸ்லாமானது மிகவும் பலமுள்ள தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதிலே ஒரு குழு சிறைச்சாலையிலே வசிப்போராவர். சிறைக்கைதிகள் குற்ற மனசாட்சியிலிருந்து மன்னிப்பை எதிர்பார்த்து எதிர்ப்பின் எந்த செய்தியானாலும் அதற்கு திறந்தவர்களாக காணப்படுவார்கள். கிறிஸ்துவின் செய்தி எங்கே பிரசங்கிக்கப்படவில்லையோ, அங்கே ஒரு விடயம் ஸ்தலத்தை நிரப்பிவிடும்.

இஸ்லாமானது பின்தங்கிய கருப்பு ஆபிரிக்கர்கள் மத்தியிலே மிகவும் கவரக்கூடியதாக உள்ளது. சிலவேளை கிறிஸ்தவமானது "வெள்ளையரின்" மதமாக நினைக்கப்படுகிறது. ஏழைகளுக்கு அவசியமான நல்ல கல்வி மற்றும் போசாக்கு போன்றவற்றை கொடுத்து இஸ்லாம் அவர்கள் மத்தியிலே இயற்கையாகவே நற்கீர்த்தியுடன் கட்டியெழுப்பியுள்ளது.

தென்னாபிரிக்காவிலே வல்லமையாக விசுவாசத்திற்கு தடையான செய்தியொன்று கடந்துசென்றுள்ளது. சரித்திர காரியங்கள் நிமித்தம் கடந்தகால பிரிவினைகள் மற்றும் போலியான உபதேசங்களினிமித்தம் இது நடைபெற்றுள்ளது. இறையியல் விவாதங்களானது ஒரே சிருஷ்டிகரையே நாம் நமஸ்கரிக்கிறோம் என்று ஜனங்கள் கேட்ட போது அவர்கள் இஸ்லாமிற்கு மிகவும் சீக்கிரமாக வாசல்களை திறக்கிறார்கள்.

தற்போது தென்னாபிரிக்காவிலே கிறிஸ்தவத்தை காட்டிலும் இஸ்லாம் மிகவும் வேகமாக வளர்ந்து கொண்டு செல்கிறது அது சதவீத வளர்ச்சியை அடிப்படையாக கொண்டே நடைபெறு கிறது, அது சபைக்கு சவாலாக உள்ளது. இஸ்லாம் மற்றும் ஏழைகளுக்கு கிட்டி சேருவது தொடர்பான வேதாக ரீதியான பிரதிகிரியையானது சபையானது அதனை காட்டிலும் அதிகமாக செய்யவும் பிரயாசப்படவும் உள்ளது.



## ஜெப குறிப்புகள்

- தென்னாபிரிக்க இஸ்லாமியரை சந்திக்கும்படியாக செல்பவர்களுக்காக ஜெபம் செய்யவும். இக்காலத்திலே அவர்கள் இஸ்லாமிய கலாச்சாரத்திற்கும், மத பயிற்சிக்கும் இசைவாக காணப்படவும் அச்சத்தியத்தை இயேசு கிறிஸ்துவுடன் ஒப்பிடாதிருக்கும்படியாக ஜெபம் செய்வோம்.
- தென்னாபிரிக்க சிறைச்சாலையிலே அதிகளவு கிறிஸ்தவ தலைவர்கள் வேண்டும் என்று ஜெபம் செய்வோம். ரமதான் மாதத்திலே அவர்கள் அதிகளவு சிறைச்சாலை ஊழியங்களிலே அவதானத்தை திருப்புவர் காரணம், அப்போது அவர்கள் தெளிவான எழுத்து பலகையை போல அல்லாஹு" முன்பாக காணப்படுவார்கள் என்றும் அதினிமித்தம் அவர்களை இலகுவாக இஸ்லாமிற்கு திருப்பிக் கொள்ள முடியும் என்று நினைக்கிறார்கள்.
- கடினமான முகாம்களிலே வாழ்ந்து உணவை பெற்றுக் கொள்ளும்படியாக இஸ்லாமை தழுவுகிற ஜனத்தினருக்காக ஜெபம் செய்வோம். இந்த ஏழை ஜனத்தினர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஜெபியுங்கள் காரணம் அவர்கள் உணவை மாத்திரம் பெற்றுக்கொள்கிறவர்களாய் இராது கிறிஸ்துவுக்குள் புது ஜீவனை பெறும் படியாக அமைய வேண்டும் என்று ஜெபியுங்கள்.
- பின்தங்கிய பகுதியிலே பயிற்சி பெறாத மேய்ப்பருக்காக அவர்கள் விசுவாசத்திலே அசைக்கப்படாது காணப்படும்படியாக ஜெபம் செய்வோம்.

**நாள் 17**

**ஆசிய நோக்கு**

ஜூலை 25

வியாழக்கிழமை

**1993** Arthur Blessitt தாய்வான் விமான நிலையத்தை சுற்றி நடைபாதையை நடாத்தினார்.

**உலகில் வரும் 10 வருடங்களில் 600 மில்லியன் வேலைகள் தேவையாகும்**

# தாய்வானில் வார முடிவில் இந்தோனேசிய தொழிலாளர் செல்லுமிடம்?

ரமதான் மாதத்தின் முடிவான இ·.துல் பித்தார் நாள் 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வந்தது. தாய்ப்பே பிரதான புகையிரத நிலைய வீதிக்கு முன்பாக ஒன்றுகூடிய பத்தாயிரத்திற்கும் அதிகமான இந்தோனேசிய தொழிலாளர்க்கு அது மிகவும் சந்தோஷமாக ஆரம்பிக்கப்பட்டது. அவாகளின் பிரதான இஸ்லாமிய விடுமுறையை கொண்டாடுவதற்காக மண்டபத்தின்



முகப்பிற்குள் அதிகளவாக ஒன்றுகூடினார்கள். இந்த பெரும் கூட்டத்தினரின் கூட்டமானது பிரதான வீதி துணை வீதி மற்றும் அதிகளவு வேகமாக செல்லும் வழித்தெருக்கள் அனைத்தையும் மூடுவதாய் காணப்பட்டது.

பயணிகளின் முறைப்பாடுகளை பெற்றபின்பு தாய்ப்பே புகையிரத நிலைய பிரதான முகப்பின் பெரும்பகுதிகளை வார இறுதிகளிலே மூட ஆரம்பித்தார்கள். அவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்துள்ள இந்தோனேசிய தொழிலாளர் மீது அதிகளவு கோபத்துடன் கிரியைகளை காண்பித்தார்கள். ஆகவே செப்டம்பர் மாதம் 12ம் திகதி ஐம்பது தொழிலாளர்கள் அளவிலே புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டார்கள். அவர்கள் “இன பிரிவினையற்ற” பதாதைகளை ஏந்திக்கொண்டு அவர்கள் பொது இடத்திலே ஒன்றுகூடி “எமக்கு சந்தோஷப்பட ஒரு இடம் அவசியம்” என்று கூறியவாறு அவர்கள் நேரடியாக நிலையத்திற்கு சென்று பிரதான முகப்பு வாசலிலே அமர்ந்தார்கள்.

தாய்ப்பேயில் வெளிநாட்டு தொழிலாளர்கள் வார இறுதியிலே ஒன்று கூடுவது சாதாரண காரியமாக காணப்பட்டது. அது டையு ஆன் மற்றும் டய்ச்சுங் ஆகிய இடத்திலும் கூட இந்த வழக்கம் காணப்பட்டது. அவர்கள் நிலையங்கள், பூங்காக்கள் மேலும் குறிப்பிட்ட வீதிகளின் நடைபாதைகளிலும் குழுக்களாக காணப்படுவார்கள். அந்த எதிர்ப்புகளுக்காகவே அவர்கள் ஒன்றுகூடுகிறார்கள், ஆனாலும் அவர்களில் யாருமே தங்களுக்காக ஒரு தீர்வை பெறும்படியாக அந்த இடத்திலே ஒன்றுகூடவில்லை.

இன்று தாய்வானிலும் ஹொங்கொங்கிலும் இந்தோனேசிய தொழிலாளர்கள் உள்நாட்டு தொழிலா-ளர்களாக காணப்படுகிறார்கள். செப்டம்பர் மாதம் 2012 இலே எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படியாக 155000 பேர் தாய்வானிலும் 151000 பேர் ஹொங்கொங்கிலும் காணப்படுகிறார்கள். அவர்களுள் பெரும்பாலானோர் கிறிஸ்தவ ஊழியருக்கு தொழிலாளர்களாக காணப்படுகிறார்கள்.

ஒரு சில ஹொங்கொங்கிலே உள்ள திருச்சபைகள் இந்தோனேசிய உள்நாட்டு ஊழியர்கள் என்றழைக்கப் படும் கூட்டத்தினருக்கு ஊழியங்களை செய்கிறார்கள். அவர்கள் இணையத்தளம், சமூகம் கணணி கல்வி மற்றும் மொழிப்பயிற்சியை வழங்கும் பயிற்சி நிலையங்களை நிறுவி உதவி செய்கிறார்கள். மற்றைய கிறிஸ்தவ உதவிகளாக ஹொங்கொங் உட்பட தாய்வான் நமஸ்கார மற்றும் ஐக்கிய ஸ்தானங்கள் மற்றும் தங்குமிட வசதிகள கொண்ட மனைகளினூடாக உதவிகளை செய்கிறார்கள்.

தாய்வானிலே உள்ள இந்துநேசிய தொழிலாளர்கள் மத்தியிலே ஒரு சில கிறிஸ்தவ சபைகள் மாத்திரமே ஊழியஞ் செய்கின்றார்கள்.

## ஜெப குறிப்புகள்

- ஹொங்கொங் போல தாய்வானிலும் சபைகள் இந்துநேசிய தொழிலாளருக்கு நிலையங்களை ஸ்தாபிக்கும்படியாக ஜெபம் செய்வோம்.
- தாய்வானிலுள்ள சபைகள் தங்களுடைய நீண்டகால உள்நாட்டு வேலையாட்களை அன்பினாலே போய் சேர தேவ ராஜ்ய தரிசனத்தை உடையவர்களாக செயற்பட வேண்டுமென்று ஜெபம் செய்வோம்.
- எவ்வாறு வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து அவர்களை சீஷராக்க வேண்டும் என்ற நீண்டகால திட்டங்களை வகுத்து ஸ்தாபனங்களோடு சேர்ந்து சபைகளும் இசைந்து செயற்பட வேண்டும் என்று ஜெபம் செய்வோம்.
- இந்துநேசியாவின் வெளிநாட்டு ஊழியர்கள் தங்களது இருதயத்தை ஆண்டவருக்கு திறக்க வேண்டும் என்று ஜெபம் செய்ய வேண்டும்.

# நாள் 18

அறியப்படாத

ஜூலை 26

வெள்ளிக்கிழமை

1993 உலக சனத்தொகை 5.5 பில்லியனை எட்டியது.

**4.3 மில்லியன் இஸ்லாமிய தேச குழந்தைகள் 1 வருடத்தில் மரிக்கின்றனர்**

# முஸ்லிமாக பிறந்தவர்: பிள்ளைகளின் கரங்களை விடாதீர்

ஆபிரிக்காவின் உப சாரா பகுதியிலே கடந்த வருடம் பிறந்த ஏழு குழந்தைகளில் ஒரு குழந்தை தன்னுடைய ஐந்தாவது பிறந்தநாளை கொண்டாட முன்பு மரித்துவிட்டது. அதிலே தப்பித்தவர்களில் 65 சதவீதத்தினர் மாத்திரம் பாடசாலைக்கு போகும் சந்தர்ப்பத்தை பெற்றிருந்ததோடு அதிலே ஒரு சிலர் அதனை நிறைவேற்றிவிட்டனர்.

பெரும்பாலான இஸ்லாமிய குழந்தைகள் அதிகளவு பஞ்சத்தின் மத்தியிலே பிறக்கிறார்கள். சிலர் தங்கள் தேவைகளை நிவிர்த்தி செய்யும்படியாக பிச்சை எடுத்தல், அநேகர் துஷ்பிரயோகிக்கப்பட்டு போதைவஸ்து அல்லது விபச்சாரத்திற்கு ஈர்க்கப் படுகிறார்கள், சிலர் வன்முறை குழுக்கள் அல்லது தீவிரவாதிகளின் குழுக்களிலே சேர்ந்துகொள்கிறார்கள். இளம் பிள்ளைகளை குறித்து ஆர்வத்தை கொண்ட தேவனுடைய மனுஷர்கள் தெருவிலே கூடாரம் போட்ட, அனாதை கள் போன்ற பிள்ளைகளுக்கு உணவு வழங்கள் மற்றும் குழந்தை களுக்கு கல்வி கற்பித்தல் போன்ற காரியங்களை செய்வதோடு, இன்னும் அதிகளவு செய்ய வேண்டியுள்ளது. உலகத்திலே கால்பகுதியினர் ஏறத்தாழ 2.4 பில்லியன் குழந்தைகள் இஸ்லாமிய நாடுகளிலே வசிக்கிறார்கள். அதாவது கணக்கெடுப்பின் படியாக ஏறத்தாழ 600 மில்லியன் குழந்தைகளாவர். உலகமெங்குமுள்ள இஸ்லாமிய சனத்தொகையிலே 40 சதவீதத்தை காட்டிலும் அதிகமானோர் குழந்தைகளாவார்கள். இஸ்லாமிய நாடுகளிலே வாழ்கிறதான ஒரு சில குழந்தைகள் மிகவும் அதிஷ்டசாலிகள், ஆனாலும் அவர்கள் ஓரங்கட்டப்பட்ட, அடிப்படை வசதியான சுகாதாரம், கல்வி மற்றும் பாதுகாப்பு ஆகியவை புறக்கணிக்கப்பட்டதாக காணப்படுகிறார்கள்.



ஐக்கிய நாடுகளின் கூற்றுப்பட "இஸ்லாமிய உலகிலே உள்ள 4.3 மில்லியன் குழந்தைகள் ஒவ்வொரு வருடமும் மரிப்பதோடு, சில நாடுகளிலே மில்லியன் கணக்கிலே பாலர் பாடசாலைக்கு செல்லவில்லை எனவும் குழந்தை பிறக்கும்போது ஆறு பெண்களிலே ஒரு பெண் மரிக்கிறாள்" அங்கே அதிகளவு அவசியம் காணப்படுகிறது. ஆபிரிக்காவிலே ஒரு பெரிய புற்தரையிலே ஒரு தம்பதியினராலே ஒரு கதையொன்று கூறப்பட்டது. அவர்கள் இருவரும் ஒவ்வொரு பக்கமாக தங்கள் மகனின் கரத்தை பிடித்தவர்களாய், அவர்கள் அந்த புற்தரையிலிருந்து வெளியே வந்தபோது அவர்கள் தங்களது குழந்தையின் கரத்தை மற்றவர் பிடித்திருக்கிறார் என்று எண்ணி அவனை தவற விட்டதை அறிந்து கொண்டார்கள். அவர்கள் உடனே ஒரு ஏணியை தேடி தன்னுடைய மகனை காப்பாற்றும்படியாக தேடினார்கள் அப்போது அயல் கிராமத்திலிருந்தவர்களின் உதவியையும் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். மூன்று மணித்தியாலங்கள் கடந்த பின்பு கரத்தை பிடித்து புற்கள் நடுவே தேடி தாமதமாகவே குழந்தையை கண்டு பிடித்தார் கள். அப்போது அவனது தந்தை மிகவும் வேதனையுடன் அழுது நாம் அவனது கரத்தை பிடித்து உடனே இதனை செய்திருந்தால் சிலவேளை அவனை காப்பாறியிருக்கலாம். இஸ்லாமிய நாடுகளிலே உள்ள குழந்தைகளை பாதுகாக்கும்படி வேலைசெய்கிறவர்களுக்காக எம்முடைய கரத்தை நாம் ஒன்று சேர்த்துகொள்வோம்.

## ஜெப குறிப்புகள்

- ⊠ ஆண்டவரின் வார்த்தையின் கட்டளையும் நற்செய்தியுடன் பிள்ளைகளை போய் சேர அநேக ஜனங்கள் தங்களது பிரதிகிரியையும் இதற்காக கரத்தையும் திடப்படுத்தும்படியாக ஜெபம் செய்வோம். (புலம்பல் 2:19)
- ⊠ இஸ்லாமிய நாடுகளிலேயுள்ள குழந்தைகளுக் கான ஆண்டவரின் பாதுகாப்பு மற்றும் கிருபைக்காக ஜெபம் செய்வோம். (நீதி 22:6)
- ⊠ தேவையுடன் காணப்படும் இஸ்லாமிய குழந்தைகளுக்கு உதவி செய்யும்படியாக எவ்வாறு உங்களை சேர்த்துக் கொள்ள முடியும் என்பதை ஆண்டவர் உங்களுக்கு காண்பிக்கும் படியாக ஜெபம் செய்வோம். (மத்தேயு 28:19)

நாள் 19

சாரம்சம்

ஜுலை 27

சனிக்கிழமை

1993

1978 -82 யுத்தத்திற்கு பின், ஆப்கானிஸ்தான் யுத்த பூமியாக காணப்பட்டது.

# பெண்களின் கல்வியிலே விரக்தி

கடந்த இருபது வருடங்களாக இஸ்லாமிய பெண்களின் கல்வியானது பின்னடைவை நோக்கி சென்றுள்ளதோடு, விரக்தியினிமித்தம் முன்னோக்கி போக முடியாது காணப்பட்டது. இடத்திற்கு இடம் குடும்பத்திற்கு குடும்பம் அது மாறுவது போல இஸ்லாமிய பெண்களின் கல்வி முறையானது மாற்றமடைந்துள்ளது.

1990 களில் தலிபான்களின் ஆக்கிரமிப்பு ஆரம்பமானது, கற்றுகொள்ள வேண்டும் என்ற பெண்களின் ஆதிக்கத்திற்கு பாரிய எதிர்ப்பு ஒன்று ஏற்பட்டது. பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானிலே காணப்பட்ட தொழில்சார் பெண்கள் தங்களது தொழிலை விட்டு விட்டார்கள். பாடசாலைக்கு செல்வது பெண் பிள்ளைகளுக்கு தடை செய்யப்பட்டது. இஸ்லாமிய பெண்களுக்கு வாசிப்பதற்கு மாத்திரம் தெரிந்திருந்தால் போதும் அவர்கள் எழுதுவதற்கு எல்லாம் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்ற பொதுவான ஒரு அடிமைத்தனம் காணப்பட்டது. 2006 செப்டம்பர் மாதம், ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான மற்றும் கலாச்சார அமைப்பின் அறிக்கையின் படியாக (UNESCO) பெரியோரின் கல்வி வீதமானது அந்நாட்டிலுள்ள ஆண்களின் கணக்கெடுப்பின்படி காணப்பட்டது என்றார்கள். எகிப்திலே 59.4% கற்றுள்ளார்கள் என்றும், மத்திய கிழக்கு நாடுகளான மொரோக்கோ, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் யெமன் வாசிப்பு வீதம் குறைந்து செல்லும்போது அதன் சதவீதமும் குறைந்து செல்கிறது: ஐக்கிய நாடுகளின் கலாச்சார, விஞ்ஞான மற்றும் கலாச்சார அறிக்கையின்படியாக சில இடங்களிலே, கற்றுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் இடையிலான் வித்தியாசம் 90% விட அதிகமாகும்.

எவ்வாறாயினும், தற்போது அது சற்று அதிகரித்து உள்ளது. ஈராக் மற்றும் ஐக்கிய அரபு ராஜ்யத்திலுள்ள மாணவர்களில் பெரும்பாலானோர் பெண்களாவார்கள். துருக்கி, மலேசியா, மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளிலே பெண்களின் கல்வியானது ஒரு பிரச்சினையாக எழுந்துள்ளது. சில நாடுகளில் இன்னும் சண்டைகள் இதற்காக நடந்துகொண்டிருக் கின்றன. அண்மையிலே ஈரானிலே ஒரு பெண் 70 மொழிகளிலே பட்டம் வென்றுள்ளார் என்று அறிந்து அவரை தடை செய்துள்ளார்கள்.

அனேக இஸ்லாமியர் அருமையான எதிர்காலத்தை நோக்கி நகர்கிறார்கள். நீலொப்பர் ஹராம் என்பவர் சமூக தலைவர்கள் மற்றும் நவீன கருத்துக்களை உருவாக்குகிறவர்கள் தங்களது அவதானத்தை இந்த பிரச்சினை மீது செலுத்தும் வரையிலே, அனைவருக்கும் அநேக சமூக விரக்திகள் மற்றும் வருத்தங்கள் காத்திருக்கின்றன. தாய்மார், மகள்மார்கள் மற்றும் சகோதரிகள் பின்பாக காணப்பட தகப்பன்மார், மகன்மார் மற்றும் சகோதரராலே முன்னோக்கி போக முடியுமா?



## ஜெப குறிப்புகள்

- ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானிலுள்ள மகளிர் பாடசாலைகளை கட்ட எடுக்கும் முயற்சிக்காக ஜெபம் செய்வோம். பிள்ளைகளை பாடசாலையிலே வைத்து கைதுசெய்கிற மற்றும் பயமுறுத்துகிற நடவடிக்கைகளுக்காகவும் அவர் களின் பாதுகாப்பிற்காகவும் ஜெபம் செய்வோம்.
- இஸ்லாமிய நாடுகளிலே பெண்களின் கல்விக்காக வாதாடுகிற ஒவ்வொருவருக்கும் அவர்களின் பாதுகாப்பு தங்களது காரியங்களை முன்னிலைப்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் மற்றும் தைரியம் கிடைக்கும்படியாக ஜெபம் செய்வோம்.

"இந்த யுத்தம் நிறைவடையும்போது, ஆப்கானிஸ்தானுக்கு நீங்கள் தேவைப்படலாம் அங்குள்ள ஆண்களை காட்டிலும் ஒரு சமுதாயத்திலே பெண்கள் கற்றில்லாவிட்டால் அச்சமுதாயத்தாலே வெற்றிபெறக்கூடிய சந்தர்ப்பம் இல்லை".

காலித் ஹொசெய்னி,
ஆயிரம் பிரகாசமான சூரியன்கள்.

*UNESCO, Literacy for life (EFA Global Monitoring Report), 2006.*

**நாள் 20** பணி

ஜுலை 28 ஞாயிற்றுகிழமை

**1993** பெனாசிர் பூட்டோ பாகிஸ்தானின் முதலாவது பெண் ஆளுனராக தெரிந்தெடுக்கப்பட்டார்.

**{ சித்ரால் பௌத்த பகுதி, இந்துவாய் மாறி தற்போது இஸ்லாமாயுள்ளது }**

# தீவிரவாத யுத்த பயம்: பாகிஸ்தானின் சித்ரால் பகுதி

“பலமொழிக்காக எல்டராடோ” என்பதே பாகிஸ்தானின் வடகிழக்கு பள்ளத்தாக்கிலே உள்ள மலைச்சரிவாகிய சித்ராலை அழைப்பார்கள். ஒரு டசன் மொழிகள் அங்கே பேசப்படுகின்றன!. கௌவார், அல்லது “கௌவின் மொழிகள்” என்று அழைக்கப்படும் இம்மொழிக்கு ஏறத்தாழ 300,000 பேச்சாளர்கள் உள்ளனர்.

இந்து குஷ் மற்றும் இந்து ராஜ் என்னும் உச்சிகளை சார்ந்ததாகவே சித்ரால் என்னும் இவ்விடம் தழுவியுள்ளது. குளிர்காலத்திலே, இந்த பகுதியிலே பல இடங்கள் பனியாலே மூடப்பட்டு காணப்படும். பனியினாலே மூடப்பட்ட இடத்தினை



கடந்து போக முயற்சி செய்த அநேகர் மரித்துள் ளனர். இறுதியாக பள்ளத்தாக்கு வழியாக போக ஒரு குகை ஒன்று கட்டப்பட்டது. உங்களாலே இந்த பயணத்தை மேற்கொள்ள முடியுமானால், நண்பர் களை காணக்கூடிய சந்தர்ப்பத்தை பெறுவீர்கள், அதுபோல சமாதான விரும்பி என்னும் நாமத்தாலும் சூட்டப்படுவீர்கள். இதனிடையே பாகிஸ்தானின் சில இடங்கள் தீவிரவாதிகளாலே ஆளுகை செய்யப்படுகி றது, இப்பகுதிகள் அநேக காலங்களாக தீவிரவாத அச்சுறுத்தலில் காணப்படுகிறது. இது மாற்றமடை-யும் என்ற ஒரு பயமும் இந்த இடத்திலே காணப்படுகிறது.

## ஒற்றுமை

உலகிலே கடினமான இந்த பகுதியிலே ஜனங்கள் ஏழ்மையாகவும் வேலை வாய்ப்பற்றும் காணப்படு கிறார்கள். அதனாலே ஆண்கள் எண்ணை வளமிக்க மத்திய கிழக்கு நாடுகளுக்குப் போய் வாழ்கிறார்கள். பெரும்பாலும் தன்னுடைய தாய், பாட்டி, மனைவி, மச்சாள், மருமகள், அண்ணனின் மகள் என அனைவரது காரியங்களை குறித்தும் ஆண் பொறுப்புடையவனாக காணப்படுகிறான். அவர்கள் தங்களது குடும்பத்தினருக்கு உதவி செய்யும்படி வீடுகளுக்கு பணம் அனுப்புவார்கள். புரிந்துணர்வு அவர்களது பயணத்திற்கு மிகவும் அவசியமான-தாகும். தனி நபராக அந்த அருமையான கடினமான பிரதேசத்தை கடந்து போக முயலும் சில சந்தர்ப்பங்களில் அதை இழந்து போகவுங்கூடும்.

ஒரு விடயம் அந்த இடத்திலே இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் ஏற்கனவே காணப்படுகிறார்களா? அங்கே ஒரு சபையை கட்டக்கூடிய சாத்தியம் உள்ளதா? அவரது வார்த்தை இன்னும் கௌவார் மொழிக்கு மொழிபெயர்க்கப்படவில்லை. சித்ரால் பள்ளத்தாக்கிலே ஒரு பாரிய தேவை அவசியமாயுள்ளது.

## ஜெப குறிப்புகள்

- இயேசு கிறிஸ்துவின் தரிசனம் மற்றும் சொப்பனத்திற்காக ஜெபம் செய்யுங்கள் (அப்போஸ்தலர் 2:17 கடைசி நாட்களில் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லு வார்கள்: உங்கள் வாலிபர் தரிசனங்களையும் உங்கள் மூப்பர் சொப்பனங்களையுங் காண்பார் கள்)
- தீவிரவாதிகளின் தாக்கத்திலிருந்து பள்ளத் -தாக்கு பாதுகாக்கும்படியாக ஜெபம் செய்வோம் (சங்கீதம் 121:1-2 எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.)
- கௌவார் மொழியிலே வேதாகமம் மொழிபெயர்க்கப்பட ஜெபம் செய்வோம்.
- சித்ராலிலே அநேக உள்நாட்டு விசுவாசிகள் ஊழியஞ்செய்ய முன்வரும்படி ஜெபிப்போம் (யோவான் 3:34 - தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்: தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்)

**நாள் 21** சந்திக்கபடாத

ஜுலை 29 திங்கட்கிழமை

1993 முதலாவது ஜனநாயக தேர்தலில் “படாசே“ மத்திய ஆபிரிக்க குடியரசின் ஜனாதிபதியானார்

**ம.ஆ.கு இல் 10 வீத முஸ்லிம், 51 வீத கிறிஸ்தவர், 29 வீத கத்தோலிக்கர் உள்ளனர்**

# மத்திய ஆபிரிக்க குடியரசு: இஸ்லாமியரை புரிந்திடல்



குறிப்பு: பெரும்பான்மையான “கிறிஸ்தவர்களை” செய்முறை ரீதியான நம்பிக்கைகள் மற்றும் பயிற்சிகள் அதிகளவு தாக்கத்திற்குட்படுத்துகின்றன.

**மத்திய ஆபிரிக்க குடியரசில் பஞ்சம்.**

1960 ஆம் ஆண்டு முன்னாள் பிரான்ஸ் நாட்டு அளுகையான உபங்கி - ஷரி சுதந்திரத்தின் அடையாளமாக மத்திய ஆபிரிக்க குடியரசின் மீது வந்தது. இராணுவ ஆட்சியில் பெரும்பான்மையான ஒழுங்கீனமான ஆளுகையினால் 1993 ஆம் ஆண்டு ஜனநாயக ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டது.

மத்திய ஆபிரிக்க குடியரசு என்பது ஆபிரிக்க கண்டத்தின் மையத்திலே காணப்படுகிறது. அது வித்தியாசமான காலநிலை மற்றும் கடினமான பார்க்க அரிதான இயற்கை வளங்களான வடக்கிலே தனித்துவமான உப சாரா பாளைவனமும் தெற்கிலே அருமையான மழைவீழ்ச்சியும் உடையதாக காணப்படுகிறது.

மத்திய ஆபிரிக்க நாடு முழுவதும் இயற்கை வளங்களான மாணிக்கம், தங்கம், யுரேனியம் மற்றும் பலகை போன்ற காரியங்கள் காணப்பட்டும் அவை இன்னும் வறுமை நாடுகளாகவே காணப்படு கின்றன. அவைகள் நிலப்பிரிகையினாலே அவஸ்தைப்படுவதோடு மத்திய ஆபிரிக்க நாடுகளில் தனிமையாக்கப்பட்டு காணப்படுகிறது. ஒரு உயர்தர வாழ்க்கை வாழ்வதற்காக அயல் நாடுகளை சார்ந்து வாழவேண்டிய சூழ்நிலை இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க தாக்கங்களாக அரசியல் பிரச்சினைகள் மற்றும் பிழையான முகாமைத்துவம் அண்மைக்காலத்தில் அரசியலில் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

**மத்திய ஆபிரிக்க குடியரசில் இஸ்லாமியரின் முதலீடு**

தற்போதைய பொருளாதார அழுத்தங்கள் மத்திய ஆபிரிக்க குடியரசிலே இஸ்லாமியத்தின் வளர்ச்சிக்கு ஒரு ஆதாரமாக அமைந்துள்ளது. வியாபாரங்கள் பெரும்பாலானவை லெபனானியர்கள், அராபியர்கள், ஹவுசாக்கிகள், செனகலர்கள், மாலியன்கள் சான்டியன்கள் போன்ற வெளிநாட்டிலிருந்து வந்துள்ள இஸ்லாமியருக்கு சொந்தமானதாயுள்ளது. இஸ்லாமியத்தை அறிக்கை செய்து அதனை தைரியப்படுத்தும் படியாக அநேக அராபியர்கள் தங்களது வியாபாரத்தை மத்திய ஆபிரிக்க குடியரசிலே முதலீடு செய்துள்ளார்கள்.

வடபகுதியிலே வாழும் இஸ்லாமிய கோத்திரமான ருங்காஸ் (சனத்தொகை 37,000) அவர்கள் போய் சுவிசேஷம் சேராத விசேஷமாக கிறிஸ்தவர்களை விட துரந்து வாழ்கிறார்கள். மத்திய ஆபிரிக்க குடியரசிலும் இன்னும் போய் சுவிசேஷம் சேராத அராபிய பெருந்தொகையினர் வாழ்கிறார்கள். ஒரு சில அவைகளிலே காணப்படுகிறது. அண்மைகாலத்திலே இஸ்லாமியர் மத்திய ஆபிரிக்க குடியரசிலே இஸ்லாமியர் செய்துள்ள வேலைகளை பார்க்கும்போது மெய்யாகவே ஆண்டவர் சூழ்நிலைகள் மத்தியிலே காணப்படுகிறார் என்று கூற முடியும். அண்மையில் இஸ்லாமிலே மிகவும் தாக்கத்தை ஏற்படுத்திய இரண்டு தடவைகள் மக்கா யாத்திரை சென்ற இஸ்லாமிய தலைவன் ஒருவர் கிறிஸ்துவை நோக்கி திரும்பியதுடன் அவர் அவ்வளவு அழுத்தங்கள் மத்தியிலும் தன்னுடைய கிறிஸ்தவ சாட்சியை தக்கவைத்துள்ளார். மிகவும் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் இம்மாற்றமானது ரமதான் மதத்திலே நடைபெற்றது.

**ஜெப குறிப்புகள்**

- நாட்டிற்குள் உள்ள பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளை புறக்கணித்து ஆண்டவருடைய சமாதானம் தேசம் முழுவதுமாய் கடந்து வரும்படியாக ஜெபம் செய்வோம். இது தொடர்ந்து காணப்பட வேண்டும் என்று ஜெபம் செய்யவும்.
- ஆண்டவருக்கு விசுவாசமுள்ளவர்களாக உள்ளதோடு கிறிஸ்தவர்கள் வியாபாரத்திலே செழிப்படைய வேண்டும் என்று ஜெபம் செய்வோம். இஸ்லாமிற்கு அநேகர் செழிப்பை கண்டு ஈர்க்கப்படுகிறார்கள் (நீதிமொழிகள் 13:7)
- பயிற்சி நிகழ்ச்சிகள் அங்கே நடைபெறும்படியாக ஜெபியுங்கள். அதற்கூடாக கிறிஸ்தவர்கள் இஸ்லாமிருக்கு எவ்வாறு சுவிசேஷம் சொல்லப்பட வேண்டும் என்பதை அறிந்துகொள்ள முடியும்.

நாள் 22 ஜுலை 30 செவ்வாய்க்கிழமை 1993

கனடா பணி

254,809 கனடாவிற்கு குடியேறிச் சென்றார்கள்.

முஸ்லிம்களோடு ஒன்றிணைதல் வெளிச் சந்திப்பிற்கு சிறந்தது

# புதியவரை வரவேற்றல்: திறந்த மனதோடு உபசரிப்பு வீடுகள்



ஜெக் ∴ப்லெட். அவன் ஒரு விஷேத்தன்மை வாய்ந்தவன் என்று ஒரு சகோதரன அவனைப்பார்த்து கூறிவிட்டான். ஜெக்குடைய தகப்பனார் ஒரு இஸ்லாமிய மதகுருவாவார். அவர் தன்னுடைய மகன் இயேசுவை பின்பற்றுகிறவனாக வந்துள்ளதாக கண்டுகொண்டார். சில வருடங்களுக்கு பின்பு ஜெக் இறையியற் படிப்பை கற்கும்படியாக கனடா நாட்டிற்கு வந்திறங்கினான். தனிமையாக குடும்பத்தை விட்டு மிகவும் கடுமையான ஒரு தேசத்திற்கு வந்துள்ளான்.

யுத்தம், ஒழுக்கமின்மை முரண்பாடுகள், சமய உபத்திரவங்கள், இயற்கை அனர்த்தங்கள் நிமித்தம் ஜனங்கள் அங்கிருந்து விலகி வட அமெரிக்க நாடுகளுக்கு வருகிறார்கள். எவ்வாறு எவ்வித ஆயத்தமுமில்லாத வெளிநாட்டவர்கள் இந்த நாட்டிலே காணப்பட முடியும், அவர்கள் மெய்யாகவே இங்கே வரவேற்கப்படவில்லையா?
2008 ஆம் ஆண்டு புதியவர்களுக்காக ஒரு நிலையம் கனடாவிலே திறந்து வைக்கப்பட்டது. (ஜெக்கும் இதிலே ஒரு அங்கமாக காணப்பட்டான்) இதன் நோக்கமானது இஸ்லாமியரை அன்புடன் வரவேற்று இந்த புதிய நாட்டிலே வாழும்படியாக அவர்களுக்கு நடைமுறை உதவிகளை வழங்குவதாகும். நட்புறவு மிகவும் வலியுறுத்தப்பட்டு புதியவர்கள் ஒரு வீட்டை கட்டும்போது அதற்கு உதவி செய்தல், ஆங்கிலம் கற்றுகொடுத்தல், பிள்ளை பராமரிப்பை பெறல் வீட்டு வேலை போன்றவற்றிற்கு உதவுதல் போன்றவையாகும். இன்று தாய்மாருக்கு குழந்தைகளை நீராட்டுவதற்கு ஆண், பெண் பிள்ளைகளுக்காக உதைப்பந்தாட்ட முகாம்களை நடத்துவதற்கு, முழு குடும்பத்திற்கான சமூக பண்டிகைகள் கொண்டாடுவதற்கு மற்றும் வேறு சில காரியங்களை இந் நிலையம் புதிய விருந்தினருக்காக நடாத்தி வருகிறது.

இஸ்லாமியர் கிறிஸ்தவ நண்பர்களுடன் இணைவது போல இருதய இருதயத் தொடர்பு ஒன்று சேர்க்கப்படுகிறது. சிலர் ஏற்கனவே ஈசா-அல்-மாஷி (மேசியாவாகிய இயேசுவை) பின்பற்ற தொடங்கி விட்டார்கள். மற்றவர்கள் சமாதான பிரபுவிடம் போய் சேரும் வழியிலே காணப்படுகிறார்கள். சர்வதேச குழுவினர் அவர்களுக்கு ஊழியஞ்செய்த போது சுவிசேஷம் என்னும் வித்தானது நாட்டப்பட்டு விட்டது.

சேன் இஸ்லாமிய மதகுருவாக மாற பயிற்சியிலே ஈடுபட்டார். தன்னுடைய இருபத்திரண்டாவது வயதிலே அவன் இயேசுவை பின்பற்றுபவனாக மாறினதால் அவனது தாய் அவன் மரித்து விட்டான் என்று எண்ணி, புதைத்தும் விட்டாள்! இன்று சேன் புதிதாய் வரும் விருந்தினர் மத்தியிலே ஊழியஞ் செய்யும் சர்வதேச குழுவிலே ஒரு அங்கத்தவனாக உள்ளான். இந்த நிலையத்திலே சேன் சந்திக்கிற அநேக நபர்கள் அவனது சொந்த நாட்டிலிருந்து வருகிறவர்களாவார்கள். ஆச்சரியமாக அந்நாட்டிலிருந்து வருகிறவர்களில் அநேகர் அவனது குலத்தை சேர்ந்தவர்களாக காணப்படுகிறார்கள்.

இன்று அவனது தாய் ஆபிரிக்காவிலே தன் மகன் வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களுக்கு உதவி செய்கிறான் என்ற பெருமையுடன் காணப்படுகிறாள்.

## ஜெப குறிப்புகள்

- விலகி வந்துள்ள இஸ்லாமியர் புதிய மக்களோடு கலாச்சாரம் மற்றும் மொழியிலே இணைந்து காணப்படுவதை கடினமாக காண்கிறார்கள். முதிர்ச்சியான கிறிஸ்தவர்கள் அவர்களின் நண்பர்களாகவும் புதிய குடும்பமாக காணப்பட வேண்டும் என்று ஜெபம் செய்வோம்.
- ஆண்டவர் விசுவாசிகளை சமாதானத்தின் ஜனத்தாரை சந்திக்க வழிநடத்தும்படியாக ஜெபம் செய்வோம் (லூக்கா 10), மேலும் இஸ்லாமியருக்கு சமாதான பிரபுவை அறிமுகஞ்செய்ய ஒரு கருவிகளாக இவர்கள் காணப்பட வேண்டும் என்று ஜெபம் செய்வோம்.
- மேற்கத்திய வாழ்த்துதலான "ஹாய்" என்று சொல்லும்போது வட அமெரிக்காவிலுள்ள அனேக இஸ்லாமியருக்கு அது ஆச்சரியமாக உள்ளது. இன்று "ஹாய்" என்னும் வார்த்தையானது சமர்ப்பிக்க நீண்ட நட்புறவு அவசியமாயுள்ளது. அதற்கு ஒரு முயற்சியை செய்யுங்கள்.!

# நாள் 23

சோமாலியா, ஆபிரிக்கா.

ஜுலை 31

புதன்கிழமை

1993

அமெரிக்க இராணுவம் மகாதியிலே "கருப்பு நிழலின் வீழ்ச்சி" யை மேற்கொண்டனர். 22 அமெரிக்க இராணுவத்தினரும் 1000ற்கு அதிகமான சோமாலியர்களும் மரித்தனர்.

# உபத்திரப்பட்ட அகதிகள்: உலகின் மிகப்பெரிய முகாம்

**"ஹா ரஜோ திங்! - ஒருபோதும் கைவிட வேண்டாம்"**

கென்யாவின் டடாப் என்னும் இடத்திலுள்ள ஐக்கிய நாடுகள் அகதிகள் முகாமில் உஷ்ண பாலைவனக் காற்று வீசி கூடாரங்களை அசைக்க ஆரம்பித்தது. கதிஜா அங்கே காணப்பட்ட அரை மில்லியன் சோமாலிய அகதிகளுடன் இருந்தாள். இருபது வருட உள்நாட்டு யுத்தத்தில் போராடிய கதிஜா குழந்தைகளின் கரத்தை பிடித்தவாறு ஓடுகிறாள். அவள் மற்றவர்களைப்போல, அதிகளவு தூரம் போகவில்லை. இவளும் ஒரு அகதியாக இந்த முகாமிலே ஒதுக்கப்பட்டவளாக காணப்பட்டாள். இன்னும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபடியால் அவர்களுக்கு தங்களது வீட்டிற்கு செல்ல முடியவில்லை, ஒரு சில நாடுகள் அழைக்கிற வண்ணமாக அவர்களாலே அதற்குள் போகவும் முடியவில்லை. டடாப் என்னும் இடத்திலுள்ள முகாமே ஐக்கிய நாடுகளின் மிகவும் பெரிய உலக-ளாவிய அகதிகளின் முகாமாகும். ஏற்கனவே பிறந்து வளர்ந்த சந்ததியினருக்கு டடாப் என்னும் ஸ்தலமானது அகதிகள் வாழும் மிகவும் கடினமான ஸ்தானமாக காணப்படுகிறது.

இந்த முகாமிலே பாதுகாப்பு மிகப் பெரிய விடயமாக காணப்பட்டது. அல்- ஷபாப் என்னும் தீவிரவாத இயக்கம் பயத்தை கொடுத்துள்ளது. வாழ்க்கையா னது முகாமிற்குள் சுமக்க முடியாதுள்ளது. பெண்கள் துஷ்பிரயோகப்படல், சிறு பையன்கள் அல் ஷபாபிற்காக யுத்தம் செய்யும்படி இணைக்கப்படல், ஐக்கிய நாட்டு உதவியாளர்கள் கடத்தப்படல், நிலக்கண்ணி வெடிப்பால் வாகன வெடிப்பு ஏற்படல் என அனைத்திலும் ஒரு குறைவு காணப்பட்டது.

### ஒருவராலும் அவளை பாதுகாக்க முடியவில்லை

அம் முகாமிலே காணப்பட்ட சோமாலியர் மத்தியில் ஒரு சில கிறிஸ்தவர்களை உங்களாலே காண முடியும், அவர்களில் கதிஜாவும் ஒருவளாவாள். அது இலகுவானதல்ல. அவளுடன் அநேகம் பின்பற்றும் கிறிஸ்தவர்கள் அல்- ஷபாபினாலே கொலை செய்யப்பட்டுள்ளனர். வேதாகமத்தை வைத்துக் கொண்டு இரகசிய சபைக்கு செல்கிற யாரை கண்டாலும் இலகுவாக குரல் வளையை அறுத்து கொலை செய்து விடுவார்கள். இந்த அடிப்படை இஸ்லாமியர் ஷரியா விதியை பின்பற்றுகிறபடியாலே உபத்திரவத்தினாலே அவர்களை விட்டு ஓட அவளுக்கு நேரிட்டது. உள்நாட்டு அதிகாரிகளினாலே அவளை பாதுகாப்பதற்கு முடியாது. டடாப்பை விட்டு வெளியேறினாலே கதிஜாவும் அவளது பிள்ளைகளும் சுதந்திரவாளிகளாக காணப்படுவார்கள். இறுதியாக அவள் நைரோபியை நோக்கி வந்தாள்.

நாம் சோமாலியா தேசத்திற்காக தேவனுடைய அவதானத்தை பெற்றுகொள்ள வேண்டியது அவசியம். அவர் வேதனைப்படுகிற இத் தேசத்திற்கு சமாதானத்தை அருளுவார். நேரம் வரும்போது அநேக சோமாலியர்கள் தங்களது வாழ்வை எம்முடைய ஆண்டவரும் இரட்சகருமான இயேசுவின் அன்பான கரத்திலே ஒப்படைப்பார்கள்.




## ஜெப குறிப்புகள்

- சுவிசேஷத்திற்கான ஒரு திறப்பு குறித்து ஜெபம் செய்யுங்கள். அதற்கூடாக விசுவாசிகள் டடாப் மற்றும் சோமாலியாவிலே சமாதானத்தை காண கூடும்.
- விசுவாசிகள் ஆவியிலே பெலனுள்ளவர்களாய் வளர்வதோடு, தங்களுடைய விசுவாசத்திலே உறுதியாயிருப்பவர்கள் உபத்திரவம் மற்றும் தனிமையாக்கம் போன்றவற்றினாலே ஏற்படக்கூடிய அழுத்தத்திலிருந்து தங்கள் விசுவாசத்தை உறுதியாக பற்றிக்கொள்ள கூடும்.
- தனிப்பட்ட தொடர்பு, எழுத்தாக்கங்கள் மற்றும் இணையத்தளத்தில் செய்யப்படும் சுவிசேஷ பணிக்காக ஜெபம் செய்யுங்கள்.
- "ஹா ரஜோ திங்! - ஒருபோதும் கைவிட வேண்டாம்"

# சாட்சி

## இஸ்லாமிய உலகிற்கான சமாதான தூதுவர்

"நான் இஸ்லாமியனாக ஆண்டவரை பற்றி அறிய வேண்டும் என்ற அவசியத்துடன் காணப்பட்டேன். இயேசு கிறிஸ்துவுக்கூடாக என்னுடைய அன்பான பரலோக பிதாவை சந்தித்தேன். என் பாவங்கள் மன்னிக்கப்பட்டதற்கான ஒரு உறுதியை கேட்டேன். இயேசுவுக்குள்ளாக என் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்துகொண்டேன். நித்திய மீட்பிற்கான ஒரு உறுதியை பெறும்படியாக வாஞ்சித்து பரலோகம் தான் எனது இறுதி ஸ்தலம் என்பதை அறிந்தேன். கிறிஸ்துவை குறித்து அறியவும் விசுவாசிக்கவும் இஸ்லாம் எனக்கு பெற்றுதந்த மார்க்கங்களுக்காக நன்றி செலுத்துகிறேன்"

ஒரு பாவி மனந்திரும்பும் போது பரலோகத்திலே மகிழ்ச்சி ஏற்படுமானால் வீடு திரும்பிய ஒரு சோமாலிய நாட்டு இஸ்லாமியனுக்காக முழு பரலோகமும் ஆரவாரத்திலே கொந்தளிக்க வேண்டுமல்லவா! ஆமட் அலி ஹய்லி (1953-2011) என்பவர் ஆரம்பம் முதல் முடிவு வரையிலே சமாதான பிரபுவாகிய இயேசு கிறிஸ்துவுடன் விசுவாசத்திலே நடந்த ஒரு மனுஷனாவார். ஆபிரிக்காவின் ஊதுகுழல் என்றழைக்கப்படும் யுத்தத்தாலே கிழிக்கப்பட்ட பாலைவன நாட்டிலே அவனது வாழ்க்கை சரித்திரமானது ஒரு உறுதி மிக்க சாட்சியாக உள்ளதோடு கிறிஸ்துவின் சுகமளிக்கும் சாட்சியாகவும் காணப்படுகிறது. தைரியமாக சத்தியத்தை பிடித்து பொது இடத்திலே இயேசுவுடன் நான் நடக்க போகிறேன். அவன் அறிக்கை செய்த வருடங்களாக



வேதவியல் மற்றும் சமாதான படிப்புகளை அமெரிக்காவிலே அவன் கற்றுவிட்டு தான் காயப்பட்ட, இரத்தம் சிந்தின தாய் நாடான சோமாலியாவிற்கு 1980-களின் ஆரம்பத்தில் அவன் திரும்பினான். உடனே அஹமட் உயிர்க்கொல்லியாக அழிக்க எச்சரிப்பு வழங்கும் குழுவினர் மத்தியிலே ஒரு சமாதான தூதுவராக செயற்பட்டான். 1992 அம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு ஏவுகணை தாக்கி மொகாதிசுவின் ஒரு கால் இழக்க வேண்டி ஏற்பட்டது. மாத்திரமல்லாது ஆண்டவர் அற்புதமாக அவனை பாதுகாத்தார். அதன் பின்பு வந்த இருபது ஆண்டுகளாக ஆமட் புற்றுநோயுடன் போராடுகிற தன்னுடைய முடிவு எல்லைக்குள் வந்து அதனை நோக்கி சென்று கொண்டிருக்கிறவர்கள் மத்தியிலே ஒரு சமாதானத்தை உண்டு பண்ணுகிறவராக காணப்பட்டார். அவரது கடைசி வார்த்தைகள் சோமாலியாவின் இருதயம் மற்றும் எல்லா கட்டுகளும் ஒரு நடு மையத்திலுள்ள தடியைப் போன்றது. நாடோடியின் கூடாரத்தினை போன்றது சபை என்று அவர் அறிந்து கொண்டார் "கதையானது மைய தடியாகிய இயேசுவுக்கு மகிமை கொண்டு வருவதாய் காணப்பட வேண்டும் என்பது எனது ஜெபமாகும். அது என்னுடைய வீட்டிலுள்ள சபைக்கு ஒரு தைரியத்தை கொண்டு வரும்".

* From Teatime in Mogadishu: My Journey as a Peace Ambassador in the World of Islam, Herald Press, 2011. www.heraldpress.com. Used with permission.

நாள் 24

சுருக்கம்

ஆகஸ்டு 1
வியாழக்கிழமை

1993

முன்னாள் ஐரோப்பிய ஒன்றியமான, மாஸ்ட்ரிக்ட் ட்ரீட்டி என்னும் அமைப்பு ஆரம்பமானது.

{ 35 நாடுகளில் ஷரியா சட்டம் கடுமையாயுள்ளது }

# ஷரியா சட்டம் என்றால் என்ன?



**நாம் வாழ்கிற இந்நவீன உலகத்தை புரிந்துகொள்ளல்.**

ஷரியா என்பது அரசியல், இறையியல். இராணுவம் போன்றவற்றை வளர்ச்சியடைய செய்யும்படியாக மில்லேனியத்திற்கும் (முகம்மதுக்கு பின்பு) அதிகமாக பயன்படுத்தப்பட்ட ஒரு முறையே ஷரியா. மில்லியன் கணக்கிலான இஸ்லாமியருக்கு இது “மார்க்கமாக” உள்ளது. ஷரியா சட்டமூலமானது 35 நாடுகளில் அதிக கடுமையாக கையாளப்படுகிறது. விசேஷமாக மேற்குலகு நாடுகளிலே இஸ்லாமிய குடும்ப விவகாரங்கள் தொடர்பாக அவர்கள் “இரட்டை” முறையை கையாளுகிறார்கள். அநேகமாக பயிற்சி பெற்ற இஸ்லாமியருக்கு ஷரியாவின் பின் உள்ள மத சடங்காச்சாரங்கள் என்ன என்று தெரியாது. (ஜெபம், உபவாசம், தசமபாகம் மற்றும் பல கொடுத்தல்).

**ஷரியாவின் பிரயோகம்.**

ஷரியாவில் இஸ்லாமிய உப சட்டங்களான ஃபிக் (அர்த்தம்- புரிந்துகொள்ளல்) எனும் விடயங்கள் உள்ளடங்கியுள்ளது. அவை இஸ்லாமிய தொழுகை, உறவுகள், உரிமைகள், வணிகம், காணிச்சட்டம், உள்நாட்டு சட்டம், குற்றவாளி சட்டம், முகாமைத்துவம், வரி செலுத்தல், யாப்பு, சர்வதேச உறவுகள், யுத்தங்கள் மற்றும் ஒழுக்கநெறிகளோடு ஏனைய உப கூட்டங்களை உள்ளடக்கியுள்ளது. அது சுருக்கமாக ஜீவனுக்கான முழுமையான மார்க்கமாக உள்ளது. நடைமுறை காரியங்களான உணவுத்திட்ட நியதிகள் மற்றும் வங்கி முறைகள் போன்ற அரசாங்கத்தால் அழைக்கப்படும் கலிபெட் முறையையும் உள்ளடக்கியதாயுள்ளது.

உலகம் முழுவதும் உள்ள மில்லியன் அளவிலான இஸ்லாமியர்கள் இந்த ஷரியாவிலே உள்ள கடினமான விடயங்களை பின்பற்றுவதில்லை (பெரும்பாலும் இதனை அறியாதிருக்கிறார்கள்). எப்படியாயினும் இஸ்லாமியருக்கான சட்ட மற்றும் அரசியல் முறையாக இது காணப்படுகிறதோடு, ஷரியா பூமி மீதெங்கும் வித்தியாசமான வழிகள் மற்றும் முறைகளிலே பயன்படுத்தப்படுகிறது. அதன் பிரதான மூலங்களாக குரான் மற்றும் சுன்னா என்பன காணப்படுகின்றன. சட்ட மூலங்களின் படி, எல்லா இடங்களிலும் உள்ள இஸ்லாமிய எழுத்தாளர்க்கு மொழிபெயர்க்கவும் விவாதிக்கவும் கூடிய விதத்திலே வாசல்களை திறந்துள்ளது. ஒரு புறம் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலே ஷரியா மிகவும் கடினமாக பயன்படுத்தப்படுகிறது. மறுபுறம் ஷரியாவிலுள்ள கடினத்தன்மையை இஸ்லாமிய எழுத்தாளர்கள் நீக்கி எம்முடைய உலகளாவிய உலகத்திலே இதனை கொண்டு நாம் ஜீவிப்பது கடினம் என்கிறார்கள். சில இஸ்லாமிய தலைவர்கள் ஷரியாவின் கடினத்தன்-மையை குறித்து பிரசங்கிப்பதினிமித்தம் இஸ்லாமியர் அதற்கு பயப்படுகிறார்கள் ஆனாலும் அதற்கு அடிமைகளாக வாழ அவர்கள் ஆயத்தமில்லை.

**எவ்வாறு கிறிஸ்தவர்கள் பிரதிகிரியை காண்பிக்க வேண்டும்?**

ஊடகங்களின் அறிக்கையை கொண்டு மாத்திரம் பிரதிகிரியை காண்பிக்காதீர்கள். சில வேளை எமது பிழையான கணக்குகள் மற்றும் புரிந்துணர்வுகளால் இஸ்லாமியரை குறித்து பிழையான எண்ணங்கள் உருவாவதற்கு ஏதுவாகின்றன. இப்பிழையான எண்ணங்கள், பயங்கள், மற்றும் இடையூறான விடயங்களிலிருந்து நாம் மனந்திரும்ப வேண்டியது அவசியமாகும். பரிசுத்த ஆவியானவர் இஸ்லாமியரின் இருதயத்திற்கூடாக மெய்யான கிறிஸ்தவத்தை புரிந்துகொள்வதற்கு வாஞ்சையை ஏற்படுத்துகிறார் என்பதை நாம் புரிந்துகொள்வது அவசியமாகும். ஆண்டவர் இஸ்லாமியர் மத்தியிலே கிறிஸ்தவ சாட்சிகள் மற்றும் நேரடி வெளிப்பாடுகள் மூலமாக கிரியை செய்கிறார். ஆகவே இஸ்லாமியர் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுகொள்ள வேண்டும் என்ற மெய்யான வாஞ்சையான இருதயத்தோடு நாம் உண்மையாக ஜெபம் செய்வோம்.

**நாள் 25** | ஆகஸ்டு 2 வெள்ளிக்கிழமை

சந்திக்கப்படாத

1993 உலக வங்கியின்படியாக இந்தோனேசியா தொழில் ரீதியில் வருவாய் பெற்றுத் தரும் நாடுகளில் மையத்தில் காணப்படுகிறது.

{ இந்தோனேசியாவில் 1999ல் புதிய 7 மாகாணங்கள் உருவானது }

# இந்தோனேசிய மறைவான கலை ஆவணங்கள்

நீங்கள் எப்போதாவது எரிகிற தழல் மீதோ கத்திகளிலோ அல்லது கூர்மையான ஆயுதங்களாலோ தங்கள் மீது தாக்கியும் எவ்வித சேதமும் இல்லாதிருக்கிற மனிதரை பார்த்துள்ளீர்களா? இதனை “டெபஸ்” என்று அழைப்பார்கள். இது ஒரு கலை, அத்துடன் கூட வல்லமையை வெளிப்படுத்தும்படியாக செய்யப்படும் ஒரு திரவிய கலையாம். “டெபஸ்” சில நேரங்களிலே திருமணங்கள் மற்றும் ஏனைய வைபவங்களிலே நடத்தப்படும். யார் தூய்மையாயிருக்கிறார்களோ அவர்களுக்கு மாத்திரமே கடவுள் இந்த வல்லமையை தருகிறார் என்று அவர்கள் நம்புகிறார்கள். மேலும் இந்தோனேசியாவின் பன்டன் பகுதி மனுஷரின் பிரதான தனித்துவமான செயற்பாடாக காணப்படுகிறது. பன்டன் மனிதர்களிடையே இந்த அனுபவமற்றவர்களை கண்டு கொள்வது மிகவும் கடினமான ஒரு விடயமாகும்.

## பெயரிலே உள்ளது என்ன?

பன்டன் என்பதற்கு பல்வேறு அர்த்தங்கள் காணப்படுகின்றன. அது 2000 ஆம் ஆண்டிலே நிர்மாணிக்கப்பட்ட ஏறத்தாழ ஒன்பது மில்லியன் ஜனக்கூட்டத்தினர் வாழ்கிற (ஜாவா தீவின் மேற்கு ஓரத்திலே) இந்தோனேசியாவின் இளம் மாகாணங்களிலே ஒன்றாகும். பன்டன் என்பது 1526 ஆம் ஆண்டுகளிலே இஸ்லாமிய போராளிகள் மந்திர வல்லமை கொண்ட டெமாக்கின் ஜவனிய சுல்தானியின் நினைவாக இந்த பெயர் நிலை நாட்டப்பட்டது. ஜகார்த்தா பிரபல்யமான துறைமுகமாக முன் இதுவே இந்தோனேசியாவின் பிரபல்யமான துறைமுகமாகவும் ஒரு காலத்திலே வாசனை திரவியங்களை விநியோகம் செய்த ஸ்தலமாக காணப்பட்டது. பழைய பன்டனிலே, துறைமுக அடையாளங்கள், வெளிச்சவீடு மற்றும் பழைய பள்ளிவாசலை காணக்கூடியதாயுள்ளது. பன்டன் என்பவர்கள் பன்டான் மாகாணத்திலே இன்னும் சுவிசேஷம் போய் சேராத ஜனத்தினராவார்கள்!

மேலே குறிப்பிடப்பட்ட மாய செயற்பாடுகளையும் அவர்கள் வைராக்கியம் கொண்ட இஸ்லாமியத்தையும் உடையவர்களாக காணப்படுகிறார்கள். அநேக முக்கிய நபர்களை கொண்ட வைராக்கிய குழுக்கள் பன்டன் மத பாடசாலைகளுக்கு வருகிறார்கள். ஒரு சில விசுவாசிகள் பன்டனில் பின்தங்கிய இடத்தில் வாழ்கிறார்கள்.. பன்டன் மாகாண ஜகர்த்தாவின் பிரதான இடங்களில் மெய்யாக அநேக கிறிஸ்தவர்கள் வாழ்கிறார்கள். எவ்வாறாயினும் ஒரு சில விசுவாசிகளும் மற்றும் சபைகளுமே பன்டனிலுள்ள சுவிசேஷம் அறிவிக்கப்படாத மக்களை அடைய முயற்சிக்கிறார், அண்மை காலத்திலே அதில் ஒரு வளர்ச்சியை நாம் காணக்கூடியதாயுள்ளது. கல்வி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கையினூடாக புதிய வாசல்கள் திறக்கப்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன.

### ஜெப குறிப்புகள்

☒ பன்டன் மக்கள் மாயை மற்றும் மத ரீதியான கட்டுகளிலிருந்து விலகி சுவிசேஷத்திற்கு தங்களை திறக்க வேண்டும் என்று ஜெபம் செய்வோம். (யோவான் 8:32 சத்தியத்தை அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.)

☒ இந்தோனேசியாவிலுள்ள விசுவாசிகள் பன்டன் மக்களை நோக்கி அன்புடன் பார்க்க வேண்டும் என்றும், முழுமையாக அவர்களுக்கு ஊழியஞ்செய்ய வேண்டும் என்றும் ஜெபம் செய்வோம்.

☒ பன்டன் மக்கள் மத்தியிலே விசேஷமாக வாழ, ஊழியஞ்செய்ய மற்றும் சாட்சியாக அழைக்கப்பட்டவர்களுக்காக ஜெபிப்போம். (லூக்கா 10:2 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம், ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.)

Debus is an art, but also a martial art, a demonstration of power. “Debus” rites are sometimes performed at weddings or other celebrations. It is believed that God will only grant such powers to those who are pure.

நாள் 26 | ஆகஸ்டு 3 சனிக்கிழமை | 1993

வெளிப்பாடுகள்

பலஸ்தீன விடுதலை இயக்கமானது ஒரு தீவிரவாத இயக்கமல்ல என்று இஸ்ரவேல் அறிந்துகொண்டது.

{ இவ்விரவில் மேசியா இயேசுவை பலர் அறிவர் }

# மறுபடி வருடத்தில் ஒரு காலம் லெலட் அல் காதர் - “இரவின் வல்லமை”

இதற்காக ஏற்கனவே ஜெபம் செயயும்படியாக நாங்கள் உங்களிடம் கேட்டுள்ளோம். இதனை நாம் ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து வலியுறுத்த விரும்புகிறோம். இது பிரதானமானது! மற்றும் இது மாற்றத்தை ஏற்படுத்துகிறது! ஆகவே நாம் கரம் கோர்த்து “இந்த இரவு வல்லமை” குறித்து ஜெபிக்க போகிறோம்.

இந்த காலத்திலே அநேக இஸ்லாமியர் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை அழைப்பார்கள். சிலர் தூதர்கள் வந்து விசேட வேண்டுதல்களை அனுமதிக்கும் படியாக எதிர்பார்ப்பார்கள். வேறு சிலர் தூதர்கள் வருகிற காலத்தை குறித்து அறிக்கை செய்யும்படியாக எதிர்பார்ப்பார்கள். (இந்த “இரவு கட்டளையிடும் இரவு” என்று சிலர் கருதுகிறார்கள்.) இந்த இரவிலே ஜெபம் செய்த பின்பு தாங்கள் கர்ப்பந்தரிக்க முடியும் என்று நினைக்கிறார்கள். ஆண்கள் சுகம் மற்றும் ஆவிக்குரிய வல்லமையை எதிர்பார்ப்பார்கள். ஆனாலும் மிகவும் பிரதானமாக, அநேக இஸ்லாமியர் கடவுளிட மிருந்து ஒரு உதவியையும் அவரிடமிருந்து ஒரு தொடுகையையும் எதிர்பார்க்கிறார்கள்.



கடந்த வருடங்களில் நாம் அனேக வல்லமையுள்ள சாட்சிகளை கேட்டுள்ளோம் அதாவது இஸ்லாமியர் மேசியாவை கண்டு இயேசுவை அந்த இரவிலே சந்தித்துள்ளார்கள் என்பதாக அறிந்துள்ளோம். சிலருக்கு தரிசனம் அல்லது ஒரு சொப்பனம் மூலமாக அது ஏற்பட்டது, ஆனாலும் அநேகருக்கு முதன் முறையாக ஒரு நண்பன் அல்லது கிறிஸ்தவ நிகழ்ச்சியினூடாக நற்செய்திக்கு செவிகொடுக்கத் தக்க சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. யாவரும் சேர்ந்து ஆவிக்குரிய சம்பூரணத்தன்மை மற்றும் ஒருமைத்தன்மையை தேடுகிற இஸ்லாமிய -ருக்காகக சேர்ந்து ஜெபம் செய்வோம்.

குறிப்பு: அனேக இஸ்லாமியருக்கு வல்லமையின் இரவு என்பது ரமதான மாதத்திலே கடைசி பத்து நாட்களிலே நடைபெறுகிறது. அனேக மதகுருமார் அது 27வது நாளிலே நடைபெறுகிறது என்று நம்புகிறார்கள். ஒவ்வொரு நாளும் சூரிய அஸ்தமனத்துடன் ஆரம்பமாகிறது, ஆதலால் இந்த இரவு 27வது நாளின் ஆரம்பமாகும். குர்ஆனின் 97 ஆவது அதிகாரத்தின் படியாக முகம்மது குரானைப்பற்றிய வெளிப்பாட்டை இந்த இரவிலே பெற்றதாக கூறப்படுகிறது. இந்த இரவிலே எறெடுக்கப்படும் விண்ணப்பங்கள் விசேஷமாக கவனிக்கப்படும் என்று இஸ்லாமியர் நினைக்கிறார்கள். சிலர் இந்த இரவிலே ஏறெடுக்கப்படும் ஜெபமானது தினந்தோறும் பண்ணும் ஜெபத்தை விட வித்தியாசமானது என்பதாக கருதுகிறார்கள்.

## ஜெப குறிப்புகள்

- ஆண்டவரே மெய்யாக உங்களுடைய உதவியை நாடுகிறவர்களுக்காக ஜெபிக்கிறேன். அவர்களுக்கு தேவையான உதவியை நீர் மேசியாவாகிய இயேசுவினூடாக கிடைக்கும் படியாக செய்வீராக (சங்கீதம் 34:18, சகரியா 9:9)
- இஸ்லாமியர் மத்தியிலே ஊழியஞ் செய்கிறவர்களுக்கு நற்செய்தியை கூறத்தக்கதான விசேட சந்தர்ப்பங்கள் கிடைக்கும்படியாக ஜெபம் செய்வோம் ஆண்டவரே இரட்சிக்க கூடாதபடிக்கு உம்முடைய கை குறுகி போகவில்லை மற்றும் கேட்க முடியாதபடிக்கு உமது செவி குறைந்து போகவில்லை. உம்முடைய கரத்தை நீட்டி பாவத்தையும் உமது இரட்சிப்பையும் வெளிப்படுத்துவீராக (ஏசாயா 59:1, ஏசாயா 52:10)
- இஸ்லாமியரை வஞ்சனைக்குள் வழிநடத்தக்கூடிய அந்தகார வல்லமைகளுக்கு விரோதமாக ஜெபம் செய்வோம் (எபேசியர் 6:12, சங்கீதம் 44:4-7)
- வல்லமையின் இரவு தொடர்பான பின்னணி விபரங்களை அறிந்துகொள்ள எமது சர்வதேச இணையத்தளமான www.30days.net இணை அழைக்கவும்.

# நாள் 27

**இந்தியா**

ஆகஸ்டு 4
ஞாயிற்றுகிழமை

1993 இந்தியாவின் பம்பாயில் (மும்பை) 260 பேர் மரித்தனர். முஸ்லிம் பாதாள குழுவினரால் தொடர் குண்டுகள் வைக்கப்பட்டது.

**ஆறு மில்லியன் வேதாகமங்கள் 2012ல் அச்சிடப்பட்டுள்ளன**

# இளவரசி வேலைக்காரியானாள்: கலக வன்முறைகள்

டெக்கானி என்று சொல்லப்படும் இஸ்லாமியர் 14 ஆம் நூற்றாண்டிலிருந்து டெக்கன் சமவெளியை ஆளுகை செய்து வருகிறார்கள். டெக்கன் அரசாங்கம் (ஹைதராபாத்) இந்திய அரசாங்கம் இஸ்லாமிய ஆளுகையிலே 1948 ஆம் ஆண்டு (நிஸாம் ராஜவம்சம்) போய் சேரும் வரையிலே அது ஒரு இளவரச மாநிலமாக இரண்டு நூற்றாண்டுகளாக காணப்பட்டது. டெக்கானி என்பவர்கள் ஆளுனர்கள், அரச அதிகாரிகள் மற்றும் பணக்கார நில உரிமையாளர்கள், கடை உரிமையாளர்கள், தச்சர்கள், வாகன ஓட்டுனர்கள் போன்றோரிலிருந்து வந்தவர்களா வார்கள்.

அதிகளவு டெக்கானி இஸ்லாமியர் (ஏறத்தாழ 2.5 மில்லியன்) ஆந்திர பிரதேசத்தின் தலைந-கரான தொழிற்சார் நகரமான ஹைதராபாத்திலே காணக்கூடியதாயுள்ளது. அதிலே ஏறத்தாழ 95% சுன்னி இஸ்லாமியரும் 5% ஷியா முஸ்லிம்களுமாவார்கள் ஷ.ஃபி நம்பிக்கை அவர்களை அதிகளவு தாக்கத்திற்கு உட்படுத்தியுள்ளது.

**குறைந்தளவு சுவிசேஷம் சென்ற பாரிய குழுவினர்**

உலகத்திலே பாரிய குழுக்களிலே இன்னும் சுவிசேஷம் போய் சேராத ஒரு குழுவினராக டெக்கானி இஸ்லாமியர் காணப்படுகிறார்கள். முன்னாள் பணக்காரராக, கனத்திற்கு ரியவர்களாக, அதிகாரமுள்ளவர்களாக காணப்பட்ட டெக்கானி இஸ்லாமியர் தற்போது வறுமையிலும் எவ்வித நம்பிக்கையுமற்றவர்களாக காணப்படுகிறார்கள். அவர்க ளுக்கு ஒரு தைரியமும் எதிர்பார்ப்பும் அவசியம் அது சுவிசேஷத்தினை குறித்து சரியான புரிந்தணர்வுள்ளவர்க-ளாலே மாத்திரமே பெற்றுகொள்ள முடியும். அவர்களுக்கு உங்களது ஜெபம் அவசியம்.

கடந்த இரண்டு சகாப்தங்களில் ஒரு சில மிஷனரி ஊழியங்களினிமித்தம் டெக்கானி மக்கள் மத்தியிலே சில விசுவாசிகள் காணப்படுகிறார்கள். எவ்வாறாயினும் அவ்வேளையான-து அமைதியாக நடைபெறுகிறது. இந்த கடமையானது இந்தியாவிலு ள்ள சபைகள் தரிசனத்தை பிடித்து இந்த குழு மக்களை போய் சேர வேண்டும் என்ற எண்ணம் உருவா கும் வரையில் அவ்வாறே காணப்படும்.



## ஜெப குறிப்புகள்

- இஸ்லாமியர் பரிசுத்த வாக்கியத்தை விசுவாசிக்கிறார்கள். ஆகவே வேதாகமம் அதிகளவு விநியோகம் செய்யப்பட வேண்டும் என்று ஜெபம் செய்வோம். ஆண்டவரின் வார்த்தைக்கு மாத்திரமே அவர்களுக்கு எதிர்பார்ப்பை கொடுக்க முடியும். (யோவான் 1:14 அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்: அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறான-வருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.)
- ஆண்டவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட பங்களிப்பிற்காக ஜெபம் செய்வோம், அதனூடாக அவர்கள் சொப்பனம் மற்றும் தரிசனங்களினூடாக இயேசு கிறிஸ்துவே வழி, சத்தியம் மற்றும் ஜீவன் என்பதை அறிந்துகொள்வார்கள் (யோவான் 14:6)
- இந்த மக்களை குறித்த ஒரு சுமை மற்றும் தரிசனத்தை உடையதாய் காணப்பட வேண்டும் என்று ஜெபம் செய்வோம், இந்த பணியை விரிவாக்க இன்னும் அதிகளவு ஜெபமும் ஊழியரும் வளரும்படியாக ஜெபம் செய்வோம் (ரோமர் 10:14).
- இந்த மக்களை போய் அடைவதை தடை செய்ய முயற்சி செய்கிற இஸ்லாமிய அடிப்படை வாதிகள் குழுவினருக்காக விசேஷமாக ஜெபம் செய்வோம் (மத்தேயு 5:44)

# நாள் 28

**ஆபிரிக்காவில்**

ஆகஸ்டு 5

திங்கட்கிழமை

1993

சாஹேலிற்கு கிடைக்கும் மழைவீழ்ச்சி மிக வரட்சியான பகுதிகளுக்கு செழிப்பு கொடுத்தது.

**100 கிறிஸ்தவரே 2 மில்லியன் சொனி கேயரில் உள்ளனர்**



# சொனிகே மக்களுக்கு நற்செய்தி

சொனின்கே மக்கள் சாஹேலின் மேற்கு பகுதியிலே வாழ்கிறார்கள், அது சஹாரா பாலைவனத்தின் தென் பகுதியிலே ஆபிரிக்காவிற்கு அமைவாக காணப்படும் ஒரு வரண்ட பகுதியாகும். மதிய வேளையிலே அதன் வெப்பநிலையானது வழமைக்கு மாறாக 45 பாகை செல்சியஸாக (113 ∴பரடைன்) காணப்படுகிறது. இந்த கடினமான காலநிலையை கருத்திற்கொண்டு அவர்கள் நிலத்தை பண்படுத்தல் மற்றும் கால்நடைகளை வளர்த்தல் போன்ற காரியங்களிலே ஈடுபடுகின்றார்கள்.

சொனின்கே மக்கள் பொதுவாக நீண்ட குடும்பமாக வாழ்வதோடு அவர்கள் களிமண் அல்லது கற்களினாலே கட்டப்பட்ட வீடுகளிலே வசிக்கிறார்கள். ஆண்களிலே பெரும்பாலானோர் தங்கள் குடும்பத்தை விட்டு நகரங்கள் மற்றும் நகர் புறங்களிலே தொழில் தேட செல்வதோடு, பெரும்பாலும் வெளிநாடுகளுக்கு சென்றுவிடுவார்கள். இதனிமித்தம் சொனின்கே நாட்டின் பெரும்பாலான குடிகள் பரிஸ் மற்றும் நியுயோர்க் நாடுகளிலே உள்ளது. அவர்கள் மேற்கு ஆபிரிக்க சமூகத்தினருடன் நெருக்கமான உறவிலே காணப்படுவதோடு அவர்களின் வருமானத்தின் பெரும் பகுதியை தங்களது குடும்பங்களின் நடாத்துதலுக் காக அனுப்பி வைக்கிறார்கள்.

சொனின்கே மக்களின் அடையாளத்திற்கு அடிப்படையாக இஸ்லாம் காணப்படுவதோடு அந் நாட்டு குடிகளாக அவர்கள் அப்பெருமையை பெற்றுகொள்கிறார்கள். நாளுக்கு ஐந்து தடவை தொழுகை முறையை கடைபிடிக்கிறார்கள். சொனின்கேயின் கலாச்சா ரத்திலே வெட்கம் மற்றும் சமுதாயத்தின் மீது தாக்கம் என்பன பாரிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

**வேலை**

பல்வேறு நாடுகளிலே காணப்படும் சொனின்கே மக்களை போய் சேருவதற்காக பல்வேறுபட்ட நாடுகளிலிருந்து ஊழியர்கள் காணப்படுகிறார்கள். இரண்டு மில்லியன் சனத்தொகையினர் மத்தியிலே ஏறத்தாழ 100 பேரளவில் கிறிஸ்தவர்களாக அடையாளங் காணப்பட்டுள்ளனர். இந்த எல்லா விசுவாசிகளும் ஏதோ ஒரு வடிவில் உபத்திரவத்திற்கு முகங்கொடுக்கிறார்கள். அவர்கள் தனிமையாக்கப்பட்டவர்களாக ஒருவரோடு ஒருவர் சேர்ந்து நமஸ்கரிக்க குறுகிய சந்தர்ப்பத்தை உடையவர்களாக காணப்படுகிறார்கள்.

சொனின்கே மொழியிலே வேதாகம மொழிபெயர்ப்பு நடவடிக்கை தற்போது நடைபெற்றுகொண்டிருக்கிறது. மொழி பெயர்ப்பாளர்கள் சிதறடிக்கப்பட்டு காணப்படுவதோடு ஸ்கைப் மற்றும் மின்னஞ்சல் ஊடாக ஒருவரோடொருவர் தொடர்பு கொள்கிறார்கள். நல்ல இணையத்தள இணைப்பு அவசியமாயுள்ளதோடு, அதிகளவு உயர் பதவிகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

வேதாகமம் உட்பட அங்கே ஒரு சுவாரஸ்யமான ஒரு விடயம் சொனின்கே மொழியிலே உள்ளது. சொனின்கே மக்களிடைய சிறந்த முறையிலே தொடாபுகொள்ள ஊடக அபிவிருத்தி மற்றும் விருத்தியடைந்த தொழில்நுட்ப முறை அவசியமாயுள்ளது. உதாரணமாக ஒலி நுணுக்குகளை SD memory காா்ட்டிலே போட்டு கையடக்க தொலைபேசிகளிலே போடுவது இது சொனினக்கே மக்களுக்கு அவர்களுக்கு அவசியமான வேளையிலே வார்த்தையை வாசிப்பதற்கு கூடிய ஒரு தகுதியான சந்தர்ப்பத்தை பெற்று கொடுக்கிறது.

**ஜெப குறிப்புகள்**

- கிறிஸ்தவர்களுக்கு வேதாகமம் மற்றும் எழுத்தாக்கங்களை கையிலே பெற்று கொண்டு செயற்படும்படியான சந்தர்ப்பங்களை பெற்றுக்கொள்ளும்படி ஜெபம் செய்யுங்கள். (ஏசாயா 52:7)
- வேதாகம மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஆண்டவர் தங்கள் வேலைகளை செய்ய நல்ல ஞானத்தை கொடுக்கும்படியாக ஜெபம் செய்யுங்கள்.
- சொனின்கே மக்களின் ஆண்டவரின் வார்த்தைக்கு வாஞ்சையுள்ள பசியானது திருப்தியடைய வேண்டுமென்று ஜெபம் செய்யுங்கள். (மத். 5:6)

நாள் 29

தொழிநுட்பம்

ஆகஸ்டு 6

செவ்வாய்க்கிழமை

1993

சான் என்னும் இடத்திலே உலக இணைய மொசைக் உலாவி பிறந்தது.

SMS நடையில் இப்புத்தகம் ஜெர்மனியில் உண்டு

# குறுஞ்செய்தி பெறல்: மொபைல் சந்ததி

எரிக்ஸனின் கையடக்க தொலைபேசி அறிக்கையின்படியாக மத்தியகிழக்கு நாடுகளின் கையடக்க தொலைபேசி பாவனையானது 990 மில்லியன் எண்ணிக்கையை 2012 இலே எட்டியது. உலகத்திலே அதிகளவு கையடக்க தொலைபேசி பாவனையிலே மத்திய கிழக்கு அதிகளவு சதவீதத்தை கொண்ட பகுதியாக காணப்படுகிறது. அதிலே 40 சதவீதத்தினர் சிறந்த தொலைபேசியை பயன்படுத்துகிறார்கள். (1) 58% ஈரானியர்கள் அவர்களின் இணையத்தள ஆராய்ச்சி கூடத்தின் தடைகளை தாண்டியும் ஈரானியர்கள் facebook (முகப்புத்தகம்) போன்றவற்றை பயன்படுத்துகிறார்கள். ("எப்படி இருக்கிறது?" என்ற பொருள்படுத்தப்படும் சிமிகி (Chimigi) என்று ∴பர்சி மொழியிலே அழைக்கப் படுகிறது). சவுதி அரேபியாவிலுள்ள 25 மில்லியன் கையடக்க தொலைபேசி வாடிக்கையாளர்கள், பாரெய்ன் மற்றும் குவைட் நாட்டை சேர்ந்தவர்கள் தற்போது விக்கிபீடியாவை எவ்வித இணையத்தள செலவுகளையும் மேற்கொள்ளாது இலவசமாக பயன்படுத்துகிறார்கள். யோர்தான் அதன் நாட்டில் மற்றைய விடயங்களுக்காக விளம்பரப்படுத்துவதை விட கையடக்க தொலைபேசிக்கு அதிகளவு விளம்பரம் மேற்கொள்ளப்படுறது. வட்ஸ்அப் என்னும் செய்தி பரிமாற்ற சேவையானது ஏறத்தாழ ஒரு நாளுக்கு பத்து பில்லியன் செய்திகளை கொண்டு செல்கிறது தற்போது அரேபிய மொழியிலும் காணப்படுகிறது

மிகவும் ஆச்சரியமான மற்றும் கடினமான உலகத்திலே அவ்வாறாகவே வாழ்க்கை முறையானது காணப்படுகிறது. அது இஸ்ரவேல் இராணுவ நடவடிக்கை குறித்து ஒரு அறிவித்தலை மேற்கொண்டால் அது இஸ்லாமிய மாணவருக்கு ட்டுவீட்டர் மற்றும் சிறந்த தொலைபேசி அமைப்புகள் மூலமாக கொண்டுசெல்லப்படுகிறது, அது எவ்வளவு அதிகமாக உலகமும் உலகம் எங்கும் கையடக்க தொலைபேசி கிரியையும் நடைபெறுகிறது என்பதை காணபிக்கிறது. ஒரு சுவாரஸ்யமான கணக்கெடுப்பானது ஆபிரிக்காவின் இளம் பிள்ளைகள் ஒருபோதும் கணணி கல்வியை பெற்றதில்லை. ஆனாலும் ஒரு கையடக்க தொலைபேசி ஒன்றை பெற்றுகொள்ள செய்யக்கூடிய அனைத்து காரியங்களையும் மேற்கொள்கிறார்கள் அத்தோடு அது பகுதி பகுதியாக உடைந்து செல்லும் வரையிலே பயன்படுத்துகிறார்கள். அநேகமாக தங்களுடைய நண்பர்கள் மத்தியிலே குறுஞ்செய்தி அனுப்புவதற்காக தொலைபேசி பயன்படுத்தப்படுவதோடு இதற்கு முன்பு இராத விதத்திலே தற்போது அவர்கள் தகவல்களை பரிமாற்றி கொள்கிறார்கள். சாதாரணமாக முகப்புத்தக பாவனையாளர்கள் ஒருவரோடு ஒருவர் பேசுவதற்கு தங்களுடைய நண்பர்களினாலே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள லிங்க் வகைகளை பார்க்க நேரம் செலவிடுகிறார்கள்.



இந்த தலைமுறையினரை போய் சேருவதற்காக அநேக கிறிஸ்தவ ஊழியங்கள் முயற்சி செய்தார்கள். இதன் நோக்கமானது இஸ்லாமியருடன் கலந்துரையாடல் ஒன்றை ஆரம்பித்து அதற்கூடாக அவர்களின் தனிப்பட்ட சாட்சிக்கு வழிநடத்தி தேவைகள் எழுப்பப்படும் போது ஜெபம் செய்தல் என்பதாகும். அத்துடன் கூட தொழிநுட்ப பயன்பாடானது தனிப்பட்ட தொடர்பாடலை இடமாற்றம் செய்வதோடு, கற்பிக்கப்பட்ட போதனைகளுக்கு அடையாளமாக காண்பிக்கப்பட்ட விதைகள் விதைக்கப்பட்ட பின்பு கடினமான நிலங்கள் தொலைபேசியின் முயற்சியினாலே உடைக்கப்பட்டு விட்டது, விசேஷமாக சமூக ஊடகத்தினாலே உடைக்கப்பட்டுள்ளது.

## ஜெப குறிப்புகள்

- கிறிஸ்தவர்கள் தொலைபேசியினூடாக இஸ்லாமியருடன் தொடர்பு கொண்டு சுவிசேஷம் என்னும் விதைகளை விதைக்க வேண்டும் என்று ஜெபியுங்கள். இஸ்லாமியரை விசுவாசம் என்னும் விதை, எதிர்பார்ப்பு மற்றும் அன்பு ஆகியவற்றை கொண்டு அடைவதற்கு சாதாரண தொடர்பினை விட நீண்ட நற்புறவு அவசியமாயுள்ளது. உங்களது நிலையை குறித்து ஜெபம் செய்யுங்கள்.

1 arabianbusiness.com 2 thenextweb.com 3 abcnews.go.com

## நாள் 30 ஒய்வுநாள்

ஆகஸ்ட் 7 புதன்கிழமை

1993 ஜுன் 1ல் ஈத். பொஸ்னியாவில் கால்பந்தாட்ட அரங்கில் செர்பியா படைகள் செல் தாக்குதல் நடாத்தி அனேகர் மரித்தும் காயப்பட்டனர்.

780,000 சௌதியர் அல்-அதாவை வெளிநாடுகளில் கழிப்பர்

# ஈத் பண்டிகை இஸ்லாமிய பலிசெலுத்தல்

## இஸ்லாமிய விடுமுறைகள்.

இஸ்லாமியரின் மிகவும் பிரதான விடுமுறையாக ஈத் அல்-அதா அல்லது "பலிகளின் பண்டிகை" காணப்படுகிறது. இந்த விடுமுறை காலத்திலே, உலகமெங்கும் உள்ள இஸ்லாமியர் சிறந்த ஹலால் மிருகத்தை வளர்த்து அதனை இப்ராஹிம் (ஆபிரகாம்) தன்னுடைய குமாரனை பலி செலுத்தியதன் அடையாளமாக ஆண்டவரை நோக்கி செலுத்துவார்கள். இப்பண்டிகையானது ஹஜ் யாத்திரையின் முடிவை அடையாளப்படுத்துகிறது. சில மதிப்பீடுகளின்படியாக, ஏறத்தாழ 100 மில்லியன் மிருகங்கள் இந்த ஈத் காலத்திலே உலகம் எங்கும் உள்ள இஸ்லாமியராலே பலியிடப்படுவதாகவும், இது ஏறத்தாழ ரமதான் நிறைவடைந்து 70வது நாளிலே இடம்பெறுவதாக குறிப்பிடப்படுகிறது. இந்த விடுமறை காலத்திலே இஸ்லாமியரிடம் நீங்கள் என்ன விசுவாசிக்கிறீர்கள் என்று கேட்டால். அதற்கு பதிலாக, அவர்கள் நீங்கள் என்ன நம்புகிறீர்கள் என்று கேட்பார்கள். பலி என்பது இயேசு கிறிஸ்துவின் அடையாளம் என்று உங்களாலே விளக்கப்படுத்த முடியும். ஆண்டவர் தந்த ஆட்டுக்குட்டி இறுதி பலியாக எம்முடைய பாவங்களை நீக்கியதிலிருந்து எமக்கு நித்திய வாழ்வை தந்த இயேசு கிறிஸ்துவை குறிப்பிடுகிறோம் எனலாம்.

### இஸ்லாமியருக்கான ஒரு நற்செய்தி அதாவது உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்த்த தேவ ஆட்டுக்குட்டியானவர் - இயேசு கிறிஸ்து.

### ஜெப குறிப்புகள்

- சம்பிரதாய கடமைகளுக்காக ஜெபியுங்கள். சம்பிரதாய கடமைகள் எம்முடைய சரீரத்தை பரிசுத்தப்படுத்தும் ஆனாலும் எம்முடைய இருதயத்தை பரிசுத்தபடுத்தாது என்பதை நாம் அறிவோம். இயேசு கிறிஸ்துவினாலே மாத்திரம் இருதயத்தை பரிசுத்த படுத்த முடியும். அதனை நாம் மனந்திரும்புதலினூடாகவே நிறைவேற்ற முடியும். பரிசுத்த ஆவியானவர் தேடுகிற இருதயங்கள் கேட்கவும் சரியான மனந்திரும்புதலுக்கு அவர்களை அழைக்க வேண்டும் என்றும் அதற்கு அவர்கள் பிரதிகிரியை காண்பிக்க வேண்டும் என்று ஜெபியுங்கள்.

- இயேசு கிறிஸ்துவின் இரத்தினூடாக நாம் மன்னிப்பு பெற்று இஸ்லாமியர் அவரே பிதாவிடம் செல்லக்கூடிய ஒரே வாசல் என்பதை புரிந்திட வேண்டும் என்று ஜெபிப்பதற்கு தந்த சந்தர்ப்பத்திற்கு நன்றி செலுத்துங்கள். யோவான் 1:29, அப். 10:43 மற்றும் எபிரேயர் 1:3ன்படியாக ஜெபியுங்கள்.

- எபேசியர் 6 இன்படி "எம்முடைய போராட்டங்கள் மாம்சத்திற்கும் இரத்தத்திற்கும் விரோதமாயிராமல்.... ஆவிக்குரிய உலகத்தார் மற்றும் வானமண்டலங்களிலுள்ள சேனைகளுக்கு விரோதமாக உள்ளது" இஸ்லாமியர் பிசாசினாலே உருவாக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய யுத்தம் உள்ளது என்பதை புரிந்துள்ளார்கள். அதினிமித்தமாகவே கல்லெறியும் நாளன்று அவர்கள் சாத்தான் மீது கற்களை எறிகிறார்கள். இயேசு பாவத்தை, சாத்தானை மற்றும் மரணத்தை தோற்கடித்தார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்று ஜெபியுங்கள். அவர்கள் சாத்தான் மீது கல்லெறிவது அர்த்தமற்றது சிலுவையும் உயிர்த்தெழுதலுமே பிசாசை தோற்கடிக்க முடியும் என்பதை அவர்கள் அறியும்படியாக ஜெபியுங்கள். அவர்கள் கிறிஸ்துவை அறிந்து "அரண்களை நிர்மூலமாக்கத்தக்க" (2 கொரிந்தியர் 10:4) வல்லமையுள்ள ஆயுதங்களை தாக்கி வெற்றி பெற வேண்டும் என்று ஜெபியுங்கள்.



இஸ்லாமிய பண்டிகைகளை குறித்த பின்னணியை குறித்த தகவல்கள் எம்முடைய இணையத்தளமான: www.30-days.net/islam ல் பார்க்கவும்.

30 Days International
Pf 1160
35745 Herborn, Germany
pray@30-days.net



# முஸ்லிம் உலகிற்கு

# 30 நாள் ஜெபம்

ஜீலை 9 -ஆகஸ்ட் 7, 2013



© Copyright 2013 ISBN: 978-2-9531836-5-8

30 Days

www.30-days.net/order

Designed and printed by Jonathan Edwards www.jonathanedwardsdesign.com
create@jonathanedwardsdesign.com